# பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான சர்வதேச உடன்படிக்கை (CEDAW)

**ஏக்தா:** (Resource Centre for Women)

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | | **பக்க எண்** |
| முன்னுரை | | |
| அறிமுகம் | | 1 |
| ஆட்சேபங்கள் | | 6 |
| **விதி - 1:** | பெண்களுக்கு எதிரான பாகுபாடு பற்றிய வரையறை | 14 |
| **விதி - 2:** | பாகுபாட்டை ஒழிப்பதற்கான கொள்கை வரையறை. | 17 |
| **விதி - 3:** | அடிப்படை உரிமைகளுக்கான உத்திரவாதம் | 21 |
| **விதி - 4:** | பெண்களுக்கான சிறப்பு சலுகைகள் பாகுபாடுகளாகாது | 23 |
| **விதி - 5:** | பாலின பங்குவார்ப்புக்களின் பின்புலமான கலாச்சார பாரம்பரிய நடைமுறைகளை ஒழிப்பது | 25 |
| **விதி - 6:** | பெண்களை விபசாரத்தில் ஈடுபடுத்துவதைத் தடுப்பது | 29 |
| **விதி - 7:** | அரசியலில், பொதுவாழ்க்கையில் பாகுபாட்டை நீக்குவது | 31 |
| **விதி - 8:** | சர்வதேச அளவில் பிரதிநிதித்துவம் மற்றும் பங்கேற்பு | 34 |
| **விதி - 9:** | தேசிய குடியுரிமை | 36 |
| **விதி - 10:** | கல்வியில் சமஉரிமை | 39 |
| **விதி - 11:** | வேலைவாய்ப்புகளில் சமஉரிமை | 45 |
| **விதி - 12:** | நலவாழ்வு மற்றும் குடும்ப நல திட்டங்களில் சமத்துவம் | 53 |
| **விதி - 13:** | சமூக, பொருளாதார பலன்களில் சமத்துவம் | 58 |
| **விதி - 14:** | ஊரக மகளிரின் பிரச்சனைகளும் பாகுபாடுகளும் | 60 |
| **விதி -15:** | சட்டத்தின் முன்னால் ஆண்களுக்கு நிகரான சமத்துவம் | 65 |
| **விதி - 16:** | திருமணம் மற்றும் குடும்பச் சட்டங்களில் சமத்துவம் | 69 |
| **விதி - 17:** | பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை ஒழிப்பதற்கான குழு | 77 |
| **விதி - 18:** | அறிக்கை அனுப்பும் கடமை | 79 |
| **விதி - 19:** | முதல் விதி – 30 வரை | 80 - 84 |

# முன்னுரை

பெண்களுக்கெதிரான அனைத்து வகையான பாகுபாடுகளை ஒழிப்பதற்கான சர்வ தேச உடன்படிக்கை (CEDAW) 1979ஆம் ஆண்டு டிசம்பர் 18ஆம் தேதி ஐக்கிய நாடுகளின் (United Nations) பொதுச் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 20 நாடுகள் இந்த உடன்படிக்கையை ஏற்புறுதி (Ratification) செய்து கொண்ட பின்னர், இது சர்வ தேச உடன்படிக்கையாக 1981ஆம் ஆண்டு செப்டம்பர் 3ஆம் தேதி அமலுக்கு வந்தது. பேண்கள் உரிமைகளைப் பற்றி முழுமையாக இந்த உடன்படிக்கை கூறுவதால் இது பெண்களுக்கான முழுமையான உடன்படிக்கை (Women's Convention) என்றும் அழைக்கப்படுகிறது. பெண்களின் நிலைமைகளை கண்காணிக்கவும், பெண்கள் உரிமைகளை மேம்படுத்தவும் 1946-ல் ஏற்படுத்தப்பட்ட பெண்களின் நிலையை கண்காணித்து ஆய்வு செய்யும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையத்தின் முப்பது வருட உழைப்பின் விளைவாகத்தான் இந்த உடன்படிக்கை நடைமுறைக்கு வந்தது என்பது கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய அம்சமாகும்.

இந்த உடன்படிக்கையை ஏற்றுக் கொண்ட உறுப்பு நாடுகள் பெண்களுக்கெதிரான அனைத்து வகை பாகுபாடுகளை நீக்குவது குறித்து கொள்கையை உருவாக்குதல் மற்றும் அவற்றை அறவே நீக்குதல் போன்றவற்றில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கையை சமர்பிக்க வேண்டும். இதன் தொடர்ச்சியாக நான்கு வருடத்திற்கு ஒருமுறை இந்த முயற்சியின் விளைவாக ஏற்பட்டுள்ள மாற்றம், சந்திக்கும் சவால்கள் மற்றும் திட்டம் தீட்டியிருக்கும் செயல்பாடுகள் குறித்து அறிகடகை சமர்பிக்க வேண்டும்.

நமது இந்திய அரசம் பெண்களுக்கு எதிரான பாகுபாடுகள் மற்றும் குற்றங்களை களைவதற்காக பல்வேறு சமூக சட்டங்களை உருவாக்கியுள்ளது. இந்த முயற்சியின் ஒரு படியாக சர்வ தேச அளவில் பெண்கள் மீதான வன்முறையை ஒழிக்கும் விதமாக அமைக்கப்பட்ட "சிடா" உடன்படிக்கையை ஆவணமாக 1980-ஆம் ஆண்டு ஜூலை 30 ஆம் தேதி இந்திய அரசு ஏற்று கையெழுத்திட்டுள்ளது. 1993-ஆம் ஆண்டு இந்த உடன்படிக்கையை ஒப்புக்கொண்டு நடைமுறைப்படுத்தியது. பின்னர் வடிவமைத்துள்ள கொள்கைகள் மற்றும் நடைமுறைப்படுத்தியுள்ள செயல்பாடுகள் போன்ற பெண்கள் நிலை குறித்த தனது முதல் அறிக்கையை இந்தியா 2000ஆம் ஆண்டில் சிடாவிற்கு சமர்பித்தது. வரும் 2005ம் ஆண்டில் இந்தியா தனது இரண்டாவது அறிக்கையை சிடா குழுவிற்கு சமர்ப்பிக்க உள்ளது. அதே போல் அரசு சாரா தொண்டு நிறுவனங்களும் இந்தியாவிலுள்ள பெண்கள் நிலை குறித்த மாற்று அறிக்கை ஒன்றை 2005-ல் சிடா குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கான தயாரிப்பு பணியில் முனைப்புடன் ஈடுகட்டுக் கொண்டு வருகின்றன.

சிடா பற்றி அனைத்து தரப்பு மக்களுக்கும் தெரிய வேண்டும் என்கிற முயற்சியின் ஒரு பகுதியாக ஏக்தா நிறுவனம் சிடா உடன்படிக்கையின் தமிழாக்கத்தை ஒரு நூலாக வெளியிடுகின்றது. இதற்கு முன்னர் சென்னையில் உள்ள பெண்கள் கல்வி மேம்பாட்டு மையமானது (CDaWS) மகளிர்

நிலை குறித்த மதிப்பீடு என்ற நூலில் சிடா உடன்படிக்கையின் முக்கிய பிரிவுகளை தமிழாக்கம் செய்துள்ளது. அவர்களுடைய முயற்சியை அங்கிகரிப்பதோடு மேலும் ஒருசில விளக்கத்துடன் சேர்த்து ஒரு நூலாக ஏக்தா வெளியிடுகிறது. இந்நூலை பெண்களின் உரிமையும், மனித உரிமையே என்பதை நிலைநாட்ட செயலாற்றி வரும் பெண்கள் அமைப்புகள் சமூக ஆர்வலர்கள், வழக்கறிஞர்கள், மனித உரிமை அமைப்புகள், பெண்கள் ஆகியோருக்கு பயன்படும் என்ற நம்பிக்கையுடன் ஏக்தா இக்குறுநூலை வெளியிடுகிறது.

# அறிமுகம்

பெண்களுக்கு எதிரான எல்லாவிதப் பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான சர்வதேச உடன்படிக்கை நிறைவேற்றப்படுவதைக் கண்காணிக்க வழிகாட்டும் வகையில் இக்கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது. தனிநபர்கள் மற்றும் பெண்கள், மனித உரிமைகள் தொடர்பாக செயலாற்றிவரும் குழுக்கள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மகளிர் நிலையை மதிப்பிடவும், சர்வதேச உடன்படிக்கையில் கையொப்பமிட்டுள்ள மற்றும் ஒப்புக்கொண்டுள்ள நாடுகள் எந்த அளவுக்கு இவற்றை நிறைவேற்றியுள்ளன என்பதைத் தீர்மானிக்கவும், இக்கையேடு உதவியாக இருக்கவேண்டும் என்பதே இதன் நோக்கம்.

உடன்படிக்கை நிறைவேற்றப்படுவதைக் கண்காணிப்பதில் சுயேச்சையான குழுக்கள், அமைப்புகளுக்கு மிகமுக்கியபங்கு உள்ளது என்ற அடிப்படையில்தான் இக்கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது. உடன்படிக்கையில் கையொப்பமிட்டுள்ள, ஒப்புக்கொண்டுள்ள நாடுகளில் உடன்படிக்கையின் 18வது விதி கேட்டுள்ளபடி இவை நிறைவேற்றப்படுவது குறித்து இக்கையேடு அவ்வப்போது ஆராய்ந்து, பெண்களுக்கு எதிரானப் பாகுபாடுகள் ஒழிப்புக் குழுவுக்கு (Convention on the Elimination of All Forms of DiscriminationAgainst Women - CEDAW “சிடா”) அறிக்கை தருவதில் இந்த நாட்டு அரசுகளுக்கு இக்குழுக்கள் துணையாக இருக்க முடியும். அதிகாரப்பூர்வ அறிக்கைகளின் மீது இக்குழுக்கள் துணையாக இருக்க முடியும். அதிகாரப்பூர்வ அறிக்கைகளின் மீது இக்குழுக்கள் தங்கள் கருத்தைச் சொல்ல, விமர்சிக்க அல்லது தாங்களே சொந்தமாக ஒரு ‘‘நிழல்’’ அறிக்கையைத் தயாரித்து அனுப்ப இயலும். இச்சர்வதேச உடன்படிக்கை நிறைவேற்றப்படுவதைப் பரிசீலிக்க ஏற்படுத்தப்பட்டுள்ள ‘‘சிடா’’வின் உடன்படிக்கை விதிகள் சிறந்த முறையில் நிறைவேற்றப்பட அரசாங்கத்துடன் அவர்கள் நடத்தும் பேச்சுக்களில் ‘‘சிடா’’ தெரிவிக்கும் இறுதிக் கருத்துரை உள்ளிட்டு, இவ்வுடன்படிக்கை விதிகளைக் கண்காணிக்கும் நடவடிக்கைகளைப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

இந்த உடன்படிக்கையை ஒப்புக்கொள்ளாத நாடுகளிலும் கூட இவ்வுடன்படிக்கை விதிகளை வரம்பாகக் கொண்டு இந்நாடுகளில் பெண்களின் உரிமைகள் செழுமைபெற சுயேச்சையான அமைப்புகள் செயலாற்ற முடியும். இந்நாடுகளும் உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ள அரசாங்கத்தைச் சம்மதிக்க வைப்பதிலும், உடன்படிக்கை விதிகளை நிறைவேற்றுவதில் அரசின் சாதனைகளைக் கண்காணிப்பதிலும் இவை தங்களை ஈடுபடுத்திக்கொள்ள இயலும்.

உடன்படிக்கை நிறைவேற்றப்படுவதைக் கண்காணிக்கவும் அறிக்கை தயாரிக்கவும் இக்கையேடு வழிகாட்டியாக விளங்குகிறது. உடன்படிக்கை விதிகள் பற்றி, கருத்துரைப்பதுடன் பெண்களின் சட்டப்பூர்வ மற்றும் யதார்த்த நிலைபற்றி மதிப்பீடு செய்து உடன்படிக்கை நிறைவேற்றம் பற்றிய அறிக்கை தயாரிப்பில் கேட்கப்படவேண்டிய பல்வேறு வினாக்களையும் இக்கையேடு தன்னகத்தே கொண்டுள்ளது. உடன்படிக்கை விதிகள் மற்றும் பொதுவான பரிந்துரைகளில் இருப்பவற்றைப் பற்றி ‘‘சிடா’’ கூறியுள்ள அர்த்தங்களைக் கணக்கில் கொண்டுதான் கருத்துரைப்புகளும் கேள்விகளும் அமைந்துள்ளன.

காமன்வெல்த் செயலகம் மற்றும் சர்வதேச மகளிர் உரிமைகள் செயல்பாட்டு ஆலோசனைக் குழு ஆகியவற்றின் கூட்டு நடவடிக்கையின் பலன்தான் இக்கையேடு. இதைத்தயாரிப்பதற்காக இவ்விரு அமைப்புகளும் உலகின் பல்வேறு பிராந்தியங்களிலும் இருந்து பெண்ணுரிமை நிபுணர்கள், செயல்பாட்டாளர்களின் அனுபவங்கள் மற்றும் நிபுணத்துவத்தை உள்வாங்கி உள்ளன. சர்வதேச மகளிர் உரிமைகள் செயல்பாட்டு அமைப்பின் ஆலோசனைக் குழு உறுப்பினர்களான லண்டன் பல்கலைக்கழகத்தில் கிழக்கு மற்றும் ஆப்பிரிக்க நாடுகள் கல்விப்பள்ளி சட்டத்துறை மூத்த பேராசிரியர் ஜேன் கான்னர்ஸ், ஹாங்காங் பல்கலைக்கழக சட்டத்துறை மூத்தப் பேராசிரியர் ஆன்ட்டு பைர்னஸ் ஆகிய இருவரும்தான் இக்கையேடு தயாரிப்பில் முக்கியப் பங்காற்றியவர்கள். ஆக்ஸ்போர்டில் உள்ள வோல்ப்சன் கல்லூரியைச் சேர்ந்த சலோகா பியானியின் வரைநகல் மற்றும் சர்வதேச மகளிர் உரிமைகளுக்கான செயல்பாட்டு அமைப்பும் காமன்வெல்த் செயலகமும் சேர்ந்து தயாரித்திருந்த முந்தையக் கையேடுகளில் கூறப்பட்டிருந்த கருத்துக்களின் அடிப்படையில் இது வரையப்பட்டுள்ளது.

## உடன்படிக்கையின் பின்னணி

உலக மகளிருக்கான உரிமைகள் பாதுகாக்கப்படவும் முழுமைப்படுத்தப்படவும் பற்பல ஆண்டுகளாக சர்வதேச அளவில் நடந்து வந்த முயற்சிகளின் தொடர்விளைவாக 1979 டிசம்பர் 18-ம் தேதி ஐக்கிய நாடுகள் பொதுமன்றத்தில் இவ்வுடன்படிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. பெண்களின் நிலையில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கான கொள்கைப் பரிந்துரைகளைப் பரிசீலித்து உருவாக்குவதற்காக 1947-ல் ஐக்கிய நாடுகள் அமைப்புகளில் ஒன்றாக அமைக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் மகளிர் நல ஆணையத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் பிரதிபலன்தான் இது.

1949-ல் இருந்து 1959 வரை எண்ணற்ற உடன்படிக்கைகளை இந்த ஆணையம் உருவாக்கியது. பெண்களின் அரசியல் உரிமைகள் குறித்த உடன்படிக்கை மற்றும் பெரும் சிக்கலானதாக ஆணையம் கருதிவந்த திருமணமான மகளிரின் தேசிய குடியுரிமை குறித்த உடன்படிக்கை ஆகியவையும் இவற்றில் அடங்கும். 1967-ல் நடைமுறைக்கு வருவதற்காக, பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை ஒழிப்பதற்கான பிரகடனத்தைத் தயாரிக்கும் பணியில் 1965லேயே ஆணையம் தன்னை ஈடுபடுத்திக்கொண்டது. பெண், ஆண் இருபாலருக்கும் உரிமைகளைத் தெளிவுபடுத்தும் சர்வதேச நிலைகளை ஒரு தனிச்சட்ட ஆவணமாக இப்பிரகடனம் அறிவித்தது.

இப்பிரகடனம் ஒரு தார்மீக, அரசியல் சக்தியாக இருப்பினும் இது உடன்படிக்கையாக இல்லாததால் அரசாங்கங்களைப் பிணைக்கத்தக்கதாக அமையவில்லை. எனவே இப்பிரகடனத்திற்கு அரசுகளை ஒப்புக்கொள்ளவைக்க உடன்படிக்கை ஒன்றினை உருவாக்குவது பற்றி 1972-ல் பெண்கள் நிலை குறித்த ஆணையம் பரிசீலித்தது. இது போன்ற ஓர் உடன்படிக்கையைத் தயாரிக்க, ஐ.நா.சர்வதேச மகளிர் ஆண்டான 1975-ல் நடந்த சர்வதேச மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட உலக செயல்பாட்டுத் திட்டம் ஊக்கமளித்தது. 1975 முதல் 1985 வரையிலான பத்தாண்டுகளை பெண்களுக்கான ஆண்டுகளாகப் பிரகடனம் செய்த ஐக்கிய நாடுகள் பொதுச்சபையிலும் இப்பணி ஊக்கம் பெற்றது. 1980 வாக்கில் நடக்க உள்ள மறுஆய்வு மாநாட்டில் எடுத்துக்கொள்ள வசதியாக 1976-க்குள் ஆணையத்தின் பணிகளை நிறைவு செய்யுமாறு பொதுச்சபை கேட்டுக்கொண்டது.

பெண்களுக்கு எதிரானப் பாகுபாடுகளை ஒழிப்பதற்கான உடன்படிக்கையை 1979-ல் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை ஏற்றுக்கொண்டது. இவ்வுடன்படிக்கையானது வெகுவிரைவிலேயே நடைமுறைக்கு வரும் என நம்பிக்கை வெளியிட்டு இதற்கானத் தீர்மானத்தை நிறைவேற்றிய பொதுச்சபை, கோபன்கேஹனில் எண்பதுகளின் மத்தியில் நடைபெறும் மாநாட்டில் மறு ஆய்வு அறிக்கையை சமர்பிக்குமாறு ஐ.நா.பொதுச் செயலரைக் கேட்டுக் கொண்டது.

அறுபத்து நான்கு நாடுகள் இவ்வுடன்படிக்கையை ஒப்புக்கொண்டு கையொப்பமிட்டன. கோபன்கேஹனில் நடந்த மாநாட்டின் போது மேலும் இருநாடுகள் தத்தம் ஒப்புதலை அளித்தன. இருபதாவது உறுப்பு நாடு இதில் கையொப்பமிட்ட முப்பதாவது நாளில் 1981 செப்டம்பர் 3-ம் தேதி இவ்வுடன்படிக்கை நடைமுறைக்கு வந்தது. இதன்படி, பெண்களுக்குரிய சர்வதேச அளவிலான சட்டப்பூர்வ உரிமைகளை முழுமையாக ஐக்கிய நாடுகள் சபை அட்டவணைப்படுத்தும் நிலை எட்டப்பட்டது.

1996 ஜனவரி 12 வாக்கில் ஐக்கிய நாடுகள் சபை உறுப்பினர்கள் மூன்றில் இருபங்கினர் 151 நாடுகள் உடன்படிக்கையை ஒப்புக்கொண்டதற்கான ஆவணங்களை ஐ.நா. செயலரிடம் ஒப்படைத்ததுடன், அப்போது மேலும் ஆறுநாடுகள் உடன்படிக்கையில் கையொப்பமிட்டன.

## உடன்படிக்கையில் இருப்பவை யாவை

உடன்படிக்கையானது சாராம்சத்தில் பெண்கள் உரிமைகளுக்கான சர்வதேச மசோதா ஆகிறது. பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை ஒழிப்பது மற்றும் ஆண்களுக்கும், பெண்களுக்குமிடையே சம உரிமையை ஏற்படுத்துவது ஆகிய ஐ.நா. சபையின் மையக் கோட்பாடுகளையும் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உறுப்பு அமைப்புகளின் கீழும் பிணைப்பை ஏற்படுத்திக்கொள்வது இதன் முகவுரையில் இடம்பெற்றுள்ளன. எனினும், பெண்களுக்கு எதிரான பாகுபாடுகள் தற்போதும் பரவலாக நிலவிவருவதைச் சுட்டிக்காட்டுவதுடன், இப்போதுள்ள சர்வதேச மனித உரிமைகள் அமைப்பானது பெண்களுக்கான மனித உரிமைகள் பாதுகாப்பை உத்தரவாதம் செய்யத்தக்க பலமிக்கதாக இல்லை என்பதை இது உணர்த்துகிறது. பெண்களுக்கு எதிராகப் பாகுபாடு காட்டுவது, சமஉரிமை, மனித மாண்புக்குரிய மரியாதை ஆகிய கோட்பாடுகளை அத்துமீறுவதாக உள்ளதென்றும் இது கூறுகிறது. மேலும் இப்பாகுபாடானது ஆண்களைப் போல் பெண்களும் தங்கள் நாடுகளில் அரசியல், பொருளாதார, பண்பாட்டு வாழ்க்கையில் பங்கேற்பதற்குத் தடையாகவும் அமைந்து விடுவதுடன் சமுதாயம் மற்றும் குடும்பத்தில் வளத்திற்கு தடங்கலாகவும் மாறிவிடுகிறது என்பதையும் விளக்குகிறது. ஒரு நாடானது நிறைவான முன்னேற்றத்தைப் பெறவும், உலகம் வளம் பெறவும் அமைதி தவழவும் எல்லா துறைகளிலும் ஆண்களுக்குச் சமமாகப் பெண்களும் அதிகபட்ச அளவில் பங்கேற்கவேண்டும், என்பதையும் முகவுரை கூறுகிறது.

முகவுரையை அடுத்து முப்பது செயல்பாட்டு விதிகள் உள்ளன. உடன்படிக்கையில் கையொப்பமிட்டு உள்ள மற்றும் ஒப்புக்கொண்டுள்ள நாடுகள் குறிப்பிட்ட விசேஷக் கடமைகளைச் செய்ய வேண்டிய அளவில் இவை பிணைத்துவிடுகின்றன. உடனடியாக இல்லாவிட்டாலும் முன்னேற்றமான நிறைவேற்றுதலுக்குரிய பல பிரிவுகள் தேவைப்படுவதாக இருந்தாலும்

இவ்வுடன்படிக்கையானது பெண்களுக்கு எதிரான பாகுபாட்டை ஒழிப்பது மற்றும் முழுமையாகத் தடுப்பதை நோக்கி முன்னேற்றமான படிக்கல்லாக சந்தேகமின்றி விளங்குகிறது.

உடன்படிக்கையின் முதலாவது விதியானது பெண்களுக்கெதிரான பாகுபாட்டை வரையறுக்கிறது. ஆண்களைப் போன்றே பெண்களுக்கும் அவர்களது மனித உரிமைகள், வாழ்வின் எல்லா அம்சங்களிலும் அடிப்படைச் சுதந்திரம் ஆகியவற்றைப் பால்வேறுபாடின்றி கிடைப்பதில் தடையாக உள்ள எந்தவொரு வேறுபாடு, விலக்கிவைத்தல் அல்லது கட்டுப்பாட்டை இது உள்ளடக்கி உள்ளது. அனைத்து குடிமை, அரசியல், பொருளாதாரம், சமூக மற்றும் பண்பாட்டு உரிமைகளை அனுபவிப்பதிலும், செயல்படுவதிலும் நிலவும் பாகுபாட்டை ஒழிப்பதை இவ்வுடன்படிக்கையானது அரசுகளுக்கு கட்டாயமாக்குகிறது. பொது வாழ்வில் மட்டுமின்றி குடும்ப வாழ்க்கை உள்ளிட்ட தனிப்பட்ட வாழ்விலும் கூட இப்பாகுபாட்டை ஒழிப்பதில் அரசுகள் ஈடுபட வைப்பதிலும் இவ்வுடன்படிக்கை செயலாற்றுவது குறிப்பிடத்தக்கது. பெண்களுக்குக் குறிப்பிட்ட வகையில் பாகுபாடு நிலவும் இடங்களையும் அவற்றை ஒழிப்பதற்கான வழிமுறைகளையும் பதினாறு முக்கிய விதிகள் அடையாளங்காட்டுகின்றன. ஆண் பெண் சமத்துவத்தை எட்டக்கூடிய வகையில் இருக்கும் எந்த ஒரு நாட்டின் அல்லது சர்வதேச விதிகளைப் பாதிக்கும் அளவில் இந்த உடன்படிக்கையில் விதிகள் அமையாது என்பதை 23வது விதி உறுதிப்படுத்துவதுடன், உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ளவற்றை முழுமையாக நிறைவேற்றுவதற்காக தேசிய அளவில் எல்லா நடவடிக்கைகளையும் அரசுகள் மேற்கொள்ளவும் 24-வது விதியானது வகைசெய்கிறது.

உடன்படிக்கையின் முதல் பகுதியில் (1 - 6 விதிகள்) பெண்களின் முன்னேற்றத்திற்குத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பது என அரசுகள் ஒப்புக்கொண்டுள்ளன. சட்ட, நிர்வாக மற்றும் இன்னபிற நடவடிக்கைகளை உள்ளடக்கியதாக இது உள்ளது. சமூக, கலாச்சார செயல்பாடுகளில் உள்ள நடத்தைகளில் மாற்றங்களை ஏற்படுத்துமுகமாக எடுக்கப்படும் தாற்காலிகமான விசேஷ நடவடிக்கைகளும் இதில் அடங்கும். உடன்படிக்கையின் இரண்டாம் பகுதியில் (7 - 9 விதிகள்) அரசியல் மற்றும் பொது வாழ்வில் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அரசுகள் உறுதி பூண்டுள்ளன. ஆண்களைப் போன்றே பெண்களுக்கும் வாக்குரிமை, தேர்தலில் போட்டியிடும் உரிமை, அதிகாரிகளாக, கொள்கை வரையறுப்பாளர்களாக அரசாங்கத்தில் பங்கேற்கச் செய்யவும், அரசுசாரா நிறுவனங்களில் பங்கெடுத்துக்கொள்ளவும் சர்வதேச அளவில் தங்கள் நாட்டுப் பிரதிநிதிகளாகக் கலந்து கொள்ளவும் உரிமைகள் வழங்க அவை ஒப்புக்கொண்டுள்ளன. பெண்களுக்கு சம தேசிய குடியுரிமை பெறவும், இதில் சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மூன்றாவது பகுதியில் (10-14 விதிகள்), கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதாரம், பொருளாதார, அரசியல் மற்றும் கலாச்சார வாழ்க்கையில் உள்ள பாகுபாடுகளை ஒழிப்பதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளையும் எடுப்பதற்கான உறுதியை நாடுகள் அளித்துள்ளன. ஊரக (Rural) மகளிர் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைக் கையாளுவதில் விசேஷ கவனம் செலுத்தி இருப்பதுடன், ஊரக மேம்பாட்டில் ஆண்களைப் போன்றே பெண்களும் பங்குபணி ஆற்றிப் பலனடைவதற்கான முக்கியத்துவத்தையும் நாடுகள் வலியுறுத்தி இருப்பது குறிப்பிடத்தக்கது. சட்டத்தின் முன்னால் ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் உரிமை பெற்று விளங்கவும், சட்ட உரிமைகளைச் செயல்படுத்தவும் திருமணம் மற்றும் குடும்பச் சட்டங்களில் சம உரிமை வழங்கவும் உடன்படிக்கையின் நான்காவது பகுதியில் நாடுகள் சம்மதித்துள்ளன.

# ஆட்சேபங்கள்

உடன்படிக்கையை ஏற்று, கையொப்பமிட்டுள்ள நாடுகள் இவ்வுடன்படிக்கையில் ஒரு பகுதியை அல்லது சில பகுதிகளை ஆட்சேபித்தால், அவற்றை ஏற்றுக்கொள்ள மறுக்க நாடுகளுக்கு உடன்படிக்கையின் 28-வது விதி அனுமதிக்கிறது. ஆனால் உடன்படிக்கையின் நோக்கங்களுடன் இணக்கமாக இல்லாமல் உள்ள எந்த ஆட்சேபத்தையும் 28(2)வது விதி தடுத்துவிடுகிறது. மனித உரிமைகள் தொடர்பாக ஏற்படுத்தப்பட்டுள்ள வேறு எந்த உடன்படிக்கைக்கும் வராத அளவுக்கு இந்த உடன்படிக்கைக்கு அதிக ஆட்சேபங்கள் அரசுகளிடம் இருந்து வந்தன. இந்த ஆட்சேபங்களில் சில சாராம்சத்தில் நடைமுறை சம்பந்தப்பட்டதாகவோ அல்லது உடன்படிக்கையின் நோக்கத்திற்குத் தொடர்பற்றதாகவோ இருந்தன. இந்த ஆட்சேபங்களில் சில உண்மையானதாகவும், வேறு சில உடன்படிக்கையின் நோக்கங்களுடன் முரண்படுவதாகவும் காணப்பட்டன. இதனால் இவை வாழ்க்கையின் அனைத்து மட்டங்களிலும் அனுபவிக்கும் சட்டப்பூர்வ உரிமைகளைப் பாதிப்பதாக உள்ளன. உடன்படிக்கையின் மிக முக்கியமான 2-வது விதிக்குதான் மிகச்சிக்கலான ஆட்சேபங்கள் கிளம்பின. மற்ற சில ஆட்சேபங்கள் குடும்பச் சட்டம், குடியுரிமை, சட்டப்பூர்வ உரிமைகள் போன்ற, பெண்களுக்கு எதிரானப் பாகுபாட்டை ஒழிப்பதற்கான அடிப்படை விஷயங்கள் தொடர்பானவை.

உடன்படிக்கையை விளங்கிக் கொள்வதில் நாடுகளிடையே ஏற்படும் தகராறுகளை சர்வதேச நீதிமன்றத்தில் முறையிட வகை செய்யும் 29-வது விதியைத் தவிர வேறு எதிலும் பொருத்தமற்ற ஆட்சேபம் தெரிவித்து மறுதலிக்கும் போக்கை உடன்படிக்கை உள்ளடக்கவில்லை. இதுவரையிலும் எந்தவொரு ஆட்சேபத்தையும் நியாயப்படுத்த 29-வது விதியை எந்த அரசும் பயன்படுத்தவில்லை. இந்த 29-வது விதியே கூட பல நாடுகளுக்கு ஆட்சேபகரமானதாக இருந்தது. அதுமட்டுமின்றி உடன்படிக்கையில் எழுப்பப்பட்ட ஆட்சேபங்கள் குறித்தும் நாடுகளிடையே முரண்பாடுகள் தோன்றின.

உடன்படிக்கையில் ஆட்சேபங்கள் தெரிவிப்பதுபற்றி "சிடா" எப்போதுமே கவலைக்குறியதாகக் கருதுவதுடன், தனது 4 மற்றும் 20வது பொதுப்பரிந்துரைகளில் இது குறித்து வற்புறுத்தியும், ஐக்கிய நாடுகள் சபையின் மாநாடுகளில் இது பற்றி குறிப்பிட்டும் வந்தது. மேலும், ஆட்சேபகரமான பிரிவுகளை அரசுகள் நடைமுறைப்படுத்தாவிட்டால் இதனால் உடன் படிக்கையின் நோக்கங்களுக்கு எதிராக அமைந்துவிடாமல் பார்த்துக் கொள்ளுமாறும், காலப்போக்கில் அவற்றைக் கைவிடுமாறும் உறுப்பு நாடுகளிடம் வற்புறுத்தவும் செய்கிறது. உடன்படிக்கை நிறைவேற்றம் பற்றிய அறிக்கையைச் சமர்ப்பிக்கும் போதெல்லாம் இந்நாடுகளிடம் "சிடா" தொடர்ந்து இதுகுறித்துக் கேள்விகளை எழுப்பவும் தவறுவதில்லை. ஆட்சேபத்துடன் உள்ள நாடுகள் தங்கள் முதல் அறிக்கையிலும், பிறகு அடுத்தடுத்த அறிக்கைகளிலும் குறிப்பாக இந்த ஆட்சேபங்கள் பற்றியும் குறிப்பிடுவது அவசியம் என்பதையும் வலியுறுத்தும் வகையில் அறிக்கை தயாரிப்பிற்கான விதிமுறைகளில் தனது பதிமூன்றாவது மாநாட்டின்போது "சிடா" திருத்தம் செய்தது. ஆட்சேபம் எழுப்பியுள்ள நாடுகளுக்கு தனது கவலையைத் தெரிவித்துக் கடிதம் எழுதுமாறு ஐ.நா. பொதுச்செயலரைக் கேட்டுக் கொண்ட "சிடா" இந்த ஆட்சேபங்களை விலக்கிக்கொள்ளுமாறு ஆலோசனை கூறும்படி இந்நாடுகளுக்கு ஐ.நா. ஆலோசனைக் குழுக்களை அனுப்பிவைக்க வேண்டுமென்றும் பரிந்துரைத்தது.

உடன்படிக்கையில் தெரிவிக்கப்படும் ஆட்சேபங்கள் உலகுதழுவிய மனித உரிமைகளைப் பாதிப்பதாக உள்ளன. உடன்படிக்கையின் மேன்மைக்குக் கடும் சவால் விடுப்பதாகவும், நோக்கங்களை எட்டுவதில் தடை ஏற்படுத்துவதாகவும் உள்ளன. எனினும், ஆட்சேபம் தெரிவித்துள்ள நாடுகளைக்கூட உடன்படிக்கையில் கையொப்பமிட வைத்து, இந்நாடுகளில் பெண்கள் சமஉரிமை படைத்தவர்களாக முன்னேறிக்கொண்டு இருக்கிறார்களா எனத் துருவி ஆராயும் பணியையும் உடன்படிக்கையின் கண்காணிப்புப் பிரிவு மேற்கொண்டுள்ளது. ஆட்சேபங்கள் குறித்து ''சிடா'' தொடர்ந்து விழிப்புடன் இருக்கும் அதேநேரத்தில் குடிமை, அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கையைக் கண்காணிக்க இருக்கும் அமைப்பினைப்போல் கண்காணிப்பு அமைப்பு ஒன்றை உருவாக்கி ஆட்சேபங்கள் உடன்படிக்கைக்கு இணக்கமாக உள்ளனவா என்பதைத் தீர்மானிக்கவும் திட்டமிட்டுள்ளது.

## அறிக்கை அனுப்பும் கடமை

உடன்படிக்கையைத் தேசிய அளவில் அரசுகள் நடைமுறைப்படுத்த வைப்பதுடன் இதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் மற்றும் இதில் ஏதேனும் சிரமங்கள் ஏற்பட்டால் அவைபற்றியும் அறிக்கை தயாரித்து அனுப்புவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலரிடம் அளிக்கப்படும் இந்த அறிக்கைகளை ''சிடா''வின் பரிசீலனைக்காக அவர் அனுப்பிவைப்பார். உடன்படிக்கையில் கையொப்பமிட்ட அல்லது ஒப்புக்கொண்ட ஓராண்டு காலத்திற்குள், உடன்படிக்கை விதிகளை நடைமுறைப்படுத்த மேற்கொண்ட சட்டமன்ற, நீதிமன்ற மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் பற்றியும் அதில் சந்தித்தத் தடங்கல்கள் பற்றியும் உறுப்பு நாடுகள் அறிக்கை தயாரித்து அனுப்புவதை உடன்படிக்கையின் 18-வது விதி கட்டாயமாக்குகிறது. இதன் பிறகு நான்காண்டுகளுக்கு ஒரு முறை என்ற வீதத்தில் அல்லது ''சிடா'' கேட்டுக்கொள்ளும் போதெல்லாம் அவை இதுபோன்ற அறிக்கைகளை அனுப்பி வைக்கவும் வேண்டும்.

இப்படி அறிக்கை அனுப்பிவைக்கும் கடமைதான் உடன்படிக்கையின் ஒரே செயல்முறைக் கருவியாக உள்ளது. மற்ற சில மனித உரிமைப் பிரகடனங்களைப் போல் தனிப்பட்ட எந்த ஒரு மனுவின் மீதும் செயல்படத் துவங்க இயலாது. 29-வது பிரிவைத் தவிர வேறு எது குறித்தும் நாடுகள் இடையே எழும் சச்சரவுகளை இந்த உடன்படிக்கையானது அனுமதிப்பதில்லை. 1993-ம் ஆண்டின் வியன்னா பிரகடனம் மற்றும் செயல்பாட்டுக்கான திட்டமும் 1993-ல் நடந்த ஐ.நா.வின் உலக மனித உரிமைகள் மாநாட்டு இறுதி ஆவணம் மனு அளிப்பதற்கான உரிமையை உடன்படிக்கையின் ஒரு மாற்றுத்திட்டமாக ஏற்படுத்துமாறு பரிந்துரை செய்தன.

1995-ல் நடந்த தனது பதினான்காவது அமர்வில் இது குறித்து ஆலோசனை ஒன்றை ''சிடா'' தெரிவித்தது. உடன்படிக்கையில் இணைந்துள்ள நாடுகளைச் சேர்ந்த தனி நபர்கள் அல்லது குழுக்கள் உடன்படிக்கை மீறல் பற்றி ''சிடா''விடம் புகார்மனு தர அனுமதிக்கலாம் என்பதே இத்திட்டம். உடன்படிக்கை விதிகள் மீறப்பட்டு அது குறித்துப் புகார் வந்தால் அந்நாட்டில் விசாரணை நடத்த இதன் மூலம் ''சிடா''விற்கு அதிகாரம் கிடைக்கிறது. 1995-ல் நடத்திய மாநாட்டில் ''சிடா'' வின் யோசனைகளை பற்றிப் பரிசீலித்த பெண்கள் நிலை குறித்த ஆணையம் ''சிடா''வின் யோசனை மீது நாடுகளின் கருத்தறிய ஒப்புக்கொண்டது.

பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை ஒழிப்பதற்கான குழு (“சிடா”) (The Convention on the Elimination of Discrimination Against Women - CEDAW) நாடுகள் அனுப்பிவைக்கும் அறிக்கைகளைப் பரிசீலிப்பதற்காக உடன்படிக்கையின் 17-வது விதியின் கீழ் ஏற்படுத்தப்பட்டது. “ உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ளவற்றுக்கு ஏற்ப இத்துறையில் உயரிய பண்பாடும் நிபுணத்துவமும் மிக்கவர்கள்” ஒவ்வொரு நாட்டின் சார்பிலும் ஒருவர் முன்மொழியப்பட்டு இவர்களில் இரகசிய வாக்கெடுப்பு மூலம் 23 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு இக்குழுவில் (சிடா) உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளனர்.

நான்காண்டுகள் பதவிக்காலம் உள்ள இந்த தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் பூகோள ரீதியில் சம அளவில் பிரதிநிதித்துவம் கிடைப்பதாகவும், வெவ்வேறு நாகரீகம் மற்றும் பிரதான சட்ட அமைப்புகளைப் பிரதிபலிப்பவர்களாகவும் இருக்கின்றனர். உடன்படிக்கை நாடுகளால் முன்மொழியப்பட்டவர்களாக இருந்தாலும் இந்த உறுப்பினர்கள் தங்கள் அளவில் சுய அதிகாரமிக்க நிபுணர்களாகத்தான் செயல்படுவார்களே அல்லாமல், தங்கள் நாட்டின் சார்பானவராகவோ அல்லது பிரதிநிதிகளாகவோ செயல்பட மாட்டார்கள். ஐ.நா.வின் பிற ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகளைக் கண்காணிக்க அமைக்கப்பட்டுள்ளக் குழுக்களில் பெரும்பாலும் ஆண் வழக்குரைஞர்களே இடம் பெற்றிருப்பதுபோல் இல்லாமல், இதில் முழுக்கமுழுக்க பெண்களே பல்வேறு தரப்பினரையும் பிரதிபலிக்கும் வகையில் இடம் பெற்றுள்ளனர்.

உடன்படிக்கை நாடுகள் அனுப்பும் அறிக்கைகளைப் பரிசீலிப்பதே சிடாவின் பெரும் பங்காக இருக்கும் என உடன்படிக்கை கருதுகிறது. அதே சமயம், நாடுகள் அனுப்பிவைக்கும் அறிக்கைகள், தகவல்களைப் பரிசீலித்து இதன் அடிப்படையில் ஆலோசனைகள் கூறவும் பொதுவான பரிந்துரைகளைச் செய்யவும்கூட அதிகாரமிக்கதாக சிடா விளங்குகிறது. ஆலோசனைகளை ஐ.நா.வின் உறுப்பு அமைப்புகளுக்கு அனுப்பிவைக்கும் “சிடா” பொதுவானப் பரிந்துரைகளை உடன்படிக்கை நாடுகளிடம் தெரிவிக்கிறது. இது நாள் வரை 22 பொதுப்பரிந்துரைகளை “சிடா” உருவாக்கி இருக்கிறது. உடன்படிக்கையின்படி, “சிடா” வின் கூட்டங்களுக்கு ஐ.நா.வின் விசேஷ அமைப்புகளை அழைக்கவும் குழுவின் பரிசீலனைக்காக இந்த அமைப்புகள் அறிக்கை தாக்கல் செய்யவும் முடியும். அரசு சாரா நிறுவனங்களிடம் இருந்து தகவல்களை வரவேற்றாலும், அவற்றைச் சேர்த்துக்கொள்ளும் வகையில் திட்டவட்டமான எந்த விதியையும் உடன்படிக்கை கொண்டிருக்கவில்லை.

உடன்படிக்கையின் 18-வது விதிப்படி நாடுகள் அனுப்பிவைக்கும் அறிக்கைகளைப் பரிசீலிக்க ஆண்டுதோறும் இருவாரங்களுக்கு மேற்படாமல் ஓர் அமர்வில் “சிடா” குழுவினர் கூடி விவாதிக்க 20-வது விதி வழிகோலுகிறது. பரிசீலனைக்குரிய அறிக்கைகளின் எண்ணிக்கை அதிகரிப்பால் “சிடா”வின் கூட்ட நாட்களையும் பொதுச்சபை கூடுதலாக்க வேண்டிவந்தது. முதன் முதலாக 1995-ல் ஒரு நாடு அதன் தலைநகரில் “சிடா”வின் கூட்டம் இருவாரங்களையும் கடந்து நடத்த உதவி புரிந்தது. 20-வது விதியில் “சிடா” கூட்ட நாட்கள் பற்றிக் குறிப்பிட்டிருக்கும் வரையறை, “சிடா” விற்கே சிலகாலமாக கவலைக்குறியதாக இருந்துவருகிறது. 1995-ல் நடந்த இதன் பதினான்காவது அமர்வின்போது 22-வது பரிந்துரையாக இது குறித்து சிடா தனது கருத்தைத் தெரிவித்தது. ஐ.நா.வின்வேறு எந்த மனித உரிமை உடன்படிக்கை அமைப்புக்கும் இல்லாத வகையில் இதற்கு

மட்டும் இப்படி மிகக் குறுகிய நாட்களை அமர்விற்காக ஒதுக்கி இருப்பது அப்போது சுட்டிக்காட்டப்பட்டது. எனவே "சிடா" வின் செயல்பாட்டில் பெரும் தடங்கலாக ஆகிவிட்டது. இதைப்போக்கி, உடன்படிக்கை திறம்படச் செயல்பட வேண்டுமென்றால் ஆண்டுதோறும் "சிடா" கூடி, தேவையான அளவுக்கு விவாதிக்கும் வகையில் அனுமதித்து 20-வது விதியைத்திருத்தம் செய்யவேண்டும் என 1995 மே மாதம் நடந்த உடன்படிக்கை நாடுகள் கூட்டத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டது. அவ்வாறு திருத்தம் செய்யப்படும் வரை 1996-ல் 3 வாரகாலம் இரு அமர்வுகளாகக் கூடி விவாதிக்க அனுமதிக்குமாறு ஐ.நா. பொதுச் சபையை "சிடா" கேட்டுக்கொண்டது.

ஆண்டுதோறும் "சிடா" கூடிக்கொள்ளும் வகையில் 20(1)வது பிரிவில் திருத்தம் செய்ய ஒப்புக் கொண்ட உடன்படிக்கை நாடுகள் கூட்டம் மீண்டும் ஒரு முறைகூடி கூட்ட நாட்களை அதிகரிப்பதுபற்றி முடிவு செய்து ஐ.நா பொதுச்சபையின் ஒப்புதலுக்கு அனுப்புவது எனத் தீர்மானித்தது. உடன்படிக்கை நாடுகளின் ஒப்புதலுக்குப்பின் இது நடைமுறைக்கு வரும்.

வழக்கமாக ஜனவரியில் "சிடா" கூடுகிறது. 1993 வரை இதன் செயலகம் வியன்னாவில் இருந்து நியூயார்க்கிற்கு மாற்றப்படுவதுவரை வியன்னா, நியூயார்க் நகரங்களில் ஒன்றுவிட்டு ஒருமுறை என நடந்தது. இப்போது இதன் அமர்வுகள் நியூயார்க்கில் நடக்கின்றன. ஜெனிவாவில் உள்ள மனித உரிமைகள் மையத்தின் சேவைகளை பிற மனித உரிமைகள் உடன்படிக்கை அமைப்புகள் பெறுவதைப் போல் தங்களுக்கும் கிடைக்க வேண்டும், எதிர்காலத்தில் நடக்கவுள்ள அமர்வுகள் ஜெனிவாவில்தான் நடைபெற வேண்டும் என 1995-ல் சிடா கேட்டுக்கொண்டது. ஆனாலும் 1996 அமர்வானது நியூயார்க்கில்தான் நடந்தது. இரண்டாவது மற்றும் அடுத்தடுத்த அறிக்கைகளை அனுப்பிவைத்த நாடுகளுக்கு முன்கூட்டியே அனுப்பி வைக்க வேண்டிய பிரச்சனைகள் மற்றும் கேள்விகளைப் பட்டியலிடும் 5 உறுப்பினர் கொண்ட குழுவானது அமர்வுக்கு முன் கூடுவது 1991 முதல் நடைமுறையில் இருந்துவருகிறது. ஒவ்வொரு வழக்கமான அமர்வின் போதும் இரு பணிக்குழுக்களை "சிடா" ஏற்படுத்துகிறது. "சிடா"வின் பணிகளை விரைவுபடுத்துவது பற்றி முதலாவது குழு பரிசீலித்து ஆலோசனை கூறுகிறது. இரண்டாவது குழுவானது ஆலோசனைகளையும், பொதுப்பரிந்துரைகளையும் தயாரித்து முழுக்குழுவின் பரிசீலனைக்கு அனுப்பிவைக்கிறது.

குறைந்தது 12 உறுப்பினர்களுடன் குழுவின் கூட்டம் பகிரங்கமாக நடைபெற வேண்டுமென "சிடா" வரையறுத்துள்ள விதிகள் கூறுகின்றன. முறைப்படியான எந்த ஒரு முடிவையும் உறுப்பினர்களில் 3-ல் 2 பங்கினர் முன்னிலையில் எடுப்பது அவசியம். நாடுகள் அனுப்பிவைக்கும் அறிக்கையைப் பரிசீலிக்க குழுவின் பொதுவான ஒரு கூட்டத்தில் சம்பந்தப்பட்ட நாட்டின் பிரதிநிதி முன்னிலையில் விவாதித்து, அறிக்கையில் எழும் கேள்விகளுக்கு அவரிடம் விளக்கம்கேட்டுப் பதில் பெறப்படுகிறது. 1995 மத்தியில் 72 முதல் கட்ட அறிக்கைகள், 42 இரண்டாவது அறிக்கைகள், 12 மூன்றாவது மற்றும் 2 நான்காவது அறிக்கைகளை "சிடா" பரிசீலித்து இருந்தது. 1996-ல் நடந்த பதினைந்தாவது அமர்வில் விதிவிலக்கு அடிப்படையில் செர்பியா, போஸ்னியா மற்றும் ஹெர்சகோவினா, க்ரோஷியாவில் இருந்து 3 அறிக்கைகளையும் "சிடா" பெற்றுப் பரிசீலித்தது. மேலும், ருவான்டாவிடம் இருந்து விதிவிலக்கு அறிக்கையையும் பெற்றுப் பரிசீலித்தது.

## அறிக்கையின் நோக்கங்கள்

அறிக்கை தயாரித்து அனுப்புவது என்பது நடைமுறை சம்பந்தப்பட்ட ஒன்றுதான், ஏழு நோக்கங்களின் அடிப்படையில் அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன.

- ☹ தேசிய சட்டமியற்றும் சபை மற்றும் நிர்வாக விதிகள் நடைமுறைகள், செயல்பாடுகள் பற்றி முழுமையாக மீளாய்வு செய்வது.
- ☹ உடன்படிக்கையின் விதிகளுக்கு ஏற்ப நிலவரத்தை ஒவ்வொரு நாடும் ஒழுங்காகக் கண்காணித்து பெண்களுக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகள், அவர்களால் எந்த அளவுக்கு பயன்படுத்தப்படுகிறது என்பதைத் கணிக்க அந்நாடுகளுக்கு உதவுவது.
- ☹ உடன்படிக்கை விதிகளின்படி தெளிவான கொள்கைகளை நாடுகள் வரையறுத்துச் செயல்படுத்த உதவுவது.
- ☹ அரசாங்கத்தின் கொள்கைகளைப் பகிரங்கமாகத் துருவி ஆராய்வது மற்றும் இக்கொள்கைகளை உருவாக்குவது மூலம் மீளாய்வு செய்வதிலும் சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரையும் ஈடுபடுத்த ஊக்குவிப்பது.
- ☹ உடன்படிக்கையில் கேட்டுள்ளபடி கடமைகள் எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை சம்பந்தப்பட்ட நாடும் “சிடா” வும் மதிப்பீடு செய்ய அடிப்படை வினாப்பட்டியலைத் தயாரித்து அளிப்பது.
- ☹ உடன்படிக்கை நோக்கங்களை முன்னேற்றமான முறையில் செயல்படுத்துவதில் ஏற்படும் பிரச்சனைகளையும் பின்னடைவுகளையும் நாடுகள் சிறப்பாகப் புரிந்துணர உதவுவது.
- ☹ “சிடா” வுக்கும் உடன்படிக்கை நாடுகளுக்கும் இடையில் தகவல்களைப் பரிமாறிக்கொள்வது, பிரச்சனைகளைச் சமாளிக்க எடுக்கப்படும் நடவடிக்கைகளைத் தெரிந்துகொண்டு சர்வதேச அளவில் புரிதலுடன் உடன்படிக்கை விதிகளைச் சிறப்பாக நடைமுறைப்படுத்த உதவுவது.

## அறிக்கை தயாரிப்பு:

உடன்படிக்கை நிறைவேற்றம் பற்றி “சிடா”வும் நாடுகளும் முழுமையாக அறிந்துகொள்ள உதவும் வகையில் அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன. வெறும் சட்ட நடவடிக்கைகளை மட்டுமே இவை கொண்டிராமல், இவற்றால் அரசியல், பொருளாதார, சமுதாய நடப்புகளிலும், பொதுவான நிலவரங்களிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் என்னென்ன என்பதையும் குறிப்பிட வேண்டும் என “சிடா” வலியுறுத்துகிறது. அரசியல், சமூக, பொருளாதார, கலாச்சார வாழ்வில் ஆண்களுக்கு சரிநிகராகப் பெண்களும் பங்கேற்க தங்கள் நாடுகளில் உள்ள தடைகள் எவை என்பதையும் இவ்வறிக்கைகள் கொண்டிருப்பதும் அவசியம்.

முதல் கட்ட அறிக்கை மற்றும் அதை அடுத்து அனுப்பப்பட வேண்டிய அறிக்கைகள் பற்றியும் நாடுகளுக்கு வழிகாட்டும் விதிமுறைகளையும் ஆலோசனைகளையும் “சிடா” அறிந்து இருப்பதுடன், அவ்வப்போது இவை குறித்து அறிவுரைகளையும் வழங்குகிறது.

## பொதுப்பரிந்துரைகளும் அறிக்கையும்

அறிக்கைகளின் பரிசீலனையின்போது கரிசனத்திற்குட்பட்ட குறிப்பிட்ட சில உடன்படிக்கை விதிகள் தொடர்பாக ‘‘சிடா’’ இருபத்திரண்டு பொதுப்பரிந்துரைகளை செய்திருக்கிறது. குறிப்பிட்ட சூழ்நிலைகளில் உடன்படிக்கை விதிகளை நடைமுறைப்படுத்துவது பற்றித் தெளிவான வழிகாட்டு விதிமுறைகளையும் ‘‘சிடா’’ தயாரித்து வழங்கி இருக்கிறது. பாலியல் அடிப்படையில் பெண்களுக்கு எதிரான வன்முறை குறித்த 19-வது பொதுப்பரிந்துரையை 1992-லும், திருமணம் மற்றும் குடும்ப உறவுகளில் சமத்துவத்தை வலியுறுத்தும் 21-வது பொதுப்பரிந்துரையை 1994லும் ‘‘சிடா’’ செய்துள்ளது.

## பாலியல் அடிப்படையில் பெண்களுக்கு எதிரான வன்முறை

உடன்படிக்கையின் 6-வது விதியில் கூறப்பட்டிருக்கும் பெண் கடத்தல் மற்றும் விபச்சாரச் சுரண்டல் தவிர பெண்களுக்கு எதிரான வன்முறை குறித்து தெள்ளத்தெளிவாக உடன்படிக்கையில் ஏதும் கூறப்படவில்லை. இதுபோன்ற வன்முறைகள் பாலியல் பாகுபாட்டைத்தான் காட்டுகிறது எனக் கருத்து தெரிவித்த ‘‘சிடா’’ இது உடன்படிக்கையின் கொள்கைகளுக்கு முரணாக உள்ளது என்றும் குறிப்பிடுகிறது. பெண்களுக்கு எதிரான அனைத்துவகை வன்முறைகள் பற்றியும் அறிக்கையில் சேர்க்க வேண்டும் என உறுப்பு நாடுகளை 14-வது பொதுப்பரிந்துரையில் கேட்டுக் கொள்ளப்பட்டது. தனிப்பட்ட வாழ்விலோ அல்லது பொது வாழ்விலோ யாராவது பெண்களிடம் அத்துமீறி நடத்துகொண்டால், அதை பெண்களுக்கு எதிரான வன்முறையாகவே கருத வேண்டும் எனக்கூறும் ‘‘சிடா’’, இதை ஒழிப்பதிலும், இக்குற்றத்தைச் செய்பவர்களைத் தண்டிப்பதிலும், பாதிக்கப்பட்டவர்கள் மறுவாழ்வு பெறுவதிலும் நாடுகள் தங்களை ஈடுபடுத்திக்கொள்வதை கடமையாக்கியும் உள்ளது. பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்புப் பிரகடனத்தை 1993-ல் ஐ.நா. பொதுச்சபை நிறைவேற்றியதில் ‘‘சிடா’’ வின் பங்கு அளப்பரியது.

## அறிக்கைகளை பரிசீலிப்பதில் ‘‘சிடா’’ வுக்குக் கிடைக்கும் தகவல்கள்

உறுப்பு நாடுகள் அனுப்பிவைக்கும் அறிக்கைகள் மற்றம் ‘‘சிடா’’ வின் உறுப்பினர்கள் தங்களுக்குத் தெரியக் கூடிய தகவல்கள் அடிப்படையில் குழுவின் பரிசீலனை அமைகிறது. ஐ.நா.வின் உறுப்பு அமைப்புகளும் தேவையானத் தகவல்களை அளித்து உதவுகின்றன.

சர்வதேச, தேசிய அளவில் செயல்படும் அரசு சாரா நிறுவனங்களும் கூட தகவல்களை அளிக்கின்றன. குறிப்பாக சர்வதேச பெண்கள் உரிமைகளுக்கான செயல்பாட்டு அமைப்பு, மனித உரிமைகளுக்கான சர்வதேச முன்னணி, சர்வதேச பொது மன்னிப்பு ஸ்தாபனம் போன்ற அமைப்புகளிடம் இருந்தும் பெறப்படுகின்றன. ஐப்பான், தாய்லாந்து உள்ளிட்ட சிலநாடுகளில் உள்ள அரசுசாரா நிறுவனங்கள் மாற்று அறிக்கைகளையும் அளித்துள்ளன.

அரசுசாரா நிறுவனங்களிடம் இருந்து தகவல்களைப் பெறுவதில் ‘‘சிடா’’ ஆர்வம்காட்டுவதுடன், அறிக்கை தயாரிப்பதில் அவர்கள் ஈடுபடவும் ஊக்குவிக்கிறது. இதனால் அரசாங்கங்களுக்கும் மக்களுக்குமிடையே கலந்துரையாடல் நடைபெற உதவுவதுடன், உடன்படிக்கை விதிகளைத் தடங்கலின்றிச் செயல்படுத்தவும் முடிகிறது. மேலும், அறிக்கை அனுப்பும் நாடுகள் இதற்காக மகளிர் அமைப்புகள், அரசுசாரா நிறுவனங்களைக் கலந்து தயாரிக்க வேண்டுமென்றக் கட்டாயமும் ஏற்படுகிறது.

# விதி - 1: பெண்களுக்கு எதிரான பாகுபாடு பற்றிய வரையறை

உடன்படிக்கையின் நோக்கங்களுக்காக, *''பெண்களுக்கு எதிரானப் பாகுபாடுகள்''* என்பதன் வரையறை: அரசியல், பொருளாதார, சமூக, கலாச்சார, குடிமை அல்லது வேறு எந்தத் துறையிலும் மனித உரிமைகள், ஆண் பெண் சமத்துவம் மற்றும் அடிப்படைச் சுதந்திரங்களில் அங்கிகாரம், உரிமைகளைத் துய்ப்பது அல்லது அவற்றைச் செயல்படுத்துவதில் திருமணமானவர்களாக இருப்பினும் அல்லது ஆகாவிட்டாலும் பெண்கள் என்ற ஒரே காரணத்தினால் கட்டுப்பாடுகளை விதிக்க அல்லது செயலிழக்கச் செய்ய, அந்நோக்கில் செயல்பட பெண்களை வேறுபடுத்திக்காட்டுவது, விலக்கிவிடுவது, கட்டுப்படுத்துவது.

## கருத்துரை

உடன்படிக்கையின் அனைத்துப்பிரிவுகளுக்கும் பொருந்தும் வகையில், பெண்களுக்கு எதிரானப் பாகுபாடுகளை முதல் விதி வரையறுக்கிறது. பாலியல் அடிப்படையில் பாகுபடுத்துவது, வேறுபடுத்துவதை மேலோட்டமாகக்காட்டும் அரசியல், குடி உரிமைகள் மற்றும் பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகளுக்கான சர்வதேச ஒப்பந்தங்களைப் போன்ற முந்தைய ஒப்பந்தங்களைப் போல் இல்லாமல், இந்த உடன்படிக்கையானது, பெண்களுக்கு எதிரானப் பாகுபாடுகள் பற்றி கவலை தெரிவிப்பதை முதல் விதி நிறுவிவிடுவதுடன் பிறகு முழுமையாக விளக்கவும்படுகிறது.

திருமண நிலையைச் சாக்காகக் கொள்ளாமல், ஆண்களைப் போன்றே பெண்களும் மனித உரிமைகளை அனுபவிப்பதில் தடை ஏற்படுத்துவது அல்லது சீர்குலைத்துவிடும் பாலியல் அடிப்படையிலான கட்டுப்பாடுகள், வேறுபடுத்துவது அல்லது தனிமைப்படுத்திவிடும் எந்தவகையான வேற்றுமை காட்டப்படும் பாகுபாட்டு பழக்கங்களையும் உடன்படிக்கை வரையறுக்கிறது. உள்நோக்கத்துடனோ அப்படி எதுவும் இல்லாமலோகூட பாகுபாடு காட்டப்படுவதை இது உள்ளடக்கி இருப்பதுடன் ஆண்களுடன் ஒப்பிடுகையில் வேறுபடுத்தியும், பிரதிகூலமாகவும் பெண்களைத் தாழ்வாக அணுகுவதையும் முழுமையாக அலசுகிறது. அரசியல், பொருளாதார, சமூக மற்றும் குடிமை துறைகளில் உள்ளிட்ட எல்லாவிதப் பொதுவாழ்விலும் நிலவும் பாகுபாடுகளை ஒழிப்பதே உடன்படிக்கையின் நோக்கம் என்பதை முதலாவது விதி தெளிவாக்கிவிடுகிறது. தனிப்பட்ட வாழ்க்கையில்தான் பெண்களுக்கு எதிரானப் பாகுபாடுகள் அதிகம் உள்ளன என்பதால் தனிப்பட்ட அல்லது குடும்பத்திற்குள் நிலவுவது உட்பட எந்தவொரு இடத்திலும் பாகுபாடு இருந்தாலும் அதையும் இது உள்ளடக்கிவிடுகிறது. அரசாங்கத்தால் அல்லது தனிப்பட்ட நபரால், அமைப்பால் அல்லது நிறுவனத்தால் பெண்களுக்கு எதிரான அவர்கள் பெண்கள் என்பதாலேயே நடத்தப்படும் பாலியல் வன்முறையும் முதலாவது விதியின் வரையறைக்குள் வருவதாக 19வது பொதுப்பரிந்துரையில் ''சிடா'' கூறியது.

## பொறுப்புடமையும் (Accountability) செயல்படுத்தலும்:

<u>கேட்கப்படும் கேள்விகள்</u>

1. *அரசமைப்புச் சட்டம் என ஒன்று இருந்தால், அது மனித உரிமைகளை அனுபவிப்பதிலும், பாதுகாப்பிலும் ஆண்களைப் போன்றே பெண்களுக்கும் உத்தரவாதம் அளிக்கிறதா? பாலியல் அல்லது திருமணநிலை அடிப்படையில் பெண்களுக்கு எதிரானப் பாகுபாட்டை இதுதடுக்கிறதா? தடுக்கிறது எனில் அது நடைமுறையில் செயல்படுத்தப்படுகிறதா? அப்படி இல்லையென்றால், அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கு என்ன செய்யப்பட்டுள்ளது? இது போன்ற ஒரு திருத்தம் செய்ய தடங்கல்கள் ஏதும் உள்ளதா? அவை யாவை?*

2. *பெண்களைப் பாகுபடுத்திக்காட்டுவதை வரையறுக்கும் கொள்கை அறிவிப்புகளோ சட்டங்களோ உள்ளனவா? அவை என்ன சொல்கின்றன? ஆண்களுடன் ஒப்பிடுகையில் பெண்களுக்கு அணுகுமுறையில் வேறுபடுத்தும் அல்லது அதற்குக்காரணமாக விளங்கும் செயல் எதையும் இந்த வரையறை உள்ளடக்கி இருக்கிறதா? பெண்கள் அவர்களுக்குரிய குடிமை, அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார அல்லது வேறு எந்த உரிமைகளை அனுபவிப்பதிலும், செயல்படுத்துவதிலும் முடக்கம் செய்யும் அல்லது பழுதாக்கும் சட்டங்கள், பழக்கவழக்கங்கள், கொள்கைகள் (அரசியல் சட்டப்படியான, நிர்வாக, பாரம்பரிய அல்லது பழக்க வழக்கத்தால்) ஏதேனும் உள்ளதா?*

3. *பாகுபடுத்தலை விளக்கும் சட்டவரையறையானது போதுமான அளவுக்குப் பரந்துபட்டதாக அல்லது உடன்படிக்கையில் கூறப்பட்டிருப்பவற்றோடு ஒப்பிடும் வகையில் விரிவானதாக உள்ளதா? உள்நோக்கமின்றி பாகுபாடுத்தும் பழக்க வழக்கங்களையும் காரணமின்றி அல்லது நியாயப்படுத்த முடியாதபடி ஆனால் பழக்கத்தில் பாகுபாட்டை உள்ளடக்கியதாக இந்த வரையறை இருக்கிறதா?*

4. *தனியார் நிறுவனங்கள் அல்லது தனிநபர்களால் காட்டப்படும் பெண்களுக்கு எதிரான பாகுபாட்டை இச்சட்ட வரையறை கொண்டுள்ளதா? தனிப்பட்ட அல்லது குடும்ப வாழ்க்கையில் பெண்களுக்கு எதிரானப் பாகுபாட்டையும் இச்சட்டவரையறை விளக்குகிறதா?*

5. *பாலியல் அடிப்படையில் இழைக்கப்படும் பெண்களுக்கு எதிரான வன்முறையையும் இச்சட்ட வரையறை கொண்டுள்ளதா?*

# விதி - 2 : பாகுபாட்டை ஒழிப்பதற்கான கடமைகள்

பெண்களுக்கு எதிரான எல்லாவிதப் பாகுபாடுகளையும் உடன்படிக்கை நாடுகள் கண்டிப்பதுடன், உகந்த வழிமுறைகளில் தாமதமின்றி இப்பாகுபாடுகளை ஒழிப்பதற்கான ஒரு கொள்கையை கடைப்பிடிப்பதற்கு ஒப்புக்கொள்கின்றன. இதற்காக, கீழ்காணும் நடவடிக்கைகளை எடுப்பது.

அ. ஆண்களும் பெண்களும் சமம் என்ற கொள்கையை இந்நாடுகளின் அரசமைப்புச் சட்டத்தில் உருவாக்குவது அல்லது இதுவரை அப்படி இல்லாவிட்டால் உகந்த சட்ட

வடிவை ஏற்படுத்தி சட்டத்தின் மூலமாக அல்லது வேறு உகந்த வழிமுறைகள் மூலம் இக்கொள்கையை நடைமுறையில் செயல்படுத்தத் தூண்டுவது.

ஆ. பெண்களுக்கு எதிரான பாகுபாடு காட்டப்பட்டால் தண்டனைகள் வழங்குவது உள்ளிட்ட சட்டமசோதா மற்றும் பிறநடவடிக்கைகளை மேற்கொள்வது.

இ. ஆண்களுக்கு இணையாகப் பெண்களுக்கான உரிமைகளுக்கு சட்டப்பாதுகாப்பை நிறுவுவது மற்றும் பாகுபாடு காட்டும் எவ்வகைச் செயலில் இருந்தும் பெண்களைத் திறம்படப் பாதுகாப்பதற்கான அதிகாரமிக்க தேசியத் தீர்ப்பாயங்களையும் பிற அரசு அமைப்புகளையும் ஏற்படுத்தி ஊக்குவிப்பது.

ஈ. பெண்களுக்கு எதிரான எந்தவொரு பழக்கவழக்கத்திலும் செயலிலும் ஈடுபடாமல் தவிர்ப்பது மற்றும் இதே கட்டுப்பாட்டுடன் அரசாங்க அமைப்புகளும், நிறுவனங்களும் உறுதிபூண்டுச் செயல்படுவது.

உ. எந்தவொரு தனிநபர், அமைப்பு அல்லது தொழில் நிறுவனத்தாலும் பெண்களுக்கு எதிராகப்பாகுபாடு காட்டப்படுவதை ஒழிக்கத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பது.

ஊ. பெண்களுக்கு எதிராகப் பாகுபாடு காட்டக் கூடிய வகையில் தற்போது இருந்துவரும் சட்டங்கள், விதிமுறைகள், பழக்கவழக்கங்கள், நடைமுறைகளை நீக்க அல்லது உருமாற்ற சட்டவழி உள்ளிட்ட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பது.

எ. பெண்களுக்கு எதிரான பாகுபாட்டைக் கொண்டிருக்கும் எல்லா தேசியச் சட்டமுறைகளையும் நீக்கிவிடுவது,

## கருத்துரை:

உடன்படிக்கை நாடுகள் பெண்களுக்கு எதிரானப் பாகுபாடுகளைக் கண்டிக்கவும், அரசமைப்புச்சட்ட, சட்டப்பூர்வ மற்றும் பிற உகந்த வழிமுறைகள் மூலம் ஒழிக்கவும் விதி 2 கட்டாயமாக்குகிறது. விதி 2-ன் கீழ் இந்நாடுகள் பெண்களுக்கு எதிரானப் பாகுபாட்டை ஒழிப்பதற்கான கடமையை அரசாங்க அமைப்புகளுக்கும் நிறுவனங்களுக்கும், தனிநபர்கள், அமைப்புகள் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கும் கூட விரிவுபடுத்துகிறது. அரசு மற்றும் தனியார் அமைப்புகளும் தனிநபர்களும் பெண்களுக்கு எதிராகப் பாகுபாட்டைக் கடைப்பிடிக்காமல் தவிர்த்து, ஒழிப்பதற்கு ஊக்குவிக்கும் பணியில் இந்நாடுகள் ஈடுபடுவதையும் இவ்விதி ஒரு கடமையாக்கிவிடுகிறது. விதி 2-ன் ஒரு துவக்கநிலைத் தேவை என்னவென்றால், ஆண்களுடன் பெண்களும் சரிநிகரானவர்களே எனும் கோட்பாடானது அரசமைப்புச் சட்டத்திலோ வேறு பிற பொருத்தமான சட்டத்தின் மூலமாகவோ சேர்க்கப்பட வேண்டும் என்பதாகும். பாகுபாட்டுக்கு அடிப்படையாக விளங்கும் சட்டங்களை குடிமை, குற்றவியல் மற்றும் தொழிலாளர் நலச்சட்டங்களில் மாற்றம் ஏற்படுத்துவதன் மூலம் இந்நாடுகள் ஒழிக்க வேண்டும். சட்டச் சீர்திருத்தங்களுக்கும் அப்பாற்பட்ட வகையில் கடமைகளைத் திணிக்கும் 2வது விதியானது, சட்டத்தின் மூலமாகவோ அல்லது வேறு எந்த உகந்த வழிமுறைகள் மூலமாகவேனும் பெண்கள் சமத்துவத்திற்கான கொள்கையை நடைமுறையில் காண்பதற்கு நாடுகளை நிர்ப்பந்தப்படுத்திவிடுகிறது.

## பொறுப்புடமையும் செயல்படுத்தலும்:

**கேட்கப்படும் கேள்விகள்**

1. *அரசாங்கம் அல்லது அரசு நிறுவனங்கள் பெண்களைப் பாகுபடுத்திக்காணும் கொள்கைகளோ, நடைமுறைகளோ உள்ளனவா? பெண்களுக்கு எதிராகப் பாகுபாடு காட்டக்கூடிய ஏதாவது சட்டம் அல்லது நிர்வாக மற்றும் பிற பழக்கங்களோ இருக்கின்றதா? பெண்களைப் பாகுபடுத்திக்காணும் இடங்கள் அடையாளங்காணப்பட்டு உள்ளதா? இந்த இடங்களை அடையாளங்காண என்ன வழிமுறைகள் பயன்படுத்தப்பட்டன? மனித உரிமைகளை பெண்கள் அனுபவிப்பதில், பயன்படுத்துவதில், இவற்றில் பெண்களுக்குரிய அங்கீகாரத்தைப் பெறுவதில் முடக்கம் செய்வதிலோ அல்லது பழுது ஏற்படுத்துவதிலோ அரசாங்கம் மற்றும் அரசு நிறுவனங்களின் கொள்கைகளும் பழக்கவழக்கங்களும் எந்த அளவுக்கு உள்ளன? இக்கொள்கைகளும் பழக்கவழக்கங்களும் நீக்கப்படுவதற்கு அல்லது மாற்றப்படுவதற்கான நிலையில் உள்ளனவா?*

2. *இந்த உடன்படிக்கையில் கையொப்பமிடும்போது பெண்களுக்கு எதிரானப் பாகுபாட்டைக் காட்டாத சட்டத்தைக் கொண்டிராத நாடுகள், இதன் பிறகாவது அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்து உத்தரவாதம் அளிக்கின்றனவா? இல்லையெனில் இதுபோன்ற ஓர் உத்தரவாதத்தை அளிக்கவல்ல சட்டத்திருத்தத்தைக் கொண்டுவரும் பணி தொடங்கிவிட்டதா?*

3. *உடன்படிக்கையின் அத்தியாவசிய விதிகளில் (கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு போன்றவை குறித்த) விளக்கப்பட்டிருக்கும் குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள பாகுபாட்டை ஒழிப்பதற்கான சட்டத்தை அல்லது சட்டத்திருத்ததை அரசாங்கம் கொண்டுவந்து விட்டதா?*

4. *அரசாங்க நிறுவனங்கள், அமைப்புகள், அரசு அதிகாரிகள் பெண்களிடம் கொண்டிருக்க வேண்டிய அணுகுமுறை குறித்த நன்னடத்தை ஒழுங்கு விதிகள், சட்டங்கள், விதி முறைகள் கொள்கைகளாகப் பிரகடனப்பட்டுள்ளனவா? இது போன்ற சட்டங்கள், தனிப்பட்ட நபர்கள், அமைப்புகள், தொழில்நிறுவனங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளதா?*

5. *நாட்டின் சட்டங்கள் பெண்களைப் பாகுபடுத்திப் பார்ப்பதாக உள்ளனவா என ஆராயும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா?*

6. *பாகுபடுத்தலைத் தடைசெய்யும் சட்டங்களும் கொள்கைகளும் நீதிமன்ற அமைப்புகள், தீர்ப்பாயங்கள் மூலம் திறம்படச் செயல்படுத்தப்படுகிறதா எனக்கண்டறியப்பட்டுள்ளதா?*

7. *பெண்களுக்குத் தங்கள் உரிமைகளைத் துய்ப்பதற்கு உதவக்கூடிய வகையில் குறைதீர்க்கும் அமைப்புகளோ, வழிமுறைகளோ அல்லது சிறப்பான நிவாரணங்களோ மேம்படுத்தப்பட்டுள்ளனவா? அப்படி இருந்தால் அவை எந்த அளவுக்குத் திறம்பட உள்ளன? கடந்த நான்காண்டு காலத்தில் நீதிமன்றங்களில் அல்லது பிற அமைப்புகள் முன்னால் எத்தனை வழக்குகள் வந்துள்ளன? அவற்றில் எவ்வாறு முடிவு காணப்பட்டுள்ளது?*

8. *பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் ஆணையம் அல்லது நடுநிலை அமைப்பு* ***(Ombud)*** *போன்ற சிறப்பான அமைப்பு ஏதும் ஏற்படுத்தப்பட்டுள்ளதா? உடன்படிக்கை*

*விதிகள் நிறைவேற்றம் பற்றி மேற்பார்வையிடுவதற்கென்றே அமைப்பு ஏதும் அமைக்கப்பட்டுள்ளதா? இருந்தால் அவர்களது செயல்பாடு எவ்வாறு உள்ளது? எந்த அளவுக்குத் திறனுடையதாக இருக்கிறது.*

9. *பெண்களுக்கு எதிராகப் பாகுபாடுகாட்டும் அல்லது அதற்கு ஊக்குவிக்கும் பழக்கவழக்கங்கள், நடைமுறைகளில் மாற்றம் கொண்டுவருவதற்கான சட்ட மற்றும் பிற திட்டங்களை உருவாக்கும் முயற்சிகளை நாடு மேற்கொண்டிருக்கிறதா? குறிப்பாக, பெண்களுக்கு எதிரான பாலின வன்முறைக்கு முடிவுகாண சட்ட மற்றும் பிற திட்டங்கள் மூலம் முயற்சி மேற்கொண்டதா?*

10. *பெண்களுக்கு எதிரானப் பாகுபாட்டைக் கடைப்பிடித்தால் அரசாங்க ஒப்பந்தங்களை இழக்கச் செய்வது, அபராதம் போன்ற தண்டனைகளை அளிக்கத்தக்கத் தண்டனைகளோ, தண்டனைச் சட்டங்களோ இருக்கின்றதா? இருந்தால், அவையாவை? அவை நடைமுறையில் உள்ளனவா?*

11. *அடிப்படைச் சுதந்திரங்கள், சம உரிமைகளைப் பெண்களுக்கு உத்தரவாதமாக்குவதிலும், பெண்களின் நிலையை முன்னேற்றுவதிலும் வளர்ப்பதிலும் என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன?*

12. *பெண்களுக்கு எதிராகப் பாகுபாடு காட்டும் அல்லது அதற்கு ஊக்குவிக்கும் பழக்கவழக்கங்கள், நடைமுறைகளில் மாற்றம் ஏற்படுத்துவதற்கான சட்ட மற்றும் பிற திட்டங்களை உருவாக்கும் முயற்சிகளை அரசு மேற்கொண்டிருக்கிறதா?*

13. *பெண்கள் தங்களது முழுமேம்பாட்டை, அடிப்படைச் சுதந்திரங்களை, சம உரிமைகளைப் பெற்றுக்கொள்வதில் இருக்கும் நடைமுறைத் தடங்கல்கள் எவை?*

# விதி - 3 : பெண்கள் முன்னேற்றமும் மேம்பாடும்

அனைத்துத் துறைகளிலும் குறிப்பாக அரசியல், சமூக, பொருளாதார மற்றும் கலாச்சாரத் துறைகளில் ஆண்களுக்கு நிகரான அடிப்படைச்சுதந்திரங்கள்மனித உரிமைகளை அனுபவிப்பதிலும், செயல்படுவதிலும் உத்தரவாதத்தை ஏற்படுத்துவதற்கான நோக்கத்திற்காகவும், முழுமையான மேம்பாட்டை, முன்னேற்றத்தை பெண்கள் பெறுவதற்காகவும் சட்டமியற்றுவது உள்ளிட்ட எல்லா உகந்த நடவடிக்கைகளையும் உடன்படிக்கை நாடுகள் எடுக்க வேண்டும்.

## கருத்துரை

உடன்படிக்கையின் 2வது விதியில் கோடிட்டு காட்டப்பட்டுள்ளக் கொள்கைகளை நிறைவேற்றுவது உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும், சட்டமியற்றுவது உள்ளிட்ட எல்லா உகந்த நடவடிக்கைகளையும் நாடுகள் எடுக்க வேண்டும் என்பதை இவ்விதி கட்டாயமாக்குகிறது. ஆண்களுக்கு இணையாக அடிப்படைச் சுதந்திரங்கள் மற்றும் மனித உரிமைகளை பெண்களுக்கும் உத்தரவாதப்படுத்துவதும், அவர்கள் முழுமேம்பாட்டையும் முன்னேற்றத்தையும் அடையச் செய்வதே இதன் நோக்கம்.

### பொறுப்புடமையும் செயல்படுத்துதலும்:

<u>கேட்கப்படும் கேள்விகள்</u>

1. *தற்போதிருக்கும் சட்டங்கள், நடைமுறைகள், நிர்வாகக் கொள்கைகள் பெண்களின் முழுமேம்பாட்டையும், முன்னேற்றத்தையும் அடையச்செய்வதாக இருக்கின்றனவா? சட்டத்திலும், அரசியல் நடவடிக்கைகளிலும், சமூக சேவைகளிலும் சுகாதாரம் மற்றும் மருத்துவப் பராமரிப்பு, கல்வி, படிப்பறிவு, வளர்ச்சித்திட்டங்கள், வேலைவாய்ப்பு, சொத்துரிமை மற்றம் சமூக நலத்தில் ஆண்களுக்கு இருப்பதைப் போன்றே பெண்களுக்கும் அணுகுரிமை உள்ளதா?*

2. *அடிப்படைச் சுதந்திரங்களையும், சமஉரிமைகளை அனுபவிப்பதிலும் செயல்படுத்துவதிலும் ஆண்களைப்போன்றே பெண்களுக்கும் உரிமை உண்டு என்ற உத்தரவாதம் அரசமைப்புச் சட்டத்திலோ அல்லது வேறெந்த பொருத்தமானச் சட்டங்களிலோ வழங்கப்பட்டுள்ளதா? பெண்கள் அவர்களது முழுமேம்பாட்டைப் பெறுவதிலும், ஆண்களுக்கு நிகராகச் சம உரிமைகள், அடிப்படைச் சுதந்திரங்களைச் செயல்படுத்துவதிலும் ஏற்படும் நடைமுறைத் தடங்கல்கள் எவை?*

3. *பெண்களின் முழுமேம்பாடு, முன்னேற்றத்தைக் கொண்டுவருவதற்காகவும், அவர்கள் தங்களின் அடிப்படைச் சுதந்திரங்கள், சம உரிமைகளைப் பயன்படுத்துவதற்காகவும் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன?*

4. *சமூக, பொருளாதார, பண்பாட்டு வாழ்வில், அரசியலில் பெண்கள் பங்கேற்கச் செய்யும் சட்டங்கள் ஏதும் இயற்றப்பட்டதா? கொள்கை நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்பட்டனவா? சட்டங்களை, கொள்கைகளை ஏற்படுத்துவதில் பெண்கள் திறம்படப் பங்கேற்றார்களா? பெண்களின் திருப்திக்கேற்ப இச்சட்டங்களும் கொள்கைகளும் நிறைவேற்றப்படுகின்றனவா?*

# விதி - 4 : ஆண்கள் பெண்களிடையே சமத்துவத்தை உந்துதல்

ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே சமத்துவம் இருப்பதைப் போன்ற தோற்றம் (De Facto) தருவதற்காக உடன்படிக்கை நாடுகள் எடுக்கும் தாற்காலிக நடவடிக்கைகளை, இந்த உடன்படிக்கையில் வரையறுக்கப்பட்டிருப்பதைப் போல் ஒரு பாகுபாடாகக் கருதத் தேவையில்லை; ஆனால், இந்த ஏற்பாடானது முடிவுறாமல் நீண்டுகொண்டே போகாமல், இதன் பலனாக சமமின்மை அல்லது தனித்தனி அணுகுமுறைகள் நிலை பெற்றிடக்கூடாது; வாய்ப்பு வசதி, அணுகுமுறையில் சமத்துவத்தை ஏற்படுத்தும் நோக்கங்கள் சாதிக்கப்படுகையில், இந்நடவடிக்கைகள் தொடராமல் நிறுத்தப்படவேண்டும். மகப்பேற்றைப் பாதுகாக்கும் நோக்கில், இந்த உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள நடவடிக்கைகள் உள்ளிட்ட சிறப்பு ஏற்பாடுகளை உடன்படிக்கை நாடுகள் மேற்கொள்வதைப் பாகுபாடாகக் கருதத் தேவையில்லை.

## கருத்துரை

சட்டப்படியான சமத்துவத்தைப் பெண்கள் அனுபவிக்க அங்கீகரித்தாலும், அவர்கள் சமநிலையை உண்மையில் அடைந்துவிடவில்லை, சமத்துவமின்மை நீடித்திருக்கும் வரையிலும் உறுதியானச் செயல்பாட்டுக்கான சிறப்பு நடவடிக்கைகளை உடன்படிக்கை நாடுகள் எடுத்துக்கொள்ள 4-வது விதி அனுமதிக்கிறது. இவ்விதியின்படி இந்நடவடிக்கைகள் பாகுபாடு காட்டாதவை, ஏனென்றால், இவை பெண்களின் சமத்துவத் தோற்றத்தை ஊக்கப்படுத்துகின்றன. நடைமுறை உண்மையாக உள்ள பெண்களது சமத்துவமின்மையைப் போக்க இயலாத தன்மையில் முறைப்படியான சமத்துவம் இருப்பது போன்றத் தோற்றத்தை ஏற்படுத்துவதால் இவை நியாயப்படுத்தப்படுகின்றன. மகப்பேறு உள்ளிட்ட பெண்களுக்கென்றே இருக்கும் சில குறிப்பிட்ட நலன்களைப் பாதுகாப்பதற்காகவே சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்றும் கூறலாம். எனவேதான் அவை பாகுபாடு காட்டாதவை என நியாயப்படுத்தப்படுகின்றன.

“சிடா” 1988-ல் நடத்திய தனது ஏழாவது அமர்வின்போது பெண்களின் சட்டப்பூர்வ சமத்துவத்தை உத்தரவாதப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைச் சுட்டிக்காட்டினாலும்கூட, அவர்களது சமத்துவத் தோற்றத்தை ஊக்குவிப்பதற்காக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளின் தேவைக்காக அழுத்தம் கொடுத்தது. அதே அமர்வில் “சிடா” நிறைவேற்றிய 5வது பொதுப்பரிந்துரையில் கல்வி, பொருளாதாரம், அரசியல், வேலைவாய்ப்புத் துறைகளில் பெண்களின் பங்கேற்பை அதிகப்படுத்த சாதக நடவடிக்கை, முன்னுரிமை அணுகுமுறை மற்றும் இடஒதுக்கீட்டுமுறை, போன்ற தற்காலிகமான சிறப்பு நடவடிக்கைகளை உடன்படிக்கை நாடுகள் அதிகம் பயன்படுத்த வேண்டும் எனக் கூறியது. இந்த அமர்வில் நிறைவேற்றப்பட்ட இன்னொரு பரிந்துரையான 8-வது பரிந்துரையில், தங்கள் நாடுகள் சர்வதேச அளவில் பிரதிநிதித்துவபடுத்தப், பெண்களுக்கு சமவாய்ப்பு கிடைக்கக்கூடிய வகையில் உறுதியான செயல்பாட்டுக்குரிய தாற்காலிகச் சிறப்பு நடவடிக்கைகளை எடுக்குமாறு உறுப்பு நாடுகளுக்கு “சிடா” ஆலோசனை கூறியிருந்தது.

## பொறுப்புடைமையும் செயல்படுத்தலும்:

### <u>கேட்கப்படும் கேள்விகள்</u>

1. *பெண்களின் சமத்துவத் தோற்றத்தை உந்தும் நோக்கில் அதிகாரப்பூர்வக் கொள்கை ஏதும் உள்ளதா? இருந்தால், அதை நிறைவேற்ற எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்ன? இதுபோன்ற ஒரு கொள்கையை நிறைவேற்ற சட்டம் ஏதும் இயற்றப்பட்டுள்ளதா?*

2. *ஆண்கள், பெண்களிடையே சமத்துவத்தைச் சாதிக்க உறுதியான செயல்பாடு அல்லது வேறுவகையிலான என்னென்ன சாதகமான தாற்காலிக சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன? இந்நடவடிக்கைகள் போக்கியுள்ள சமத்துமின்மைகள் எவை? பணியிடத்தில் பெண்களின் மகப்பேறு, சுகாதாரம், பாதுகாப்பு போன்றவற்றுக்கான சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ளதா? இருக்கிறதென்றால் அவை எவை? அவை திறம்பட உள்ளனவா?*

3. *இச்சிறப்பு நடவடிக்கைகள் எப்படி அமலாக்கப்படுகின்றன? அவற்றின் விளைவுகள்தான் என்ன? அவை கண்காணிக்கப்படுகின்றனவா?*

4. *இச்சிறப்பு நடவடிக்கைகள் சட்டத்தின் கீழ் பாகுபாடற்றதாகக் கருதப்படுகிறதா?*

5. *அமலாக்குவதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஏற்பாடுகள் எவை? அவை எவ்வாறு செயல்படுகின்றன?*

# விதி - 5 : பாலின பங்குபணியும் மாறாத்தன்மையும்

கீழ்காணும் நோக்கங்களுக்காக எல்லா தகுந்த நடவடிக்கைகளையும் உறுப்பு நாடுகள் எடுக்கும்:

அ. ஆண்கள், பெண்களின் பங்குபணிகளில் மாறாத்தன்மை அல்லது இருவரிடையே உயர்வு தாழ்வு மனப்பான்மைக் கருத்து அடிப்படையில் இடம்பெறும் பாரபட்சம், பழக்க வழக்கங்கள் மற்றும் இன்னபிற அனைத்து நடைமுறைகளையும் ஒழிக்கும் நோக்கில் ஆண்கள், பெண்களின் சமூக, பண்பாட்டு நடத்தை மாதிரிகளை மாற்றுவது;

ஆ. மகப்பேற்றை ஒரு சமுதாயச்சேவை என முறையாகப் புரிந்துகொள்வது, தங்கள் குழந்தைகளை வளர்த்து மேம்படுத்துவதில் ஆண் பெண் இருபாலருக்கும் பொதுவான பொறுப்புணர்வு உண்டு என்பதை ஏற்கச்செய்வது, எந்தச் சூழ்நிலையிலும் குழந்தைகளின் நலனே தலையானது எனப்புரிந்துகொள்வது ஆகியவற்றை ஊக்கப்படுத்துவதாக குடும்பக்கல்வி இருக்கச் செய்வது.

## கருத்துரை

சட்டப்பூர்வ தோற்றம்தரக்கூடிய **(defacto)** சமத்துவத்தைப் பெண்களுக்குக் கிடைக்கச் செய்யும் முயற்சிகளைத்தவிர, சமத்துவத்தை நோக்கிய உண்மையான முன்னேற்றத்திற்கு அடிப்படையான சமூக, பண்பாட்டு மாற்றம் ஏற்படவேண்டுமென்பதை உடன்படிக்கையின் 5வது விதி அங்கீகரிக்கிறது. ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையே நடையுடைபாவனைகளில் ஏற்படுத்தக்கூடிய மாறாத்தன்மையையும், பாகுபாட்டை ஏற்படுத்தும் சமூக, பண்பாட்டு நடைமுறைகளையும் மாற்றங்களை உருவாக்க 5 (அ) விதி நாடுகளை வற்புறுத்துகிறது. இருபாலரிடையே உள்ள தனிப்பட்ட உறவுகளைக் குறித்துப்பேசும் இப்பிரிவு, பாலின ஏற்றத்தாழ்வு மனப்பான்மைகள் மற்றும் பாலின மாறாத்தன்மை நடப்புகளை ஒழிப்பதுபற்றியும் கரிசனப்படுகிறது. குடும்பவாழ்வில் மாறாத்தன்மையுடன் இயங்கிவரும் பாலின பங்குபணிகள் மிகவும் வெளிப்படையாக விளக்குவதை ஒப்புக்கொண்டு ; மகப்பேற்றை ஒரு சமுதாயப்பணி என்ற முக்கியத்துவத்தையும், குழந்தைகளை வளர்ப்பதில் இருபாலருமே பொறுப்பைப் பகிர்ந்து கொள்ளவேண்டும் என்பதையும் வலியுறுத்தும் விதமாக குடும்பக்கல்வி அமைய அரசுகள் பாடுபட வேண்டுமென பத்தி ஆ.வில் கூறப்பட்டுள்ளது.

1987-ல் நடந்த “சிடா”வின் ஆறாவது அமர்வில், 5வது விதி குறித்து 3வது பொதுப்பரிந்துரையை நிறைவேற்றியது. சமூக பண்பாட்டுக் காரணிகள் காரணமாக பெண்கள் பற்றிய மாறாத்தன்மையுடைய கருத்துகள் தொடர்ந்து நிலவிவருவது அறிக்கைகளைப் பரிசீலிக்கும்போது தெரியவருவதாக இது கூறியது. இதனால் பாலின அடிப்படையில் பாகுபாடு ஊக்குவிக்கப்படுவதுடன்,

5வது விதி நிறைவேற்றப்படாமல் தடுக்கவும்படுகிறது. பெண்களுக்கான சமுதாயசமத்துவக்கொள்கை முழுமையாகச் செயல்படாமல் தடங்கல் ஏற்படுத்தும் பாரபட்சங்களையும், தற்போதைய நடைமுறைகளையும் ஒழிக்க உதவியாக, கல்வி மற்றும் பொதுத் தகவல் திட்டங்களை மேற்கொள்ளுமாறு உறுப்பு நாடுகளை ‘‘சிடா’’ வற்புறுத்தியுள்ளது.

குழுவின் மற்றப்பரிந்துரைகள் 5வது விதியில் உள்ளன. உதாரணமாக, முதல் பொதுப்பரிந்துரையில், 5வது விதியின் அடிப்படையில், ‘‘பெண்களைக் கீழ்நிலையில் வைத்துப் பாவித்து, மாறாத்தன்மையுடன் உள்ள பங்குபணிகள் போன்ற பாரம்பரியப் போக்குகள்தான் குடும்ப வன்முறை, அவதூறு செய்வதுபோன்ற வன்முறை, நிர்ப்பந்தங்களைப் பரவலாக ஊக்குவிக்கிறது’’ என ‘‘சிடா’’ கருத்துரைத்தது.

## பொறுப்புடமையும் செயல்படுத்தலும்:

<u>**கேட்கப்படும் கேள்விகள்**</u>

1. *சமுதாயத்தில் பெண்களின் முன்னேற்றத்திற்குத் தடங்கலாக இருக்கும் பண்பாட்டு, பாரம்பரியப் பழக்கவழக்கங்கள் அல்லது வாழ்க்கை முறைகள் என்ன?*
2. *பெண்கள் தாழ்ந்தவர்கள் என்றக் கருத்தை மறுதிணிப்பு செய்யும் அல்லது மாறாத்தன்மைக்குக் காரணமாக இருக்கும் சமுதாய, பண்பாட்டு நடையுடை பாவனைகளை மாற்றுவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன?*
3. *பெண்கள் நிலையை முன்னேற்றுவதில் குறுக்கிடும் மத அல்லது பாரம்பரியச் சடங்கு ரீதியான நம்பிக்கைகள், நடைமுறைகள் ஏதும் உள்ளதா? இருந்தால் அவை எவை?*
4. *சமுதாயத்திலும் குடும்பத்திலும் ஆண்கள், பெண்களுக்குரிய பணிகள் எவை எவை என எதிர்பார்க்கப்படுகிறது?*
5. *பள்ளிக்கூட பாடப்புத்தகங்களிலோ மக்கள் தொடர்புச்சாதனங்களிலோ ஆண்களும் பெண்களும் மாறாத்தன்மையுடையவர்களாகத்தான் சித்தரிக்கப்படுகிறார்களா?*
6. *ஆண்கள், பெண்களை மாறாத்தன்மையுடையவர்களாகக் காட்டப்படுவதை ஒழிக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன? இதை ஒழிப்பதில் ஏற்படும் இடர்பாடுகள் எவை?*
7. *சட்டம் அல்லது வழக்காற்றின்படி ‘‘குடும்பத்தின் தலைவர்’’ யார்?*
8. *இது ‘‘ஆண்களுக்கான வேலை’’ இவை ‘‘பெண்களுக்கான வேலை’’ எனக்குறிப்பிட்ட பணிகள் பகுக்கப்பட்டு இருக்கிறதா? இவற்றில் ஆண்களுக்கான மற்றும் பெண்களுக்கான வேலைகள் எத்தனையெத்தனை சதவீதம்?*
9. *சட்டத்தாலோ அல்லது வழக்கத்தினாலோ பெண்கள்தான் செய்யவேண்டும் என எவ்வகையான வேலைகள் ஒதுக்கப்பட்டுள்ளன?*

10. வீட்டில் அல்லது பள்ளிக்கூடத்தில் சிறுமிகளுக்கு வேறு, சிறுவர்களுக்கு வேறு எனப் பணிகள் பிரிக்கப்படுகிறதா?

11. குழந்தைகளைக் கவனித்துக்கொள்ளும் பொறுப்பு யாருடையது? ஆண்கள், பெண்கள் இருவருமே சமப்பொறுப்பு உள்ளவர்களா? விவாகரத்து பெற்றவர்களில் குழந்தைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு யாரிடம் தரப்படுவது வழக்கம்? ஏன்?

12. நாட்டில் குடும்ப வாழ்க்கைக் கல்விக்கான வசதி செய்யப்பட்டுள்ளதா? செய்யப்பட்டிருந்தால் அது என்ன?

13. உடன்படிக்கையின் இந்த விதியை கல்விகூடங்களின் பாடத்திட்டங்கள் எந்தளவுக்குப் பிரதிபலிக்கின்றன?

14. மனைவிகளை அடித்துத் தண்டிக்க கணவர்களுக்கு உரிமை உள்ளதா? இந்த உரிமையை எந்த சட்டம் அளிக்கிறது? மனைவியைக் கணவன் அடித்தால் அதைத்தடுப்பது நடைமுறையில் உள்ளதா?

15. கணவன் அல்லது மனைவியின் வன்முறைப்போக்கு இருவராலும் எப்படி எடுத்துக்கொள்ளப்படுகிறது? பெண்களுக்கெதிரான வன்முறையை ஒரு பிரச்சனையாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் பிரச்சாரம் நடப்பதுண்டா? அப்படி பிரச்சாரம் எதுவும் நடந்தால் அது ஆண்களின் போக்கில் மாற்றம் எதையும் ஏற்படுத்தியுள்ளதா?

16. பெண்கள் தங்கள் உரிமைகளை அறிந்துகொள்ளக் கல்வி அளிக்கும் பொதுத்தகவல் திட்டங்கள் ஏதும் உள்ளதா? இருந்தால், இத்திட்டங்களுக்கு மக்கள் தொடர்புச் சாதனங்கள் ஆற்றும் பங்களிப்பு என்ன?

17. ஆண்களும் பெண்களும் தங்களுக்கிடையிலான மோதல்களை வன்முறையற்ற வழிகளில் தீர்த்துக்கொள்வது எப்படி என்பதை விளக்கும் உபகரணங்கள் கல்வியில் பயன்படுத்தப்படுகிறதா?

18. பாரம்பரியம் அல்லது வழக்காறு என்ற பெயரில் திருமண அங்கீகாரத்திற்கான ஒரு நிபந்தனையாக அல்லது முன்தேவையாக வரதட்சணை அல்லது மணமகள் விலை தரப்படும்போது திருமணச் சீர்வரிசை தொடர்பான வன்முறைகளில் எத்தனை புகார்கள் பதியப்பட்டுள்ளன? இதுபோன்ற தட்சணைகளுக்கு எதிராகச் சட்டங்கள் உள்ளனவா? அப்படியொரு சட்டம் இருந்தால் அதை இருபக்கத்தினரையும் தடுப்பதாக உள்ளதா (திருமணத்திற்காகப் பெறுபவரும்கொடுப்பவரும்)?

19. பெண்களுக்கு எதிரான வன்முறை, குறிப்பாகக் குடும்பத்திற்குள் நடக்கும் வன்முறைபற்றியச் சட்டத்தை அமல்படுத்தும் அதிகாரிகளுக்குத் தெரிவிப்பதற்காகவும் வழக்குப், பதிவு செய்யவும் என்ன நடவடிக்கைகள், ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன?

20. குடும்பத்திற்குள் வன்முறையை எதிர்கொள்ளும் பெண்கள் வெளியேறிச் செல்ல ஒரு இடம் உள்ளதா? வீட்டுக்குள் நடைபெறும் வன்முறையைக் கையாளுவதற்கெனத் தனியாகச் சட்ட அமலாக்க அதிகாரிகள் உள்ளார்களா?

21. *வன்முறை, பாலின அத்துமீறலைக் காட்டும் திரைப்படங்கள், பத்திரிக்கைகளைத் தண்டிக்க வாய்ப்புள்ளதா?*

22. *பாலின வன்முறையால் பாதிக்கப்படும் பெண்கள் சட்ட அமலாக்க அதிகாரிகளால் எப்படி நடத்தப்படுகிறார்கள்?*

23. *குழந்தைகளைப் பாலின அவதூறு செய்வதைத் தடுக்கத் தனி ஏற்பாடுகள் எதுவும் உள்ளதா?*

# விதி - 6 : பெண்கள் சுரண்டப்படுவதைப் போக்குவது

பெண்களை வணிகப் பொருளாக்கும் அனைத்து வகைகளையும், பாலியல் வர்த்தகச் (Prostitution) சுரண்டலையும் போக்க சட்டமியற்றல் உள்ளிட்ட எல்லா உகந்த நடவடிக்கைகளையும் உறுப்பு நாடுகள் எடுப்பது.

## கருத்துரை

பாலியல் வர்த்தகச் சுரண்டலுக்குப் பெண்கள் ஆட்படுவதையும் வணிக நோக்கத்திற்காகப் பயன்படுத்தபடுவதையும் பற்றிக்கூறும் இவ்விதியானது, பாலியல் வர்த்தகத்தை தேர்ந்தெடுத்துக் கொள்ளும் பெண்களைத் தண்டிக்குமாறு நாடுகளைக் கேட்டுக் கொள்ளவில்லை. வரலாற்று ரீதியாக, மனிதர்களை வணிகமாக்குவது மற்றும் அடிமை வியாபாரம் குறித்த பல்வேறு சர்வதேச நடைமுறைகள் மூலம் பாலியல் வர்த்தகச் சுரண்டலைச் சர்வதேசச் சட்டம் கையாளுகிறது.

## பொறுப்புடமையும் செயல்படுத்தலும்

### <u>கேட்கப்படும் கேள்விகள்</u>

1. *பெண்கள், சிறுமிகளை வணிகமாக்குவதைத் தடுக்கும் சட்டம் நாட்டில் உள்ளதா? இருந்தால், இது திறம்படச் செயல்படுத்தப்படுகிறதா? இது போன்ற வணிகத்திற்காக என்ன தண்டனைகள் உள்ளன?*

2. *பாலியல் வர்த்தகம் சட்டப்படியானதா? சட்டவிரோதம் என்றால் விலைமகள் அவரது வாடிக்கையாளர் இருசாரார் மீதும் வழக்கு தொடரமுடியுமா? நடைமுறையில் வழக்குத் தொடரப்படுகிறதா? விலைமகளிருக்கு என்ன தண்டனை? வாடிக்கையாளருக்கு என்ன தண்டனை கிடைக்கும்? விலைமகளிர், வாடிக்கையாளருக்கெனத் தனித் தனியாகச் சட்டங்கள் ஏதும் உள்ளதா? இருந்தால் அவை நடைமுறைப்படுத்தப்படுகிறதா? விலைமகளிருக்கு ஏதாவது ஒரு வழியில் உரிமம் வழங்கப்பட்டு முறைப்படுத்தப்படுகிறதா? அப்படி சட்டம் ஏதுமிருந்தால் அவை குழந்தைகள் பாலியல் வர்த்தகம் பற்றிக் குறிப்பிடுகிறதா?*

3. *பாலியல் வர்த்தகம் சட்டப்பூர்வமானது எனில், சுரண்டலில் இருந்து விலைமகளிரைப் பாதுகாக்கச் சட்டம் உள்ளதா?*

4. *பாலியல் வர்த்தகம் குறித்து நிலவும் சமுதாயக்கருத்து என்ன?*

5. *வன்புணர்ச்சி உள்ளிட்ட பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பானச் சட்டங்கள் விபச்சாரத்தில் ஈடுபடும் பெண்களுக்கும் அதேபோல் பொருந்துமா? சமமாகப் பார்ப்பது நடைமுறையில் உள்ளதா?*

6. *பெண்களை வணிகப்படுத்துவது, பாலியல் வர்த்தகச் சுரண்டல் ஆகியவற்றுக்கான சட்டங்கள் என்ன?*

7. *குடிபெயர்ந்து வருவது, குடியேறுவதற்கான நடப்புகள் கண்காணிக்கப்படுகின்றனவா? குறிப்பாக, ஒரு குறிப்பிட்ட இடத்தில் குடியேறி வந்துள்ளவர்கள் அதிக அளவில் விபச்சாரத் தொழிலில் ஈடுபடுவதைக் கண்காணிக்கும் முறை எதுவும் உள்ளதா?*

8. *பெண்களை வணிகத்தில் ஈடுபடுத்தும் முகவர்களிடம் இருந்து பெண்கள், இளம்பெண்களைப் பாதுகாக்கும் சட்டங்களோ, கொள்கைகளோ நடைமுறையில் உள்ளதா? திருமண ஏற்பாட்டு முகவர்கள் குறிப்பாக வெளிதேசத்துவருக்குத் திருமணம் செய்துவைப்பவர்கள் தொடர்பான சட்டங்களோ, கொள்கைகளோ இருக்கிறதா?*

9. *ஒரு பெண்ணின் பாலுறவை மூன்றாம் நபர் வியாபாரமாக்குவது சட்ட விரோதமானதா?*

10. *பாலியல் வர்த்தகச் சுரண்டலையும், பெண்கள் வணிகப்படுத்தப்படுவதையும் ஒழிப்பதில்தடங்கல்கள் உள்ளதா? இருந்தால் அவை எவை?*

11. *நாட்டுக்கு வெளியே பெண்களையும் இளம்பெண்களையும் சுரண்டுபவரைத் தண்டிக்க, உதாரணமாக பாலினச் சுற்றுலா தொடர்பான சட்டம் போன்ற சட்டங்கள் நாட்டில் உள்ளதா? இருந்தால் அவற்றின் நிறைவேற்றம் மற்றும் விளைவுகள் பற்றி விளக்கம் தருக.*

## விதி - 7 : அரசியல் மற்றும் பொதுவாழ்க்கை

நாட்டின் அரசியல் மற்றும் பொது வாழ்க்கையில் பெண்களுக்கெதிரானப் பாகுபாட்டை ஒழிக்க எல்லா உகந்த நடவடிக்கைகளையும் உறுப்பு நாடுகள் எடுக்கும். குறிப்பாக, ஆண்களுக்குச் சரிநிகராகப் பெண்களுக்கும் கீழ்காணும் உரிமைகள் கிடைக்கச் செய்யப்படும்.

அ. அனைத்துத் தேர்தல்கள், பொது வாக்கெடுப்பில் வாக்களிக்கவும் மற்றும் பகிரங்கமாகத் தேர்ந்தெடுக்கப்படும் அமைப்புகளில் போட்டியிட்டுத் தேர்வு பெறுவது.

ஆ. அரசாங்கத்தின் கொள்கையை வகுப்பதிலும், பிறகு நிறைவேற்றுவதிலும் பங்கேற்க மற்றும் அரசுப்பதவியை வகித்து அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும் எல்லா வகை அரசுப்பணிகளையும் ஆற்றுவது.

இ. அரசுசாரா நிறுவனங்களிலும், பொது மற்றும் நாட்டின் அரசியல் வாழ்வு குறித்த சங்கங்களிலும் பங்கேற்பது.

## கருத்துரை

பெண்களுக்கான அரசியல் உரிமைகள் மீதான 1953-ம் ஆண்டு உடன்படிக்கை, குடிமை மற்றும் அரசியல் உரிமைகளுக்கான 1966-ம் ஆண்டு சர்வதேச ஒப்பந்தம் உள்ளிட்ட பிற சர்வதேசக் கூட்டு ஒப்பந்தங்களில் ஏற்கனவே உள்ளார்ந்த உரிமைகளாக்கப்பட்டு இருக்கும், தேர்ந்தெடுக்கப்படும் அமைப்புகளில் போட்டியிடவும் அனைத்துத் தேர்தல்களிலும் வாக்களிக்கவும் பெண்களுக்குரிய உரிமையை 7(அ) விதி மறுஉறுதிப்படுத்துகிறது. முந்தையக் கூட்டு ஒப்பந்தங்களைவிடக் கூடுதலாக இவ்விதியானது பொதுவாக்கெடுப்புகளில் வாக்குரிமையைத் திட்டவட்டமாகத் தெளிவாக்குகிறது.

சர்வதேசச் சட்டத்தின் தற்போதைய நிலையையும் 7(ஆ) விதி பிரதிபலிக்கிறது, எனினும், பங்கேற்கும் உரிமைக்கு உறுப்பு நாடுகள் “வகை செய்யும் எனக் கூறியிருப்பதன் மூலம் பெண்கள் பங்கேற்பதற்குரிய சூழ்நிலையை உருவாக்குவதற்கான கட்டாயத்தை அரசுகளுக்கு ஏற்படுத்தி இருக்கிறது. உதாரணமாக, அரசாங்க நியமனங்கள், உறுதியான செயல்பாட்டு நடவடிக்கைகள், இட ஒதுக்கீடுகள் மற்றும் சில பதவிகளுக்கான நியமனத்தில் உள்ள பாலின கட்டுப்பாடுகளை ஒழிப்பது உள்ளிட்ட நடவடிக்கைகள் மூலம் இக்கடமையை நிறைவேற்ற இயலும். உடன்படிக்கையில் அரசுசாரா நிறுவனங்கள் பற்றிக் கூறும் ஒரே விதியாக 7 (இ) விளங்குகிறது. நாட்டின் அரசியல் மற்றும் பொது வாழ்வில் அக்கறை கொண்டு அரசுசாரா நிறுவனங்கள், சங்கங்களில் பங்கேற்பதை பெண்களின் உரிமையாக இது நிறுவுவதுடன் இவ்வுரிமையை ஆண்களுக்கு நிகராகப் பெண்களுக்கும் வழங்குவதை அரசுகளுக்குக் கட்டாயமாக்கவும் செய்கிறது.

## பொறுப்புடமையும் செயல்படுத்தலும்:

### கேட்கப்படும் கேள்விகள்

1. *ஆண்களுக்குச் சமமாக எல்லாத் தேர்தல்களிலும் வாக்களிக்க பெண்களுக்கு உரிமை உள்ளதா? உள்ளதெனில், ஆண்களுடன் ஒப்பிடுகையில் பெண்கள் வாக்குச் சதவீதம் எவ்வளவு? சொத்து அல்லது படிப்பறிவு அடிப்படையில் வாக்குரிமை வழங்கப்படுகிறதா? அப்படியானால், இத்தேவைகள் பெண்களை மோசமாகப் பாதிக்கிறதா? உதாரணமாக, இதுபோன்ற தேவைகள் வாக்களிப்பதில் இருந்து பெண்களை விலக்கிவைத்து விடுகிறதா அல்லது ஆண்களைவிட பெண்களிடம் அவர்களது வாக்களிக்கும் தன்மையைப் பெருமளவுப் பாதிக்கிறதா?*

2. *அரசியல் கட்சிகளில் எத்தனை சதவீதம் பேர் பெண்கள்? அரசியல் கட்சிகளில் அந்த பெண் உறுப்பினர்களின் பங்கேற்பு எவ்வாறானது? பெண் உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரிக்க அரசியல் கட்சிகள் என்ன நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன? உள்ளூர், தேசிய அளவில் வெளிப்படையாக நடைபெறும் தேர்தல்களில் எத்தனை சதவீதம் பெண்கள் போட்டியிடுகின்றனர்? போட்டியிட்ட பெண்களில், ஆண்களில் வெற்றி பெற்றவர்கள் தலா எத்தனை சதவீதம்?*

3. *தேர்ந்தெடுக்கப்படும் பதவிகளுக்குப் போட்டியிட ஆண்களைப் போன்றே பெண்களுக்கும் தகுதி உண்டா? பெண் வேட்பாளர்கள் எத்தனை சதவீதம்? பெண் வேட்பாளர் சதவீதத்தை அதிகப்படுத்த அரசியல் கட்சிகளால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்ன? கட்சிநிர்வாகிகளாகப் பெண்களை அதிக அளவில் நியமிக்க அரசியல் கட்சிகள் எடுக்கும் நடவடிக்கைகள் என்ன? அப்படி நடவடிக்கை எடுத்தால் இப்போது எம்மாதிரியானப் பொது நியமனங்களில் பெண்கள் உள்ளனர்? தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டோர் விபரம், நியமிக்கப்பட்டோர்விபரம், இதுபோன்ற பதவி வகிப்போர் பெண்களின் பிரதிநிதிகளா? அரசுப் பதவிகளில் பெண்கள் எத்தனை சதவீதம்?*

4. *அரசியலில் பெண்கள் பங்கேற்பதைத் தடுக்கும் காரணிகள் எதுவும் உள்ளதா? அப்படி இருந்தால் அவை எவை, அவற்றை நீக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா? கட்சியிலோ அல்லது குழு அமைப்பிலோ பெண்கள் போட்டியிடுவதற்கு இருக்கும் இடையூறுகள் என்ன? உதாரணமாக நிதிப்பற்றாக்குறை, குழந்தைகளுக்கான நேர ஒதுக்கீடு, நம்பிக்கையின்மை அல்லது பொதுமக்களிடம் நிலவும் எண்ணம் போன்றவை உள்ளதா?*

5. *தேர்தல்களிலும், பொதுவாக்கெடுப்பிலும் பெண்களின் பங்கேற்பு எத்தனை சதவீதம்?*

6. *வளர்ச்சித் திட்டங்களை வடிவமைப்பதிலும், செயல்படுத்துவதிலும் பெண்களின் பங்கேற்பை எல்லா மாவட்டங்களிலும் ஊக்குவிக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன?*

7. *பொதுவாழ்க்கையில் பெண்கள் ஈடுபட நாட்டில் ஆதரவாக இருக்கும் சேவைகள் என்னென்ன?*

8. *தொழிற்சங்கங்களில் பெண்கள் பங்கேற்கிறார்களா? இத்துறையில் அவர்கள் பங்கேற்பதைத் தடுக்கும் காரணிகள் ஏதும் உள்ளதா? அவர்களது பங்கேற்பை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறதா?*

9. *மகளிர் அமைப்புகளில் உறுப்பினர்கள் என்ற முறையில் ஈடுபடும் அரசியல் நடவடிக்கைகளுக்காக மனித உரிமை மீறல்களுக்கும் பாகுபடுத்தலுக்கும் பெண்கள் ஆட்படுகிறார்களா? பெண் அரசியல் கைதிகள் பாலின அவதூறுக்கு ஆட்படுத்தப்படுகிறார்களா? ஆம் எனில், தயவுசெய்து ஆவணத்துடன் விளக்கம் தருக.*

10. *கொள்கை வரையறுப்பில் மகளிர் அமைப்புகள் எந்த அளவுக்கு ஈடுபடுகின்றன? அப்படி ஈடுபடத் தூண்டும் வழிமுறை எதாவது உள்ளதா?*

## விதி - 8 : சர்வதேச அளவில் பிரதிநிதித்துவம் மற்றும் பங்கேற்பு

சர்வதேச அளவில் தங்கள் அரசாங்க சார்பில் பிரதிநிதியாகக் கலந்துகொள்ளவும், சர்வதேச அமைப்புகளின் பணிகளில் பங்கேற்கவும் ஆண்களுக்குரிய வாய்ப்பைப் போன்றே, எவ்விதப் பாகுபாடுமின்றிப் பெண்களுக்கும் கிடைக்கச் செய்ய எல்லா உகந்த நடவடிக்கைகளையும் உறுப்பு நாடுகள் எடுக்கும்.

## கருத்துரை

சர்வதேச அளவில் தங்கள் நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தவும் அதேபோல் சர்வதேச அமைப்புகளில் பங்கேற்கவும் ஆண்களைப்போல் சமவாய்ப்பு பெண்களுக்கும் கிடைக்க வேண்டுமென்ற ஐ.நா. பிரகடனத்தின் 8வது விதியை எதிரொலிக்கும் இவ்வுடன்படிக்கையின் 8வது விதியானது, இதற்காக எல்லா உகந்த நடவடிக்கைகளையும் எடுக்குமாறு உறுப்பு நாடுகளைக் கேட்டுள்ளது.

சர்வதேச அளவில் பெண்களும் பிரதிநிதிகளாகச் சமஅளவில் பங்கேற்பது சாத்தியமாக வெகுதொலைவு இருப்பதால், இந்த இலட்சியத்தை அடைவதற்காக 4வது விதியில் கூறப்பட்டிருப்பதைப்போல் தாற்காலிகச் சிறப்பு நடவடிக்கைகளை எடுக்குமாறு "சிடா" தனது 8வது பொதுப்பரிந்துரையில் உறுப்பு நாடுகளைக் கேட்டுக்கொண்டது.

## பொறுப்புடமையும் செயலப்படுத்தலும்:

__கேட்கப்படும் கேள்விகள்__

1. *சர்வதேச அளவில் அரசாங்கத்தின் பிரதிநிதியாகக் கலந்துகொள்ளும் வாய்ப்பும் உரிமையும் பெண்களுக்கு உள்ளதா? சர்வதேச அமைப்புகளில் ஆண்களுக்கு நிகராகப் பங்கேற்று பணியாற்ற முடியுமா?*

2. *வெளிநாடுகளுக்கான தூதர்களில் பெண்கள் எத்தனை சதவீதம்? வெளிநாட்டு அரசுகளுக்கான பிரதிநிதிகள் அல்லது சர்வதேச அமைப்புகளில் உள்ள பிற பிரதிநிதிகளில் எத்தனை சதவீதம் பேர் பெண்கள்? அவர்கள் எங்கு பணியாற்றுகிறார்கள்? பெண் என்பதாலேயே சர்வதேச அளவில் தங்கள் நாட்டின் பிரதிநிதியாகக் கலந்து கொள்ளமுடியாமல் அல்லது சர்வதேச அமைப்புகளின் பணிகளில் பங்கேற்க இயலாமற்போனதற்கான உதாரணங்கள் உள்ளனவா? தயவு செய்து விளக்கம் தருக.*

3. *உங்கள் நாட்டின் வெளியுறவுத் துறைபணியில் உள்ளவர்கள் எத்தனை சதவீதம்பேர் பெண்கள்? எந்த நிலைகளில் பணியாற்றுகின்றனர்? சர்வதேசக் கூட்டங்களுக்கு அனுப்பப்படும் நிபுணர்களில் எத்தனை சதவீதம் பேர் பெண்கள்? எத்துறைகளில் இவர்கள் நிபுணர்கள்?*

4. *சர்வதேச அமைப்புகளில் பணியாற்றும் உங்கள் நாட்டினரில் பெண்கள் எத்தனை சதவீதம்? எந்தெந்தத் துறைகளில் அவர்கள் பணியாற்றுகிறார்கள்? தங்கள் நாட்டின் பிரதிநிதிகளாகப் பணியாற்றவும் சர்வதேச அமைப்புகளின் பணிகளில் பங்கேற்கவும் பெண்களுக்குச் சமவாய்ப்பு உள்ளதா?*

5. *வெளியுறவுத்துறைப்பணியில் சேருவதற்கும் சர்வதேச அளவிலான அதிகார நியமனப் பதவிகளுக்கு விண்ணப்பிக்கவும் ஊக்குவிக்க பயிற்சித்திட்டங்கள் ஏதும் உள்ளதா?*

# விதி - 9 : தேசியக் குடியுரிமை (Nationality)

தங்கள் தேசியக் குடியுரிமையைப் பெறவும், மாற்றவும், தக்கவைத்துக் கொள்ளவும் ஆண்களைப் போன்றே பெண்களுக்கும் சமஉரிமைகளை உறுப்பு நாடுகள் வழங்கும். குறிப்பாக, அன்னிய தேசத்தவருடன் திருமணம் ஆனாலும் அல்லது திருமணத்தின்போது கணவரால் குடியுரிமை மாற்றப்பட்டாலும் சரி, இதனால் மனைவியின் குடியுரிமை தாமாகவே மாறிவிடாமல் அவளை நாடற்ற கதிக்குத் தள்ளி அல்லது கணவரின் குடியுரிமை அவள்மீது சுமத்தப்படும் நிலைக்குத் தள்ளிவிடாமல் ஆண்களுக்கு இணையாக சமஉரிமைகளைப் பெண்களுக்கும் உறுப்பு நாடுகள் வழங்கும். ஆண்களுக்கு இருப்பதைபோல், தங்கள் குழந்தைகளுக்கு இருக்கும் குடியுரிமையைப்போல் பெண்களுக்கும் தேசியக் குடியுரிமை கிடைக்க சமஉரிமைகளை உறுப்பு நாடுகள் வழங்கும்.

## கருத்துரை

மனித உரிமைகள் மீதான சர்வதேசப் பிரகடனத்தின் 15-வது விதியானது ஒவ்வொருவருக்கும் தேசியக்குடியுரிமையை உத்தரவாதம் செய்கிறது. உடன்படிக்கையின் 9-வது விதியானது பெண்கள் தேசியக் குடியுரிமையைப் பெறுவதில் அவர்களது குழந்தைகளுக்குக் கிடைப்பது போன்றே சம உரிமைகளை வழங்குகிறது. 9வது விதியானது பெண்களுக்குச் சட்டத்தின் முன்னாலும் குடும்பத்திற்குள்ளும் சம உரிமைகளை வழங்கும் உடன்படிக்கையின் 15 மற்றும் 16-வது விதிகளுடன் இணைத்துப் பார்க்கப்பட வேண்டும். 21வது பொதுப்பரிந்துரையில் “சிடா” குறிப்பிட்டு இருப்பதைப் போல் சமுதாயத்தில் முழுப்பங்கேற்க குடியுரிமையானது மிகமுக்கியப் பங்காற்றுகிறது. ஒரு பெண்ணின் தேசியக் குடியுரிமையானது அவரது வாக்குரிமையிலும் அரசுப்பதவிக்குப் போட்டியிடுவதிலும் பாதிப்பை ஏற்படுத்தலாம் ; அவரது இருப்பிடவிருப்பத்தையும் பொதுச் சேவைகள் பலன்களைப் பெறுவதையும்கூடப் பாதிக்கலாம். திருமணமானப் பெண்களைப் பொருத்தவரை உள்நாட்டுக் குடிமைச்சட்டங்கள் அவர்களது கணவன்மார்களின் தேசியக் குடியுரிமை திணிக்கப்படலாம் அல்லது அன்னியத் தேசத்தவரை மணப்பதால் அவர்களது தேசியக் குடியுரிமையை இழக்கக்கூடும். 1957-ம் ஆண்டு ஐ.நா. பொதுச்சபையில் நிறைவேற்றப்பட்ட திருமணமானப் பெண்களின் தேசியக் குடியுரிமை குறித்த உடன்படிக்கை நிலைகளை இந்த 9வது விதி வலுப்படுத்துகிறது. இவ்வுடன்படிக்கையின் கூற்றுப்படி, திருமணம் அல்லது பிரிவு அல்லது கணவரின் தேசியக் குடியுரிமை மாற்றத்தால் மனைவியின் தேசியக் குடியுரிமையும் தானாகவே மாறிவிடாது.

ஒரு பெண் தனது தேசியக் குடியுரிமையைத் தொடர்ந்து பேணிவரவேண்டும் என்று வற்புறுத்துவதாகவோ அல்லது அவர் மாற்றிக்கொள்ள விரும்பும்போது பாதகமாக இருப்பதாகவோ 9வது விதியைப் புரிந்து கொள்ளக்கூடாது. ஆண்களுக்கும், குழந்தைகளுக்கும் கிடைப்பதைப்போல் பெண்களுக்கும் குடியுரிமை பெறுவதில் சமஉரிமைகள் வழங்கப்பட வேண்டுமென 9வது வதி கூறுகிறது. ஆகவே, குழந்தைகள் அவர்களது தாய்களின் குடியுரிமையை அல்ல, மாறாக, தந்தைகளின் குடியுரிமையைத்தான் தானாகவே கிடைக்கப் பெறுவார்கள் எனும் குடியுரிமைச் சட்டங்கள்

இவ்விதியுடன் முரண்படுகிறது. அத்துடன் குழந்தை உரிமைகளுக்கான உடன்படிக்கையின் (1988) 7வது விதியானது ஒரு குழந்தைக்குக் குடியுரிமை ஒன்றினைப் பெற்றிடும் உரிமையையும் வழங்குகிறது.

## பொறுப்புடமையும் செயல்படுத்தலும்:

**கேட்கப்படும் கேள்விகள்**

1. *பெண்களுக்கு, திருமணமானாலும் ஆகாவிட்டாலும், தங்கள் தேசியக் குடியுரிமையைப் பெற்றுக்கொள்ள மாற்றம் செய்ய அல்லது தக்கவைத்துக் கொள்ள ஆண்களைப்போல் சம உரிமைகள் இருக்கிறதா?*

2. *தேசியக் குடியுரிமை இல்லாதவரைத் திருமணம் செய்துகொள்வதால் அல்லது கணவரால் தேசியக் குடியுரிமை மாற்றப்படும்போது ஒரு பெண்ணின் தேசியக் குடியுரிமை எந்த வகையிலாவது பாதிக்கப்படுகிறதா?*

3. *ஒருவரின் குடியுரிமையானது (citizenship) பிறப்பால், பெற்றோரால், திருமணத்தால் அல்லது இவை அனைத்தாலும் தீர்மானிக்கப்படுகிறதா? குடியுரிமையானது பெற்றோரால் தீர்மானிக்கப்பட்டால் தந்தையின் குடியுரிமைக்குள்ள உரிமைகள் அதேவீதத்தில் தாயின் குடியுரிமைக்கு உண்டா?*

4. *கணவன் மனைவி இருவரில் ஒருவர் அன்னியக் குடியுரிமை பெற்றவராக இருந்தால், அவர்களின் உள்நாட்டைச் சேர்ந்தவருக்குக் கிடைக்கும் இருப்பிட மற்றும் வேலைவாய்ப்புக்கான உரிமைகளைப் பெற விரும்பும் இன்னொருவர் பெண்ணோ ஆணோ இருப்பாலினருக்கும் ஒரே மாதிரியான உரிமைகள் உள்ளனவா? மைனர் குழந்தைகள் அவர்களுக்கெனச் சொந்தமாக பாஸ்போர்ட் வைத்திருக்கிறார்களா? இல்லையென்றால் அவர்களது தந்தையின் பாஸ்போர்ட்டில்தான் பயணம் செய்ய முடியுமா? தாயின் பாஸ்போர்ட்டில் செல்ல முடியாதா? தாயின் பாஸ்போர்ட்டில் பயணம் செய்ய தகப்பனாரின் ஒப்புதல் தேவையா? மைனர்கள் நாட்டை விட்டு வெளியேற அவர்களது பெற்றோரின் ஒப்புதல் தேவையா? அப்படியெனில் யாருடைய ஒப்புதல், எந்தச்சூழ்நிலையில் தேவை?*

5. *கணவர் அல்லது ஆண் பாதுகாவலர் அனுமதியின்றி ஒரு பெண் பாஸ்போர்ட் பெறவோ, வெளிநாட்டுக்கும் பயணம் செய்யவோ முடியுமா?*

# விதி - 10 : கல்வி

கல்வித்துறையில் ஆண்களைப் போன்றே, பெண்களுக்கும் சமஉரிமைகள் கிடைக்கச் செய்து, பெண்களுக்கெதிரானப் பாகுபாட்டை ஒழிப்பதற்கான எல்லா உகந்த நடவடிக்கைகளையும் உறுப்பு நாடுகள் எடுக்கும். குறிப்பாக, ஆண்களும் பெண்களும் சமம் என்ற அடிப்படையில் இது அமைய ஊக்குவிக்கப்படும்.

அ. வேலைவாய்ப்பு மற்றும் தொழிலுக்கான வழிகாட்டுதலுக்கும், நகர்ப்புறத்தைப் போன்றே நாட்டுப்புறங்களிலும் கல்வி பயிலவும், அனைத்து வகைப்பட்ட கல்வி நிறுவனங்களிலும்

பட்டயங்களைப் பெற்றிடவும் ஒரேமாதிரியான சூழ்நிலைகள்; பள்ளிக்கு முந்தைய நிலை, பொது, தொழில்நுட்ப மற்றும் உயர்தொழில் நுட்பக் கல்வியிலும் தொழிற்கல்வியிலும் இதே சமத்துவம் தொடர்ந்து பேணப்படும்.

ஆ. பாடத்திட்டம், தேர்வுகள், ஒரே தரங்களுடைய ஆசிரியர்கள், பள்ளிக்கட்டிடங்கள், ஒரே தரத்திலான உபகரணங்கள் என அனைத்திலும் ஒரே மாதிரியானவற்றைப் பெறக்கூடிய வாய்ப்பு;

இ. மாறாத்தன்மையுடைய ஆண்கள், பெண்களைச் சித்தரிக்கும் கருத்துடையக் கல்வியை எல்லா நிலைகளிலும் ஒழிப்பது; இருபாலரும் சேர்ந்து படிப்பதை ஊக்குவிப்பதன் மூலம் எல்லாவகைக் கல்வியையும் அளிப்பது; இந்நோக்கங்களை எட்டக்கூடிய பிறவகைக் கல்விகள்; குறிப்பாக, இதற்காக பாடப்புத்தகங்கள், பள்ளித்திட்டங்கள் மற்றும் பயிற்றுமுறைகளில் மறுசீரமைப்பது;

ஈ. கல்வி உதவித்தொகை மற்றும் பிற கல்வி மானியங்களைப் பெறுவதில் ஒரே மாதிரியான வாய்ப்புகள்;

உ. முதியோர் மற்றும் செயல்பாட்டு நடைமுறைப் படிப்பறிவுத் திட்டங்கள் உள்ளிட்ட தொடர்கல்வி, குறிப்பாக ஆண்கள் பெண்கள் இடையே உள்ள கல்வியறிவு இடைவெளியைக் குறைக்கும் நோக்கில் எவ்வளவு விரைவில் முடியுமோ அத்தனை விரைவாகப் பெறும் அடிப்படையில் உள்ள கல்வியைப் பெறுவதில் ஒரே மாதிரியான வாய்ப்புகளைக் கிடைக்கச் செய்வது;

ஊ. படிப்பை முழுமையாக்காமல் இடையிலேயே வெளியேறிவிடும் பெண்களின் எண்ணிக்கையைக் குறைப்பது, பள்ளிகளில் இருந்து முன்கூட்டியே விலகிவிட்ட இளம்பெண்கள், பெண்களுக்கு எனத் தனியாகத் திட்டங்களை ஏற்படுத்துவது;

எ. விளையாட்டு, உடற்கல்வியில் தீவிரமாகப் பங்கேற்பதற்கான ஒரே மாதிரியான வாய்ப்புகள்;

ஏ. குடும்பநலத்திட்டம் குறித்த ஆலோசனை, தகவல்கள் உள்ளிட்ட சுகாதாரம், குடும்ப நல வாழ்வுக் கல்வி கிடைக்க உதவும் நோக்கில் சிறப்பான கல்வித்தகவல்களைக் கிடைக்கச் செய்வது;

## கருத்துரை

கல்வித்துறையில் பெண்களுக்கு எதிரானப் பாகுபாட்டை ஒழிக்கத் தேவையான எல்லா உகந்த நடவடிக்கைகளையும் எடுக்குமாறு உறுப்பு நாடுகளை இவ்விதி கேட்டுக்கொள்கிறது. மனித உரிமைகளுக்கான சர்வதேசப் பிரகடனம் மற்றும் பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமைகளுக்கான சர்வதேச ஒப்பந்தம் உத்தரவாதம் அளித்துள்ள உரிமைகளை இது மறுபடியும் அழுத்திக் கூறுகிறது. பெண்கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நோக்கில் 10-வது விதியானது, நாடுகளின் வாழ்க்கையில் பெண்களும் இளம்பெண்களும் ஆண்களைப்போல் சமப்பங்களிப்பு செய்யவேண்டும் என்பதற்காகக் கல்வித்துறையில் அவர்களுக்குச் சமஉரிமைகள் அளிப்பதற்குத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும் எனக் கூறுகிறது.

கல்வியைப் பொருத்தவரை ஆண்கள் பெண்கள் இடையே சமத்துவத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக, வேலைவாய்ப்பு மற்றும் தொழிற்கல்வி வழிகாட்டுதலில் இருபாலருக்கும் ஒரேமாதிரியான சூழ்நிலை அமையவேண்டுமென்றும், ஊரக அல்லது நகர்புறமாக இருந்தாலும் படிப்பைப் பெறுவது, படிப்பில் தேர்ச்சி அடைவது அல்லது எல்லா கல்வி நிலையங்களிலும் பட்டயங்களைப் பெறுவதில் சம வாய்ப்பு தரப்படவேண்டுமென்று 10(அ) விதி கேட்டுக்கொள்கிறது. பெண்களின் சமத்துவமானது குறிப்பாக பள்ளிக்கு முந்தைய நிலையிலும், பொது, தொழில்நுட்ப உயர் தொழில்நுட்ப மற்றும் எல்லாவகைத் தொழிற்கல்வி நிலையங்களிலும் உறுதிசெய்யப்படும். 10(ஆ) விதியானது, ஆண்களுக்குக் கிடைப்பதைப் போன்றே பெண்களுக்கும் பாடத்திட்டம், தேர்வுகள், பள்ளிவளாகங்கள், ஒரே தரமான ஆசிரியர்கள், ஒரே தரத்திலான உபகரணங்கள் கிடைக்கச் செய்ய உத்தரவாதமளிக்கிறது.

10(இ) விதியானது, எல்லா விதக்கல்வியிலும் அனைத்து மட்டங்களிலும் ஆண்கள் பெண்களை மாறாத்தன்மை உள்ளவர்களாகச் சித்தரிக்கும் கருத்துகளை ஒழிக்க விரும்புகிறது. இந்நோக்கத்தை எட்ட உதவும் இருபாலர் கல்வி மற்றும் பிறவகைக் கல்விகளை ஊக்குவிக்கும் இந்த உடன்படிக்கையானது, பாலினமாறாத்தன்மைக் கருத்தை ஒழிப்பதற்காக பாடப்புத்தகங்கள், பயிற்று முறை, பள்ளித்திட்டங்களில் மறுசீரமைப்புத் தேவை என்றும் கேட்டுக் கொள்கிறது. பாலின மாறாத்தன்மையை ஒழிக்க, கல்விக்கூடங்களில் பணியாற்றும் ஆண்பெண்களில் எண்ணிக்கை வேறுபாட்டைக் குறைப்பது அவசியம்.

ஆண்களும், சிறுவர்களும் பெறுவதைப் போலவே பெண்களும், சிறுமிகளும் கல்வி உதவித்தொகை, பிற படிப்பு மானியங்களைப் பெறவேண்டும் என 10(ஈ) விதி கூறுகிறது. படிப்பறிவுத் திட்டங்கள் உள்ளிட்ட தொடர்கல்வியில் பங்கேற்க பெண்களுக்குச் சமவாய்ப்புகள் தரப்பட வேண்டும் என உறுப்பு நாடுகளை 10(உ) விதி கட்டாயப்படுத்துகிறது. ஆண், பெண் இடையே உள்ள சமமின்மையைப் போக்க, குறிப்பாகப் புதியத் தொழில்நுட்பத்தை அறியச் செய்வதில் தொடர்கல்வியில் பங்கேற்கச் செய்வது மிக முக்கியம். வாய்ப்பு அமையாதப் பெண்களுக்கு, குறிப்பாகக் குடிபெயர்ந்து வாழும் பெண்களுக்கு அவர்கள் பொதுவாகத் தனிமைப்பட்டு வசிப்பவர்கள் என்பதால், வீட்டுச் சுமையுடன் இருப்பதால் முதியோர் கல்வியானது அவர்களது வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற உதவும்.

மாணவர்களைவிட மாணவிகளே அதிக அளவில் பள்ளிகளைவிட்டு இடையிலே நின்றுவிடுகிறார்கள் என்பதால், இப்படி விலகுபவர்கள் எண்ணிக்கையைக் குறைக்கவும், இளம்பெண்களுக்கும், பெண்களுக்கும் அவர்கள் படிப்பை முடிக்கும் வகையில் பயிற்சி அளிக்கவும் அரசுகள் பணியாற்ற வேண்டும் என 10(ஊ) விதி வற்புறுத்துகிறது. முக்கியமாக இளம் பெண்கள், மாணவிகளுக்கு அவர்கள் படிப்பை முடிக்கும் வகையில் தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டும். கூலி உழைப்பாளர்களாக இவர்கள் பணியாற்ற உதவும் திட்டங்களையும் தொடங்க வேண்டும்.

விளையாட்டு, உடற்கல்வியில் பங்கேற்பதற்கான வாய்ப்புகள் பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் ஆண்கள், சிறுவர்களைப்போல் கிடைப்பதில்லை. அவர்கள் ஆர்வத்தை வளர்த்துக்கொள்ள ஆதாரங்களும் குறைவாகவே உள்ளன. இப்போக்கை மாற்றி அமைக்க வேண்டும் என 10(எ) விதி

விரும்பும் அதேநேரம், 10(ஏ) விதியானது பெண்களுக்கும், சிறுமிகளுக்கும் சுகாதாரம், குடும்ப நலம் தொடர்பான கல்வி கிடைக்க வேண்டும் என உறுதியளிக்கிறது. குடும்பத்தில் குழந்தைகளின் எண்ணிக்கையை அவர்களே தீர்மானித்துக்கொள்ள உதவும் வகையில் குடும்ப நலம், குடும்ப நலத்திட்டம் குறித்தத் தகவல்களை அவர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டுமென்று கூறும் இப்பகுதி, இந்த உடன்படிக்கையில் வித்தியாசமான ஒன்றாகும். குடும்ப வாழ்க்கையில் சமஉரிமையுடன் பங்கேற்க, இக்கல்வி மூலம் கிடைக்கும் தகவல்கள் பெண்களுக்கு உதவும்.

## பொறுப்புடமையும் செயல்படுத்தலும்:

### கேட்கப்படும் கேள்விகள்

1. *ஆண்களுக்கும் பெண்களுக்கும் கல்வி சமமாகக் கிடைக்கச் செய்யும் சட்டமியற்றல் அல்லது வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா? நடைமுறையில் இருபாலருக்கும் சமவாய்ப்பு கிடைக்கிறதா?*

2. *ஆரம்ப, உயர்நிலை மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் படிக்கும் பாடங்களை மாணவிகளும் படிக்க முடிகிறதா? முடியுமெனில், தங்களுக்குரிய வாய்ப்பு குறித்து மாணவிகளுக்குத் தெரியுமா? தெரியுமெனில், இந்த வாய்ப்புகளை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளுகிறார்களா? இல்லையெனில் ஏன்?*

3. *ஆரம்ப, உயர்நிலைப்பள்ளிகளில், பல்கலைக்கழகப்பட்டதாரிகளில் பெண்கள் எத்தனைசதவீதம்? நாட்டில் ஆண்-பெண் எண்ணிக்கை வயது விகிதாச்சாரத்திற்கு ஏற்ப இது அமைந்துள்ளதா?*

4. *ஆண் - பெண் படிப்பறிவு மொத்த விகிதாச்சாரம் என்ன? 14-24 வயது வரை 25-44, 45 வயதுக்கு மேற்பட்டு?*

5. *இருபாலரும் சேர்ந்து படிக்க முடியாத பள்ளிகளில் மாணவர்களுக்கு இருப்பது போலவே மாணவிகளுக்கும் அதே போன்ற பாடத்திட்டம், தேர்வுகள், ஆசிரியர்கள், பள்ளி வளாகங்கள், உபகரணங்கள் கிடைக்கிறதா? உதாரணமாக மாணவர் ஆசிரியர் வீதம், சொல்லித்தரப்படும் பாடங்கள், சராசரிச் செலவு ஆகியவற்றை ஒப்பிடுக.*

6. *மாணவர்களைப் பல்வேறு பிரிவுகளாகப் பிரித்தும் அல்லது மாணவர்களைப் போல மாணவிகளுக்கும் அதே உரிமை கிடைக்கிறதா? வழக்கமான "ஆண்கள்" பாடங்களைப் படிக்க பெண்களால் முடிகிறதா? எப்படி?*

7. *மருத்துவத் துறையில் பெண்பட்டதாரிகள் எத்தனை சதவீதம்? பொறியியல் துறையில்? சட்டத்துறையில்? அறிவியலில்? வேளாண்மையில்? நாட்டில் உள்ள ஆண்-பெண் விகிதாச்சாரத்துடன் இந்த விகிதாச்சாரங்கள் எந்த அளவுக்குப் பொருந்தியுள்ளன?*

8. *என்ன மானியங்கள் அல்லது கல்வி உதவித்தொகைகள் கிடைக்கின்றன? ஆண்களுக்குக் கிடைப்பது போலவே இவை பெண்களுக்கும் கிடைக்கிறதா? இருவருக்கும் கிடைக்கும் இக்கல்வி உதவித் தொகை, மானியத்தால் பலன்பெறும் ஆண்கள் எத்தனை பேர்? பெண்கள் எத்தனைபேர்?*

9. *கல்வி உதவித்தொகை, மானியங்களில் ஆண்களுக்கெனத் தனியாகவும், பெண்களுக்கெனத் தனியாகவும் உள்ளதா? ஆரம்ப உயர்நிலை மற்றும் மேல் நிலைக் கல்வியில் எத்தனை சதவீதம் உதவித்தொகை, விருதுகள், மானியங்கள் பெண்களுக்கும் கிடைக்கிறது?*

10. *ஆண்களை ஒப்பிடுகையில் பெண்கள் எத்தனைபேர் இவற்றுக்காகக் குறைக்கப்பட்டுவிட்டனர்?*

11. *முதியோர் கல்வி, எழுத்தறிவு படிப்போரில் பெண்கள் எத்தனை சதவீதம்? இத்திட்டங்களில் பதிவு செய்திருப்பவர்களில் ஆண்கள் எத்தனைபேர், பெண்கள் எத்தனைபேர்? பெண்கள் பதிவு செய்யத்தடைகள் ஏதும் உள்ளதா? இருந்தால், அவை எவை? இடம் பெயர்ந்தோர் பழங்குடியினர் போன்ற எந்தக் குறிப்பிட்ட பிரிவினராவது இத்தடைகளால் பாதிக்கப்பட்டுள்ளனரா?*

12. *படிப்பு முடியும்வரை பள்ளியைவிட்டுப் பெண்கள் விலகாதிருக்கச் செய்ய சட்டங்கள் கொள்கைகள் ஏதும் உள்ளதா? உள்ளது எனில் விளக்கவும்.*

13. *பள்ளி, கல்லூரிகளில் படிப்பை முடிக்காமல் விலகிவிடும் பெண்களுக்கு என்ன கல்வித் திட்டங்கள் உள்ளன? இத்திட்டங்களில் உள்ள ஆசிரியர்களின் அனுபவம், தகுதி என்ன? இதுபோன்றத் திட்டங்களில் பெண்களைவிட ஆண்கள்தான் அதிகம் சேருகிறார்களா?*

14. *கல்வியில் அனைத்து நிலைகளிலும் எத்தனை வீதம் பெண்கள் பாதியிலேயே விலகிவிடுகிறார்கள்? இடையிலேயே பெண்கள் விலகிவிடக் காரணம் என்ன? பெண்கள் விலகல் வீதத்தைக் காட்டும் புள்ளிவிபரங்கள் உள்ளதா? அப்புள்ளிவிபரங்கள் முழுமையானவைதானா?*

15. *ஆரம்பநிலைக் கல்வி ஆசிரியர்களில் பெண்கள் எத்தனை சதவீதம்? உயர்நிலை அளவில்; பல்கலைக்கழகத்தில்? ஒவ்வொரு நிலையிலும் உள்ள பெண் ஆசிரியர்களின் மூப்பு நிலைகளை ஒப்பிடுக.*

16. *பள்ளி முதல்வர்கள், துறைத் தலைவர்களில் பெண்கள் எத்தனை சதவீதம்? பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், துறைத்தலைவர்களில் எத்தனை சதவீதம் பெண்கள் உள்ளனர்? ஆரம்ப, உயர்நிலை, உயர்கல்விப் பிரிவுகளில் பணியாற்றுபவர்களை பாலின அடிப்படையில் விகிதாச்சாரத்தைத் தருக.*

17. *குடும்ப நலத்திட்டம் உள்ளிட்ட இல்லற வாழ்க்கைக் கல்வி ஆண்களைப் போல் பெண்களுக்கும் கிடைக்குமா? குடும்பநலத்திட்டம், இல்லற வாழ்க்கைக் கல்வி பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதா? சேர்க்கப்பட்டிருந்தால் என்ன சொல்லித்தரப்படுகிறது?*

18. *பள்ளிகளில் விளையாட்டு, உடற்பயிற்சிக் கல்வியில் பங்குபெற ஆண் மாணவர்களைப்போல் மாணவிகளுக்கும் வாய்ப்பு கிடைக்கிறதா? இவற்றில் மாணவிகள் சேருவதற்கு கட்டுப்பாடுகள் ஏதும் உள்ளதா? மாணவிகள், பெண்கள் பங்குபெற தடையாக உடைகாரணம் என கூறப்படுகிறதா? எல்லா விளையாட்டுகளிலும் பெண்கள் பங்கு பெறுவது பண்பாட்டு அளவில் ஏற்றுக்கொள்ளப்படுகிறதா? விளையாட்டு வசதிகள் இருபாலருக்கும் சமமாக வழங்கப்படுகிறதா?*

19. *பெண்கள் என்றால் தாழ்த்தப்பட்டவர்கள் என்ற பாலின மாறாத்தன்மை கருத்தில் உதாரணமாக நிர்வாகியாகக் காட்டாமல் அவரது செயலாளராகக் காட்டுவது போன்ற நிகழ்ச்சிகள்*

*பாடத்திட்டங்கள், பாடப்புத்தகங்கள் போன்றவையோ உள்ளனவா? இருந்தால், எப்படி உள்ளன? இவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா?*

20. *இருபாலரும் கற்கும் பள்ளிக்கூட மாணவியின் சாதனைகளை, பெண்கள் பள்ளி மாணவியின் சாதனைகளுடன் ஒப்பிட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா? ஆய்வு நடத்தியிருந்தால் முடிவு என்ன?*

21. *வேலைவாய்ப்பு, தொழில் வாய்ப்புகளுக்கான வழிகாட்டுதலில் தொழில் வாய்ப்புகள் பற்றி பெண்களுக்கு முழுமையாகச் சொல்லித்தரப்படுகிறதா? இவ்வாய்ப்புகளைப்பற்றியத் தகவல்கள் கிடைக்கிறதா? பயன்படுத்திக்கொள்ள பெண்களுக்குச் சிறப்பு ஊக்கம் தேவைப்படுகிறதா? இந்த வாய்ப்புகளை பயன்படுத்துவதில் பெண்களுக்குத் தடைகள் உள்ளதா? அவை எவை? இத்தடைகளை நீக்க நடவடிக்கைகள் ஏதுவும் எடுக்கப்பட்டுள்ளதா? எடுக்கப்பட்டிருந்தால் அதன் விபரம்.*

# விதி - 11 : வேலைவாய்ப்பு

1. வேலைவாய்ப்பைப் பெறுவதில் பெண்களுக்கு எதிரானப் பாகுபாடுகளை ஒழிக்க எல்லா உகந்த நடவடிக்கைகளையும் அரசு எடுக்கும். இதை உறுதிப்படுத்த, ஆண்-பெண் சமத்துவ அடிப்படையில் பெண்களுக்கும் அதே உரிமைகள் கிடைத்திட, குறிப்பாகக் கீழ்காணும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்:

   அ. எல்லா மனிதப் பிறவிகளுக்கும் உரிய, அந்நியப்படுத்த முடியாத உரிமையாகிய வேலை செய்யும் உரிமை;

   ஆ. வேலை வாய்ப்பிற்காகத் தேர்வு செய்வதில் ஆண்களுக்குரிய அதே அடிப்படை உள்ளிட்ட ஒரே மாதிரியான வாய்ப்புகளைப் பெறும் உரிமை;

   இ. வேலை வாய்ப்பைத் தேர்ந்தெடுக்கும் உரிமை, பதவி உயர்வுக்கான உரிமை, பணியாற்றுவதற்கான சூழ்நிலை, பணிப்பாதுகாப்பு, எல்லாவிதப் பயன்பாடுகளைப் பெறும் உரிமை, தொழிற்பயிற்சி பெற, மறுபயிற்சி எடுக்க, முன்னேறிய தொழிற்பயிற்சி எடுக்கும் உரிமை;

   ஈ. சம ஊதியம் பெறும் உரிமை, சம மதிப்புள்ள பணியில் சம அணுகுமுறை பணியின் தர மதிப்பீட்டில், அணுகுமுறையில் சமத்துவம்;

   உ. சமூகப்பாதுகாப்புக்கான உரிமை குறிப்பாக ஓய்வு, வேலையின்மை, நோய், இயலாமை, வயது மூப்பு மற்றும் பிற வேலை செய்ய முடியாமை உள்ளிட்ட சம்பளத்துடன் கூடிய விடுப்பு எடுக்கும் உரிமை;

   ஊ. சுகாதாரத்தைப் பாதுகாக்கும் உரிமை, மறுபடியும் பணியாற்றத்தக்க செயல்பாட்டுக்கான பாதுகாப்பு உள்ளிட்ட பணியிடச் சூழ்நிலை பாதுகாப்பு உரிமை;

2. திருமணம் அல்லது மகப்பேறு காரணமாகப் பெண்களிடம் பாகுபாடு காட்டப்படுவதைத் தடுக்கவும், பணியாற்றுவதற்கான அவர்களது திறம்பட்ட உரிமையை உறுதிசெய்யவும் கீழ்காணும் நடவடிக்கைகளை உறுப்பு நாடுகள் எடுக்கும்:

அ. கர்ப்பம், பிரசவ விடுப்புகளைக் காரணம் காட்டி பணியில் இருந்து நீக்குவதையும் திருமணத் தகுதி அடிப்படையில் பணிநீக்கம் செய்து பாகுபாடு காட்டப்படுவதையும் தடுப்பது.

ஆ. சம்பளத்துடன் மகப்பேறு விடுப்பு அல்லது அவருக்கு வேலைவாய்ப்போ, பணிமூப்போ, சமுதாய படிகளோ இழப்பின்றி, சமுதாயப் பலன்களைப் பெற வைப்பது

இ. பணிப்பொறுப்புகளுடன், குடும்பத் தேவைகளை நிறைவேற்றக்கூடிய வகையில் பெற்றோருக்குச் செய்யவேண்டிய சமுதாயத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகைகளை ஊக்குவிப்பது மற்றும் குழந்தை நலனுக்கான வசதிகள் கிடைக்கும் வகையில் மேம்பாட்டு வாய்ப்பு வசதிகளை உருவாக்கித்தருவது.

ஈ. பணியாற்றும் போது சந்திக்க நேரும் சங்கடங்களில் இருந்து கர்ப்பிணிகளுக்கு தனிப்பட்ட பாதுகாப்பு அளிப்பது.

3. இப்பிரிவில் கூறப்பட்டுள்ளவை தொடர்பானவை குறித்தச் சட்டங்களை அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப அவ்வப்போது மறு ஆய்வு செய்வது, மாற்றம் செய்வது, தேவைப்பட்டால் விரிவுபடுத்திக் கொள்வது அல்லது நீக்கம் செய்துகொள்ளவும் வேண்டும்.

## கருத்துரை

வேலைவாய்ப்பில் பெண்களுக்கு எதிரானப் பாகுபாட்டை ஒழிப்பதற்கான எல்லா உகந்த நடவடிக்கைகளையும் அரசுகள் எடுக்கச் செய்வதுடன் இந்த 11வது விதியானது வேலைவாய்ப்பு உரிமைகள், வாய்ப்புகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை, பயன்பாடுகள் ஆண்களுக்குக் கிடைப்பது போலவே பெண்களுக்கும் கிடைக்க உத்தரவாதம் தருகிறது. பெண்களுக்கு எதிராக நேரடியாகவோ, மறைமுகமாகவோ நடைபெறும் பாகுபாடுகளை நீக்குவதற்காக ஒவ்வொரு முயற்சியையும் அரசுகள் மேற்கொள்ளச் செய்கிறது. ஆண்களைவிடப் பெண்களை மோசமாகப் பாதிக்கும் வகையில் உள்ளார்ந்த அல்லது ஓரளவு குறைந்த தெளிவான செயல்பாடுகளை மறைமுக பாகுபாடு உணர்த்துகிறது, அளவு, உயரம், வயது மற்றும் பிற அம்சங்களை கொண்டு ஆண்களைப்போல் பெண்களுக்கும் வேலைவாய்ப்பளிப்பதில் ஒளிந்துள்ள தேவையற்றப் பாகுபாடுகளை இதற்கு உதாரணங்களாகச் சொல்லலாம்.

சர்வதேசத் தொழிலாளர் அமைப்பின்கீழ் ஒப்புக்கொள்ளப்பட்டு இருப்பதைப்போல் ஐக்கிய நாடுகள் உறுப்பு அமைப்புகளின் விதிகளையும் உள்ளடக்கி இந்த 11-வது விதியானது சர்வதேசச் சட்டத்தின்படிப் பணியாற்றும் உரிமையை உறுதிப்படுத்துவதுடன், இந்த உரிமையை பெண்கள் முழுமையாகவும் திறம்படவும் அனுபவிக்கும் வகையில் உறுப்பு நாடுகள் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளையும் இது விரிவாக விளக்குகிறது. பாகுபாடு காட்டும் வேலைவாய்ப்புச் சட்டங்கள், நடைமுறைகளை இல்லாமல் ஆக்குவது மற்றும் பல வகைப்பட்ட பணிகளையும் செய்வதற்கு ஏற்றவகையில் கல்வி, தொழில் ரீதியில் பெண்கள் தங்களைத் தயார்படுத்திக்கொள்ள உதவும்

வகையில் ஆண்களுக்கு இருக்கும் வாய்ப்புகளைத் தோற்ற அளவிலேனும் (Defacto) பெண்களுக்கு வழங்குவதற்கு உறுப்பு நாடுகள் உத்தரவாதம் அளிக்கச் செய்கிறது. பணி நியமனத்தில் ஆண்களுக்குரிய தகுதிகளே பெண்களுக்கும் பொருந்த வேண்டும்.

வழக்கமாகப் பெண்களுக்குரியவை எனக் குறிப்பிடப்படும் வழக்கமான வேலைகளில் கட்டுப்படுத்தாமல் செய்தொழில், வேலைவாய்ப்பில்தங்கள் விருப்பத்தைத் தேர்வுசெய்துகொள்ளவும் பெண்களுக்கு உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது. பதவி உயர்வு, பணிப்பாதுகாப்பு, பணியாற்றுவதால் கிடைக்கும் பலன்கள், சூழ்நிலைகள், பயிற்சிகளைப் பெறுவதில் சம உரிமைகளும் அவர்களுக்கு கிடைக்க வேண்டும். ஊதியம் மற்றும் பணி தொடர்பான எல்லாப் பயன்பாடுகளையும் சமமாகப் பெறும் உரிமை பெண்களுக்கு உத்தரவாதப்படுத்தப்பட்டு இருக்கிறது. சமவேலைக்குச் சம ஊதியத்தை அவர்கள் பெற வேண்டும். சமமாகச் செய்யப்படும் வேலைக்குச் சம அணுகுமுறை அவசியம் எனக்கூறி இருப்பதுடன், பணியின் தரத்தை மதிப்பிடுவதிலும் ஒரே அணுகுமுறை இருக்கவேண்டுமென்று ‘‘சிடா’’வின் 13-வது பொதுப்பரிந்துரையில் பொருளடக்கமாக உள்ளது. பெண்கள் வேலையில்லாமல் இருக்கும்போது ஓய்வு பெறும்போதும் அல்லது பணியாற்ற முடியாத நிலை ஏற்படும்போது சமூகப்பாதுகாப்பைப் பெறவதற்கான உரிமையையும் அவர்கள் அனுபவிக்க வேண்டும். சம்பளத்துடன் கூடிய விடுப்பு எடுக்கவும், ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான சூழ்நிலையில் பணியாற்றும் உரிமையும் பெண்களுக்கு உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளது.

திருமணம் அல்லது மகப்பேற்றின் அடிப்படையில் காட்டப்படும் எந்தப் பாகுபாட்டையும் குறிப்பிட்டப் பிரிவுகள் தடை செய்கின்றன. மகப்பேறு மற்றும் கருத்தரிப்புக்காக விடுப்பு எடுத்தால் பணிநீக்கம் செய்யப்படுவதைத் தடுப்பதுடன் திருமண நிலையைக் காரணம் காட்டி நீக்கப்படுவதையும் தடுக்கிறது. பணி நிலை அல்லது பணிப்பயன்களை இழக்காமலே ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு எடுக்கவும், பெற்றோர் குடும்பமாக இணைந்து வாழ்ந்து பணியில் தொடர்ந்து ஈடுபட்டு பிறரைப்போன்றே சமூக வாழ்க்கையை நடத்தவும், தேவையான நடவடிக்கைகளை உறுப்பு நாடுகள் அறிமுகம் செய்யவேண்டும். குறிப்பாக இவ்விஷயத்தில் குழந்தைகள் நலத்திட்டங்களை எற்படுத்த உறுப்பு நாடுகள் அறிவுறுத்தப்படுகின்றன. தங்குதடையின்றி உற்பத்தியில் ஈடுபட பெண்களுக்குச் சம உரிமை வழங்குவதில் பாகுபாடு காட்டப்படுவதைத் தடுத்தாலும், கர்ப்பிணிகளுக்கு அவர்கள் பணியாற்றும் இடத்தில் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகளும் அவசியம் என்பதை 11வது விதி கட்டாயமாக்குகிறது. பணியில் தங்குதடையின்றி ஈடுபடாமை மற்றும் கருத்தரிப்பது ஆகியவற்றால் பெண்களிடம் பாகுபாடு காட்டப்படுகிறது எனச்சாக்குப்போக்கு கூறப்படும் என்பதால் இதற்காக உள்ள சட்டங்களை ஒவ்வொரு காலக் கெடுவுக்கேற்ப மறு ஆய்வு செய்ய வேண்டுமென உறுப்பு நாடுகளை 11 (3) விதி கட்டாயப்படுத்துகிறது.

தனது பொதுப்பரிந்துரைகளை உருவாக்குவதில், 11-வது விதியின் அர்த்தத்திற்கு ‘‘சிடா’’ கணிசமான கவனத்தை அர்ப்பணித்து இருக்கிறது. சமமதிப்பிலான பணிக்குச் சம ஊதியம் தருவதைப் பொருத்தவரை பாலின வேறுபாடற்ற பணி மதிப்பீட்டு முறைகளைப் பரிசீலிக்கவும், சமமானப் பணிக்குச் சம ஊதியம் என்பதைக் கூட்டு ஒப்பந்தங்களில் ஏற்படுத்திக் கொள்ளவும், இதன் 13-வது பொதுப்பரிந்துரையில் உறுப்புநாடுகளை ‘‘சிடா’’ அறிவுறுத்தியுள்ளது. ஊரக மற்றும் குடும்பம் போன்ற கூலி கிடைக்காத முறைப்படுத்தப்படாத் துறைகளில் பெண்கள் விகிதாச்சாரத்திற்கு ஒப்ப இல்லாத

அளவில், பெண்கள் அதிக அளவில் ஈடுபடுத்தப்படுவது குறித்து “சிடா”வின் 16, 17-வது பொதுப்பரிந்துரைகள் கவனம் செலுத்துகின்றன. முறைப்படுத்தப்பட்ட பணிகளைப் போலவே பாதுகாப்பற்ற மற்றும் தீங்கு ஏற்படுத்தக்கூடிய பணிகளிலும் உரிமைகளை 11-வது விதி உத்தரவாதப்படுத்துகிறது. பணியிடத்தில் மேலதிகாரிகள் சக ஆண் தொழிலாளர்களின் பாலியல் தொந்தரவு உள்ளிட்ட பெண்களுக்கு எதிரான வன்முறை குறித்து 12, 19-வது பொதுப்பரிந்துரைகளில் கூறப்பட்டுள்ளன. பணியிடத்தில் பாகுபாட்டை ஒழிப்பது என்பது பணியிடத்தில் உள்ள வன்முறையை ஒழிப்பதும் உள்ளிட்டுதான் என்பதைச் சுட்டிக்காட்டும் இப்பொதுப் பரிந்துரைகள் இதற்காக உகந்த சட்ட மற்றும் நடைமுறை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் கூறுகின்றன.

## பொறுப்புடமையும் செயல்படுத்தலும்:

<u>கேட்கப்பட்ட கேள்விகளும்</u>

1. *பணித்தேர்வு மற்றும் நியமனத்தில் ஆண் பெண் வேறுபாடுகள் நடைமுறையில் உள்ளனவா? இருந்தால் அவை யாவை?*

2. *வேலைவாய்ப்பில் பெண்களுக்கு எதிரானப் பாகுபாடுகளை ஒழிப்பதற்கான சட்டவிதிகள் ஏதேனும் உள்ளனவா? இவை அமலாக்கப்படுகின்றனவா? எப்படி?*

3. *ஆண் பெண் இடையே சம வேலைவாய்ப்பு உரிமை நிலவ என்ன சட்ட அல்லது பிற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன?*

4. *கூலிக்காகப் பணியாற்றும் உழைப்பாளர்களில் பெண்கள் எத்தனை சதவீதம்? இவர்களில் 15 - 24 வயதிற்குட்பட்டோர் எத்தனை சதவீதம்? 25-44 வயதில், 45க்கு மேல்?*

5. *கூலி வேலை செய்யும் பெண்களில் பகுதி நேரத் தொழிலாளர் எத்தனை சதவீதம்? முழுநேரத் தொழிலாளர் எத்தனை சதவீதம்? மொத்தப் பெண்களில் பகுதிநேர முழுநேரப் தொழிலாளர்கள் எத்தனை சதவீதம்?*

6. *ஒப்பந்த அடிப்படையில் சிறுசிறு வேலைகள் செய்வது அல்லது வீடுகளில் செய்து கொடுத்து கூலியைப் பெறும் பணிகளில் பெண்களை அமர்த்தியுள்ள தொழிற்சாலைகள் உள்ளனவா? இதுபோன்ற பணிகளைப் பாதிக்கும் ஒழுங்குவிதிகள் உள்ளதா? இப்பணியாளர்களுக்கு நோய்விடுப்பு, விடுமுறைச் சம்பளம் போன்ற பணிப்பலன்கள் கிடைக்கிறதா? பிற வேலைகளுடன் ஒப்பிடுகையில் இவற்றுக்கான கூலியின் அளவு என்ன?*

7. *சட்டம் அல்லது பாரம்பரியப்படி பெண்களை மட்டுமே அதிகளவில் நியமனம் செய்யும் தொழில்கள் உள்ளனவா? அவை எவை? ஆண்களை மட்டுமே அதிக அளவில் நியமனம் செய்யும் தொழில்கள் சட்டப்படி அல்லது பாரம்பரியப்படி உள்ளதா?*

8. *வழக்கமாகப் பெண்கள் முனைப்பு காட்டாதத் தொழில்களில் அவர்களும் வாய்ப்புகளைப் பெற அரசாங்கம் ஊக்குவிக்கிறதா?*

9. *வழக்கமாகப் பெண்களால் முயற்சிக்கப்படாத வேலைகளில் பயிற்சி எடுக்க பெண்கள் ஊக்குவிக்கப்படுகிறார்களா?*

10. *சமவேலைக்குச் சம ஊதியம் அல்லது ஒரே வேலையை சமமாக மதிப்பிடுவதில் பெண்களுக்கு சட்டப்படி உரிமை உள்ளதா? ஆண்களுக்கான கூலி வீதத்தில் பெண்கள் எவ்வளவு பெறுகிறார்கள்? சம்பளத்தில் உள்ள பாகுபாட்டை நீக்க வழிமுறைகள் உள்ளதா? இருந்தால் அவைஎவை? சமஊதியம் கிடைக்க வகைசெய்யும் சட்டங்கள் செயல்படுத்தப்படுவதில் இடையூறாக தடைகள் உள்ளதா? இருந்தால் அவை எவை? சம ஊதியச் சட்டங்கள் இருந்தால் பணித்தரம் எவ்வாறு மதிப்பிடப்படுகிறது? இம்மதிப்பீடானது சம அணுகுமுறைக்கு வழிகோலுகிறதா?*

11. *தொழிலாளர்களுக்குப் பொதுவாக இருக்கும் பணிப்பலன்கள் எவை? விடுமுறைச் சம்பளம், நோய் விடுப்பு, பணிப்பயிற்சிப் பலன்கள், முடக்கம் மற்றும் வயது மூப்பு பலன்கள் ஆண்களுக்கு கிடைப்பதுபோல் பெண்களுக்கும் சமமாகக் கிடைக்கிறதா?*

12. *மொத்த உழைப்பின் ஒரு பகுதியாகப் பெண்களின் வீட்டுப் பணிகள் கணக்கில் கொள்ளப்படுகிறதா? மேலும் அவை நாட்டின் நிகர மற்றும் மொத்த உற்பத்தியுடன் சேர்க்கும் அளவுக்கு அது தேசியப் புள்ளிவிபரத்தில் சேர்க்கப்படுகிறதா? நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்திக் கணக்கில் சம்பளம் தரப்படாத வேளாண்பணிகள் கணக்கில் கொள்ளப்படுகிறதா? பணியில் இருந்து ஓய்வு பெறுவது மற்றும் பணிப்பலன்களைப் பெறுவதற்கு வீட்டிலும், வேளாண்மையிலும் செய்யப்படும் சம்பளமில்லாப் பணிகள் கணக்கில் கொள்ளப்படுகிறதா?*

13. *சட்டப்படி ஆண் பெண் ஓய்வு வயது என்ன? வழக்கமாக ஆண்கள், பெண்களின் விருப்ப ஓய்வு வயது என்ன? ஓய்வூதியம் பெறுவதற்காக ஆண், பெண் இருபாலரும் சம அளவில்தான் பணம் கட்டுகிறார்களா?*

14. *நாட்டில் சமுதாயப்பாதுகாப்புச் சட்டம் இருந்தால் எல்லாப் பெண்களும் இச்சட்டத்தால் பலன் பெறுகிறார்களா? இல்லை எனில் எப்பிரிவினர் விலக்கப்பட்டுள்ளனர், எதனால்? தங்கள் கணவர்களுக்குக் கிடைப்பது போன்ற ஓய்வூதியப்பலன் மனைவிமார்களுக்கும், மனைவிமார் பெறும் ஓய்வூதியப்பலன் கணவன்மார்களுக்கும் கிடைக்கிறதா?*

15. *கருத்தரிப்பதால் வேலைப்பாதுகாப்பு பாதிக்கப்படுகிறதா? பாதிப்பிருந்தால், எப்படி? கர்ப்பிணிகள் அல்லது மகப்பேறு விடுப்பில் உள்ளவர்கள் பணிநீக்கம் செய்யப்படக்கூடாது எனக்கூறும் விதிகள் உள்ளதா? அப்படிச் சட்டவிதி இருந்தால், பணிநீக்கத்தைத் தடைசெய்யும் ஆணைகள் பிறப்பிக்கப்பட முடியுமா? எவ்வளவு கால இடைவெளிக்கிடையில் இந்த ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றது?*

16. *மகப்பேறு விடுப்புக்குரிய சட்ட விதிகள் எவை? சம்பளத்துடன் மகப்பேறு விடுப்பு எடுத்துக்கொள்ளும் சலுகை உள்ளதா? இருந்தால் அதைத் தருவது யார்? எந்த அளவுக்கு இது திறம்படச் செயல்படுகிறது? இது அமலாக்கப்படுகிறதா? மீறுபவர்களுக்கு என்ன தண்டனை வழங்கப்படுகிறது?*

17. பெற்றோர் விடுப்பு எடுக்கமுடியுமா? இருந்தால் பெற்றோர் இருவராலும் பகிர்ந்து கொள்ளப்பட முடியுமா? முடியுமெனில் ஆண்களுக்கு இதில் எத்தனை சதவீதம் கிடைக்கும்? பணிமூப்பு, பதவி உயர்வுமற்றும் பணி தொடர்பானப் பலன்களைப் பெறுவதில் இது போன்ற விடுப்புச் சலுகைகள் பாதிப்பு எதையும் ஏற்படுத்துகிறதா?

18. மகப்பேறு விடுப்பு அல்லது திருமண நிலை அடிப்படையில் பெண்களைப் பணிநீக்கம் செய்வதைத் தடுக்கும் சட்டமோ கொள்கைகளோ உள்ளதா? இருந்தால் அவை நடைமுறையில் இருக்கிறதா?

19. சம்பளத்துடன் கூடிய விடுப்பு ஆண் பெண் இருபாலருக்கும் ஒரே அளவில் கிடைக்கிறதா?

20. குடும்பப் பொறுப்புகளுக்கேற்ப ஆண்களும் பெண்களும் இணைந்து பணியாற்றுவதை அனுமதிக்கும் வகையில் நிரந்தர / பகுதிநேர வேலைவாய்ப்பு அல்லது வேலைப்பகிர்வு போன்ற தளர்வான பணிமுறைகள் உள்ளனவா? இருந்தால், அதை ஆண்களும் பெண்களும் சம அளவில் பயன்படுத்திக் கொள்கிறார்களா? இல்லையெனில், இவ்வாய்ப்புகளை யார் அதிகம் பயன்படுத்திக் கொள்கிறார்கள்? இதுபோன்ற தளர்வான பணியைச் செய்யும் வாய்ப்பு கிடைத்து, அதைச் செய்யும் போது பணிமூப்பு, பதவி உயர்வு மற்றும் பணிதொடர்பானப் பலன்களைப் பெறுவதில் இது இடையூறாக இருக்கிறதா?

21. பணிப்பாதுகாப்பை திருமணநிலை பாதிக்கிறதா?

22. பணியிடத்தில் உடல் நலன், பாதுகாப்புக்கான என்னென்ன சட்டங்கள், ஒழுங்குவிதிகள் நாட்டில் உள்ளன? பெண்களுக்கு இன்னலைத்தரக்கூடிய பணிகளில் ஈடுபடும் கர்ப்பிணிகளுக்குச் சிறப்பு பாதுகாப்பு அளிக்க வகைசெய்யும் சட்டங்கள் உள்ளதா? குறிப்பாக இன்னலைத் தரக்கூடிய பணிகள் எனக் கருதப்படக்கூடியவை எவ்வகையானவை?

23. குறிப்பிட்ட வகையான பணிகள், உதாரணமாக இரவுப்பணி, பூமிக்கடியில், சுரங்கப்பணிகள்அல்லது குறிப்பிட்ட தொழில்களில் பெண்கள் பங்கேற்கக் கூடாது எனத் தடைசெய்யும் தொழில்கள் உள்ளனவா? இருந்தால், எந்த அடிப்படையில் பெண்கள் பங்கேற்புக்குத்தடை விதிக்கப்படுகிறது? பெண்களுக்கான பொருளாதார வாய்ப்புகளில் இது போன்ற தடைகள் என்ன மாதிரியானத் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன? பணியாற்றும் பெண்களுக்குப் போதிய சுகாதார, பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்ற சட்டவிதிகள் இருந்தால் அவை அறிவியல், தொழில் நுட்ப முன்னேற்றங்களுக்கு ஏற்ப உள்ளனவா?

24. குழந்தை நல வசதிகளுக்கான ஏற்பாடுகள் நாட்டில் உள்ளதா? குழந்தைகள் பராமரிப்புக்கென என்ன வகையான வசதிகள் உழைக்கும் பெண்களுக்கு உள்ளது? நிதி உதவி அல்லது வேறு வகையான ஆதரவு எதையும் அரசாங்கம் அளிக்கிறதா? குழந்தைகள் பராமரிப்பு ஏற்பாடுகள் இருப்பின், அவை பயிற்சி பெற்றப் பணியாளர்களால் பேணப்படுகிறதா?

25. இதுபோன்ற மையங்கள் ஏற்படுத்தப்பட்டுச் செயல்பட முறைப்படுத்தும் சட்டப்பூர்வ நடைமுறை உள்ளதா? இருந்தால் அவை எவை?

26. *எத்தனை சதவீதத் தொழிலாளர்களுக்குக் குழந்தைப் பராமரிப்பு வசதி கிடைக்கிறது? 3 வயது வரையிலான குழந்தைகளில் எத்தனை சதவீதம் பேர் இவ்வசதிகளைப் பெறுகின்றனர்? 3 - 6 வயதினர் எத்தனை சதவீதம்?*

27. *பெற்றோரின் பணியிடத்தில் இருந்து தொலைவில் உள்ள பள்ளிகளில் படிக்கும் குழந்தைகள் எவ்வாறு பராமரிக்கப்படுகின்றன?*

28. *குழந்தைகளுக்குப் பாலூட்ட தாய்மார்களுக்கு சட்டப்படி போதிய கால அவகாசம் கிடைக்கிறதா? நடைமுறையில் இது உள்ளதா? பெண்கள் இச்சலுகைகளைப் பயன்படுத்திக் கொள்கிறார்களா?*

29. *உழைப்பாளர்களை ஒருங்கிணைத்துச் சங்கமாக்குவது எந்த அளவிற்கு உள்ளது? இச்சங்கங்களில் உள்ள உறுப்பினர்களில் பெண்கள் எத்தனை சதவீதம்? பெண்கள் அதிக அளவில் உள்ள பணியிடங்களில் சங்கமாவது எந்த அளவிற்கு உள்ளது?*

30. *பணியாளர்களில் பெண்களுக்கு எதிரான இன்னல்கள், வன்முறைக்கு எதிரான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா? எடுக்கப்பட்டிருந்தால் அவற்றைப் பற்றியும் அவற்றின் விரைவுகளையும் குறித்து விளக்கம் தருக?*

# விதி - 12 : சுகாதார நலனைப் பெறுவதில் சமத்துவம்

1. குடும்ப நலத்திட்டம் உள்ளிட்ட சுகாதாரச் சேவைகளை ஆண்களைப் போன்றே பெண்களுக்கும் கிடைக்கச் செய்ய சுகாதாரத் துறையில் பெண்களுக்கு எதிரானப் பாகுபாடுகளை ஒழிப்பதற்குத் தேவையான அனைத்து உகந்த நடவடிக்கைகளையும் உறுப்பு நாடுகள் எடுக்கும்.

2. மேற்கண்ட முதலாவது பத்தியில் கூறப்பட்டிருப்பது மட்டுமின்றி, கர்ப்பகாலம், பிரசவத்திற்குப்பிந்தைய மற்றும் வீட்டுக்குள் முடங்கி இருக்கும் காலங்களில் இவை தொடர்பானச் சேவைகள் கிடைப்பதை உறுப்பு நாடுகள் உறுதி செய்வதுடன், கர்ப்பக்காலம் மற்றும் பாலூட்டும் காலத்தில் தேவைப்படும் ஊட்டச்சத்தும் கிடைக்கச் செய்யவும் வேண்டும்.

## கருத்துரை

பெண்களின் நிலையானது சமத்துவமின்றி இருப்பது, அவர்களின் உடற்கூறுக்கேற்ப பேணலைப்பெறத் தடங்கலாகிவிடுகிறது என்பதை 12வது விதி ஒப்புக்கொள்கிறது. ஆதலால், ஆண்களைப் போன்றே பெண்களுக்கும் சுகாதார வசதிகளை நாடுகள் கிடைக்கச்செய்ய வேண்டும் என்பதை இவ்விதி அவசியமாக்குகிறது. இயலாமை, கல்லாமை அல்லது வசிப்பிடம் போன்ற காரணங்களால் சுகாதார வசதியைப் பெறமுடியாமற் போவது உள்ளிட்டு, பெண்களுக்கு சுகாதார வசதி கிடைக்கவிடாமல் செய்யும் அனைத்து சட்ட மற்றும் சமூகத் தடைகளையும் உறுப்புநாடுகள் நீக்க வேண்டியதாகிறது.

பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு உரிமைகளுக்கான, குடிமை, அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச ஒப்பந்தங்கள் இரண்டுமே கணவன் மனைவி இருவரும் தங்கள் குழந்தைகளின் எண்ணிக்கையையும், குழந்தைகளுக்கிடையே உள்ள வயது இடைவெளி குறித்துச் சுதந்திரமாகவும் பொறுப்புடனும் தீர்மானித்துக் கொள்வதை அவர்களது அடிப்படை உரிமையாக

அங்கிகரித்து இருக்கிறது. ஆனால், குடும்பக்கட்டுப்பாடு பற்றி மனித உரிமை உடன்படிக்கையில் இந்த உடன்படிக்கையின் 2வது விதிதான் முதல் முதலாகக் குறிப்பிட்டு உணர்த்துகிறது. ஆண்களைப் போன்றே பெண்களுக்கும் குடும்பக் கட்டுப்பாட்டு வசதிகளை நாடுகள் கிடைக்கச் செய்ய வேண்டும். குடும்ப நலச் சேவைகள் கிடைப்பது மட்டுமின்றி, இது தொடர்பான தகவல்களும் கல்வியும் கிடைக்கச் செய்யவேண்டும். இதன்படி, குடும்பக்கட்டுப்பாடு பற்றிய கல்வியும், தகவல்களும் ஆண் பெண் இருபாலருக்கும் கிடைக்கச் செய்வது அரசுகளுக்குக் கண்டிப்பாகிறது. குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்வதற்கான பெண் தன்கணவரின் அல்லது தனது உறவுக்கார ஆணின் ஒப்புதலைப் பெற்றாக வேண்டும் என்பது போன்றவை உள்ளிட்ட எந்தவொரு சட்டம் அல்லது கொள்கையும் குடும்ப நலத்திட்டத்தைப் பெறுவதில் பெண்களுக்குத் தடையாக இருப்பதும், இதுபோன்ற சுகாதார வசதிகளைப் பெற இப்படிப்பட்ட ஒப்புதலைப் பெறவேண்டும் என்பதும் இவ்விதிக்கு எதிரானதாகிறது.

கர்ப்ப காலம், வீட்டுக்குள் முடங்கி இருக்கும் காலம், மற்றும் பிரசவத்திற்குப் பிறகு கிடைக்கவேண்டிய குறிப்பிட்டச் சில தேவைகளை 12வது விதியின் 2-ம் பத்தி உணர்த்துகிறது. தேவைப்பட்டால் இலவசமாகவும் சுகாதார சேவைகளை தேவைப்படுமளவிற்கு அரசுகள் கிடைக்கச் செய்யவேண்டும் என்றும் கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்களுக்குத் தேவையான ஊட்டச்சத்தும் கிடைக்க உதவவேண்டும் என்றும் இவ்விதி கூறுகிறது. 12வது விதியின் நோக்கமும் பயன்பாடும் ‘‘சிடா’’வின் பொதுப்பரிந்துரைகள் பலவற்றை வெளிக்காட்டுவதாக உள்ளன. பெண் சிசுக்கொலைப் பழக்கத்தை ஒழிப்பதுடன் அதுபோன்ற, பாரம்பரிய மகப்பேறு மருத்துவர்களின் பங்குபணிகள் அடிப்படையில் சுகாதாரக் கொள்கை நடைமுறைகளையும் உறுப்பு நாடுகள் மேற்கொள்ள வேண்டுமென 14வது பொதுப்பரிந்துரை கேட்டுக் கொள்கிறது. பாலின வன்முறையானது பெண்களின் உடல்நலத்தில் பெரும் இடர்பாடுகளை ஏற்படுத்திவிடுகிறது என தனது 19வது பொதுப்பரிந்துரையில் குறிப்பிட்டு இருக்கும் ‘‘சிடா’’ கர்ப்பிணிகளுக்கு விதிக்கப்படும் உணவுக்கட்டுப்பாடு, பெண் சிசுக்கொலை போன்ற பாகுபாடுகள் உள்ளிட்ட பாரம்பரியப் பழக்கவழக்கங்களும் பெண்களின் உடல்நலத்திற்கு இன்னல் விளைவிக்கக் கூடியதாக உள்ளது என்பதையும் குறிப்பிட்டு இருக்கிறது.

‘‘எய்ட்ஸ்’’ ஒழிப்புக்கான தேசியத் திட்டங்களில் பெண்களுக்கு எதிராக உள்ள பாகுபாடுகள் 15வது பொதுப்பரிந்துரையின் உள்ளடக்கமாக உள்ளது ‘‘எச்.ஐ.வி’’, ‘‘எய்ட்ஸ்’’ கடுமை பற்றி பொதுமக்களிடையே குறிப்பாகக் குழந்தைகள், பெண்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சிகளை உறுப்பு நாடுகள் தீவிரப்படுத்த வேண்டுமென ‘‘சிடா’’ இதில் பரிந்துரைக்கிறது. ‘‘எய்ட்ஸ்ஸை’’ எதிர்க்கும் பணியில் பெண்கள், குழந்தைகளின் உரிமைகள், தேவைகளின் விசேஷ கவனம் செலுத்தப்பட வேண்டுமென்றும், பெண்களின் தாழ்நிலை மற்றும் மறுஉருவாக்க இயல்பால் எச்.ஐ.வி. தாக்குதலுக்குப் பெண்கள் உக்கிரமாக ஆட்பட்டுவிடுகின்றனர் என்பதைக் கணக்கில்கொள்ள வேண்டுமென்றும் இவற்றை நோக்கி அரசுகளின் திட்டங்கள் அமையவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. சுகாதாரப் பணியாளர்களாகப் பெண்களே கூடுதலாகப் பணியாற்ற வேண்டுமென்றும். எச்.ஐ.வி. பரவாமல் தடுப்பதில் செவிலியர்கள், சுகாதாரப் பணியாளர்கள். மற்றும் கற்றுக் கொடுப்பவர்களாகவும் பெண்களே இருக்க வேண்டுமென்றும் உறுப்பு நாடுகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

பாலின சமத்துவம் மற்றும் பெண்களை அதிகாரமிக்கவர்களாக ஆக்குவதற்கான 12வது விதியின் முக்கியத்துவமானது 1994-ல் நடந்த மக்கள் தொகை மேம்பாட்டுக்கான சர்வதேச மாநாட்டில் மறுபடியும் உறுதிப்படுத்தப்பட்டது.

## பொறுப்புடமையும் செயல்படுத்தலும்:

### கேட்கப்படும் கேள்விகள்

1. *சுகாதாரத் துறையில் பெண்களுக்கு எதிராக உள்ளப் பாகுபாட்டை ஒழிக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன?*
2. *சுகாதாரச் சேவைகளைப் பெறுவதில் ஆண்களைப்போல் பெண்களுக்கும் உரிமை உள்ளதா?*
3. *கருத்தரிப்புக் காலத்திலும் பிரசவத்திற்குப் பிறகும் இலவச மருத்துவச் சேவை கிடைக்கிறதா?*
4. *கருத்தரிப்பு காலத்திலும். குழந்தைக்குப் பாலூட்டும்போதும் பெண்களுக்கு ஊட்டச்சத்து கிடைக்க அரசு வகைசெய்கிறதா? செய்கிறது எனில், எந்த வழிகளில்?*
5. *பெண்கள் சுகாதாரத்திற்கென எம்மாதிரியான வசதிகள், பணியாளர்கள் கிடைக்க வாய்ப்புள்ளது? மருத்துவமனைகள், சுகாதார நிலையங்கள் மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள், சமுதாயச் சேவகர்கள் குடும்பநலத்திட்டப் பணியாளர்கள் போன்ற வசதிகளும் இதில் அடங்கும். பெண்களின் சுகாதாரத் தேவைகளுக்கு என்றே வசதி ஏற்பாடுகளோ, பணியாளர்களோ உள்ளனரா?*
6. *பெண்களின் இறப்பு மற்றும் நிரந்தர நோய்த்தன்மைக்குப் பெரும்பாலும் காரணமாக இருப்பவை எவை?*
7. *பேறுகால இறப்புவீதம் எத்தனை?*
8. *ஆண், பெண் குழந்தைகளில் சிசுமரணம் மற்றும் குழந்தை இறப்பு வீதங்கள் எவ்வளவு? பெண் குழந்தைகளில் சிசு மற்றும் குழந்தையின் இறப்பு, நிரந்தர நோய்த்தன்மை ஏற்படப் பெரும் காரணங்கள் எவை? ஆண் குழந்தைகளில் சிசு மற்றும் குழந்தையின் இறப்பு, நிரந்தர நோய்த் தன்மை ஏற்படப் பெரும் காரணங்கள் யாவை?*
9. *ஆண்கள், பெண்களில் சராசரி வாழ்நாள் எவ்வளவு?*
10. *ஆண்களில், பெண்களில் ஒழுங்கற்ற பிறப்பு வீதம், ஒழுங்கற்ற இறப்பு வீதம் எத்தனையெத்தனை?*
11. *எத்தனை சதவீதம் பெண்களுக்கு மகப்பேற்றுக்குப் பிறகு நல உதவி கிடைக்கிறது?*
12. *ஒரு பெண் சராசரி எத்தனை குழந்தைகளுக்குத் தாயாகிறாள்?*
13. *கருத்தடைக்காக இதுவரை நிறைவேற்றப்படாத தேவை என்ன?*
14. *சாதாரணமாக நடைமுறையில் இருக்கும் கருத்தடை முறை என்ன?*

15. குடும்பக் கட்டுப்பாடு உள்ளிட்ட சுகாதாரத் தேவைகளைப் பெறுவதில் பெண்களுக்கு இடையூறாக உள்ள சட்ட பண்பாட்டு தடைகள் எவை?

16. சுகாதாரத்துறையில் பணியாற்றும் பெண்கள் எத்தனை பேர்? இத்துறையின் எப்பிரிவுகளில் அவர்கள் பணியாற்றுகின்றனர்? இப்பிரிவுகளில் என்னென்ன பணிமூப்புகளில் அவர்கள் உள்ளனர்?

17. நாட்டில் பாரம்பரியச் சுகாதாரப் பணியாளர்கள் உள்ளார்களா? இருந்தால் அவர்கள் என்னென்ன செய்வார்கள்? இவர்களில் பெண்கள் எத்தனை சதவீதம்?

18. குடும்பக்கட்டுப்பாடு உள்ளிட்ட சுகாதாரச் சேவைகளை திருமணமான ஒரு பெண் பெறுவதற்கு சட்டப்படி அல்லது நடைமுறையில் கணவரின் ஒப்புதல் தேவையா?

19. குடும்பக் கட்டுப்பாட்டு நடைமுறைகளுக்கான சட்டங்களோ, கொள்கைகளோ நாட்டில் உள்ளதா?

20. கருக்கலைப்பு சட்டப்பூர்வமானதா? இருப்பின், எம்மாதிரியானச் சூழ்நிலையில்? கருக்கலைப்புக்கானச் செலவை தேசிய மருத்துவக்காப்பீடு அல்லது சமூகப்பாதுகாப்புத் திட்டம் ஏற்றுக் கொள்ளுமா? இலவசமாகவோ குறைந்த செலவிலோ ஏழைபெண்கள் கருக்கலைப்பு செய்துகொள்ள முடியுமா? கருக்கலைப்பு சட்டப்பூர்வமானது எனில், இதற்கான சேவைகள் நடைமுறையில் எப்படி உள்ளன?

21. வயிற்றில் உள்ள கருவைச் சோதிக்கும் வசதி உள்ளதா? இருப்பின், இவ்வாறு சோதித்தபின் கருக்கலைப்பு நடக்கிறதா? நடந்தால் அதற்கான பெரிய காரணங்கள் எவை?

22. கருக்கலைப்புக்கான சட்டங்களோ கொள்கைகளோ இருக்கிறதா? இருந்தால், கருக்கலைப்புக்காக தாயின் சம்மதம் கருத்தில் கொள்ளப்படுகிறதா?

23. சட்டப்படி செய்ய முடியாதென்றால் வேறு எந்த வழியிலாவது கருக்கலைப்பு நடக்கிறதா? இதுபோன்ற கருக்கலைப்பினால் ஏற்படும் இறப்பு அல்லது சுகவீனம் குறித்த புள்ளிவிபரங்கள் கிடைக்கிறதா? அரைகுறையாகக் கருக்கலைப்பு செய்யும் பெண்ணின் உடல் நலனைப் பேண என்ன வசதிகள் உள்ளன?

24. கருத்தரிக்க / கருத்தரிப்பு உருவாக்க முடியாமல் ஆக்கும் வசதி உள்ளதா? இருந்தால் இவ்வசதியைப் பெற்றுள்ள பெண்கள் எத்தனை பேர்? கருத்தரிக்கச் செய்யமுடியாத வசதியைப் பெற்றுள்ள ஆண்கள் எத்தனை பேர்?

25. கருத்தரிப்பதை அல்லது கருத்தடை செய்வதைத் தடுக்க உதவும் சட்டங்களோ கொள்கைகளோ உள்ளதா? இருந்தால் அச்சட்டங்களை கொள்கைகளை ஏற்காமல் இருப்பதற்குத் தண்டனைகள் எவை?

26. பெண்ணுறுப்பைச் சிதைப்பது போன்ற பழக்கங்கள் உள்ளதா? இருந்தால் எம்மாதிரியான சூழ்நிலைகளில் இது நடக்கிறது? இது சட்டப்பூர்வமானதா?

27. *பெண்களின் உடல் நலத்திற்கு இன்னலை ஏற்படுத்தும் கர்ப்பிணிகளுக்கான உணவுக்கட்டுப்பாடு போன்ற பழக்க வழக்கங்களை ஊக்குவிக்கும் சமூகக் குழுக்கள் நாட்டில் உள்ளதா? இருந்தால் இப்பழக்கவழக்கங்களை ஒழிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா?*

28. *பாலின நோய்கள், குறிப்பாக "எச்.ஐ.வி", "எய்ட்ஸ்" போன்றவற்றால் ஏற்படும் விளைவுகள் பற்றி நாட்டில் விழிப்புணர்வை அதிகரிக்க என்ன நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன? இந்த நடவடிக்கைகளில் ஏதேனும் பெண்கள், சிறுமிகளுக்கென மேற்கொள்ளப்பட்டுள்ளதா?*

29. *பாலின நோய்கள் குறிப்பாக "எச்.ஐ.வி", "எய்ட்ஸ்"க்கு எதிரான திட்டங்கள் எதுவும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதா? இருந்தால், பெண்கள் சிறுமிகளுக்கு என குறிப்பானத் திட்டங்கள் உள்ளனவா?" எச்.ஐ.வி", "எய்ட்ஸ்" போன்ற பால்வினை நோய்கள் ஏற்பட பெண்கள் துணை நிலைப்பட்டவர்களாக இருப்பதும் மறு உருவாக்கத்தன்மையுமே முக்கியக் காரணமாக இருப்பதுபற்றி இத்திட்டங்கள் கவனம் செலுத்துபவையாக இருக்கிறதா?*

30. *"எச்.ஐ.வி", "எய்ட்ஸ்" சிகிச்சைக்கான சுகாதாரப் பணியாளர்களாகப் பெண்கள் பங்கேற்க ஊக்குவிக்கப்படுகிறார்களா?*

# விதி - 13 : சமூக, பொருளாதாரப் பலன்கள்

ஆண் பெண் சமத்துவம், சம உரிமைகள் அடிப்படையில் பொருளாதார, சமுதாய வாழ்க்கையின் பிற பகுதிகளில் பெண்களுக்கு எதிரான பாகுபாட்டை ஒழிப்பதற்குத் தேவையான எல்லா உகந்த நடவடிக்கைகளையும் உறுப்பு நாடுகள் எடுக்கும். குறிப்பாக

அ. குடும்பப் பலன்களைப் பெறும் உரிமை

ஆ. வங்கிக் கடன்கள், அடமானங்கள் மற்றும் பிறவகைப்பட்ட நிதிக் கடன்களைப் பெறும் உரிமை

இ. பொழுதுபோக்கு நடவடிக்கைகள், விளையாட்டுகள் மற்றும் பண்பாட்டு வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் பங்கேற்க உரிமை

## கருத்துரை

பெண்களுக்கு எதிரான பொருளாதாரப் பாகுபாட்டை ஒழித்து, பொழுதுபோக்கு மற்றும் பண்பாட்டு வாழ்வில் சம உரிமைகளுடன் பெண்கள் பங்கேற்கச் செய்ய வேண்டுமென்பதை 13வது விதி அரசுகளுக்குக் கட்டாயமாக்குகிறது. அரசாங்கத்தால் மட்டுமின்றி, வேலை வாய்ப்பளிப்பவர் அல்லது நிதி நிறுவனம் போன்ற தனியார் துறையிலும் காட்டப்படும் பாகுபாட்டை நாடுகள் ஒழிக்கவும் இது கேட்டுக்கொள்கிறது. குடும்பத்திற்குச் சொந்தமான பலன்களைப் பெறுவதில் பெண்களுக்கும் சம உரிமைகள் கிடைக்கும். குடும்ப படிகள், காப்பீட்டு வசதிகள், வீட்டு வசதி மானியங்கள், குழந்தை நலம், நிதி அல்லது வரிக்கடன்கள் போன்றவை உள்ளிட்ட சமூக பொருளாதார அல்லது நிதிப் பலன்களை இவை உள்ளடக்கியவை. வங்கிக் கடன்கள், அடமானங்கள்,மற்றும் பிறவகைக் கடன்களைப் பெறுவதிலும் சமஉரிமைகள் அவர்களுக்கு உள்ளது. கடன் பெறுவதற்கென வேறுபட்டத்

தகுதிகள் பெண்களுக்குப் பொருந்தாது என்பதுடன் கடன் பெறுவதற்காக ஆண் உறவினர்களின் ஒப்புதலைப் பெண்கள் பெற வேண்டிய அவசியமும் இல்லை.

பொழுதுபோக்கு நடவடிக்கைகள், விளையாட்டுகள், பண்பாட்டு வாழ்வில் பெண்களுக்குரிய உரிமைகளை 13(இ) விதி திட்டவட்டமாக்குகிறது. மேற்கண்ட செயல்பாடுகளுக்குப் பெண்களை உரிமை படைத்தவர்களாக்குவதுடன், இத்துறைகளில் உண்மையிலேயே பெண்களும் ஆண்களைப்போல் பங்குபெறும் வகையில் நடவடிக்கைகளை அரசு எடுக்கச்செய்கிறது. இதற்கான முயற்சிகளுக்கு ஏற்படும் சட்ட, சமூகத் தடைகளை அரசுகள் அகற்ற வேண்டும். நிதி, மானியங்கள் மற்றும் பிறவகை ஆதரவுகளைப் பெறும் உரிமைகளில் இருக்கும் சமத்துவக் கோட்பாட்டை வலியுறுத்தும் வகையில் அவை நடந்து கொள்ள வேண்டும்.

## பொறுப்புடமையும் செயல்படுத்துலும்:

<u>**கேட்கப்படும் கேள்விகள்**</u>

1. *குடும்ப பலன் (Family Benefits) முறை நாட்டில் உள்ளதா? இருப்பின் அவை எவை?*

2. *குடும்பப்பயன்பாடுகள் இருந்தால் அவற்றை அங்கீகரிப்பது யார்? இப்பலன்களைப்பெற பெண்களுக்கு உரிமை உள்ளதா?*

3. *குழந்தைகளுக்கான படிகள், வீட்டுப்படிகள், வீட்டுவசதி, சுகாதார காப்பீட்டு வசதி அல்லது பிற அரசாங்க மானியங்கள் அல்லது படிகள் போன்ற குடும்ப பலன்களைப் பெறுவதில் திருமணமான பெண்களுக்கு தாங்களே தனிப்பட்டமுறையில் அல்லது பெற்றோர் என்ற முறையில் உரிமை உள்ளதா? இவற்றைப் பெறுவதற்கு திருமணமான, திருமணமாகாதப் பெண்கள் இருவருக்கும் ஓரே மாதிரியான உரிமை இருக்கிறதா?*

4. *பல்வேறான பலன்களும் யாரால் தரப்படுகின்றன? நேரடியாக அளிக்கப்படுகிறதா? அல்லது கடன் போன்ற வரிமுறைகள் அல்லது வரிகளில் கழிவு போன்றவற்றின் மூலம் வழங்கப்படுகிறதா?*

5. *உண்மையில் பலன்களை யார் பெறுகிறார்கள்? உதாரணமாக நேரடியாக தரப்பட்டால் அதைத்தருவது பிரதான கவனிப்பாளரிடமா அல்லது குடும்பத்திடமா?*

6. *வங்கிக் கடன்கள், அடமானங்கள், மற்றும் பிறவகை நிதிக்கடன்களை அரசிடம் இருந்தும் தனியார்துறையிடம் இருந்தும் பெற பொதுமக்கள் எந்த அடிப்படையில் தகுதிபடைத்தவர்களாகிறார்கள்?*

7. *தகுதிக்கானத் தேவைகள் ஆண்களையும் பெண்களையும் ஒரே மாதிரியாகத்தான் பாதிக்கிறதா? பெண்கள், குறிப்பாக திருமணமான பெண்கள் கடன்கள், அடமானங்கள், பிற வகை நிதிக் கடன்களைப் பெற முடியுமா? முடியாதெனில் தடைகள் என்னென்ன? கடன் பெற அவர்கள் கணவன்மாரின் அல்லது பிறிதொரு ஆணின் ஒப்புதலைப் பெறவேண்டியுள்ளதா?*

8. *தன்னிடம் நியாயமாக நடந்துகொள்வில்லை எனக்கூறும் ஒரு பெண், இதுபற்றி புகார் கூறி நிவாரணம் தேடும் அமைப்பு ஏதும் உள்ளதா?*

9. *பொழுது போக்கு நடவடிக்கைகள், விளையாட்டுகள் அல்லது பண்பாட்டு வாழ்வின் எந்த ஒரு அம்சத்திலும் பங்கேற்க பெண்களுக்குத் தடையாக உள்ள சட்ட, சமூக, பொருளாதார பண்பாட்டுத் தடைகள் எவை எவை?*

# விதி - 14 : ஊரக மகளிர்

1. ஊரகப் பெண்கள் எதிர்கொள்ளும் குறிப்பிட்ட பிரச்சனைகள், பொருளாதாரத்தில் பணத்தால் மதிப்பிடப்படாதத்துறைகளில் அவர்களது பணிகள் உள்ளிட்டு தங்கள் குடும்பங்களின் பொருளாதார வாழ்க்கைக்கான பங்களிப்பு ஆகிய அவர்களின் முக்கிய பங்குபணிகளை உறுப்பு நாடுகள் கணக்கில் கொள்வதுடன் இந்த உடன்படிக்கையின் விதிகள் ஊரகப்பகுதிகளில் உள்ள பெண்களுக்கும் பயன்தரத் தக்க வகையில் எல்லா உகந்த நடவடிக்கைகளையும் இந்நாடுகள் எடுக்கும்.

2. ஆண் பெண் சமத்துவ அடிப்படையில், ஊரக மேம்பாட்டில் பெண்கள் பங்கேற்கவும், பலன்களைப் பெறச்செய்வதற்காகவும் ஊரகப் பகுதிகளில் பெண்களுக்கு எதிரானப்பாகுபாடுகளை ஒழிப்பதற்கான உகந்த எல்லா நடவடிக்கைகளையும் உறுப்பு நாடுகள் எடுப்பதுடன் குறிப்பாக இப்பெண்களுக்கு கீழ்காணும் உரிமைகள் கிடைக்கச் செய்யப்படும்.

    அ) மேம்பாட்டுத் திட்டங்கள் விரிவாக்கம், நிறைவேற்றுவதில் அனைத்து மட்டத்திலும், பங்கேற்க

    ஆ) குடும்பக்கட்டுபாடு குறித்தத் தகவல்கள், ஆலோசனை, சேவைகளைப் பெறுவது உள்ளிட்ட போதிய சுகாதார வசதிகளைப் பெறுவதற்கு.

    இ) சமூகப்பாதுகாப்புத் திட்டங்களில் இருந்து நேரடியாகப் பலனடைய.

    ஈ) எழுதப்படிக்க மற்றும் அதுபோன்ற தொடர்பானவை உள்ளிட்ட முறையான, முறைசாராக் கல்வி, எல்லா வகையான பயிற்சிகளையும் பெற்றுக் கொள்ள தங்கள் தொழில்நுட்பச் சாமர்த்தியத்தை வளர்த்துக்கொள்ளும் வகையில் எல்லா சமூக மற்றும் விரிவாக்க சேவைகளின் பலன்களையும் பெற்றுக் கொள்ள.

    உ) சுயஉதவிக் குழுக்களை அமைத்துக் கொள்ளவும், வேலைவாய்ப்பு, சுயவேலைவாய்ப்பு மூலமாக பொருளாதார வாய்ப்புகள் கிடைப்பதில் சம உரிமைகள் பெற்றிடவும்.

    ஊ) சமூக நடவடிக்கைகள் அனைத்திலும் ளளளபங்கேற்க.

    எ) வேளாண் கடன்கள், சந்தையிடும் வசதிகள், தேவையான தொழில்நுட்பத்தைப் பெறுவதற்கும், நிலத்திலும் வேளாண்சீர்திருத்தத்திலும் அதேபோல நில மறுசீராக்கத் திட்டங்களில் சம அணுகுமுறை கிடைக்க.

    ஏ) போதிய வாழ்க்கை வசதிகள் குறிப்பாக வீட்டுவசதி, குடிநீர், கழிவறை, மின்சாரம் போக்குவரத்து தகவல் தொடர்பு போன்றவற்றை அனுபவிக்க.

## கருத்துரை

ஊரகப்பெண்கள் தங்கள் குடும்பங்கள், சமூகங்களின் பொருளாதார வாழ்வில் குறிப்பிடத்தக்க பங்காற்றுகின்றனர். அவர்களது பங்களிப்பு அவ்வப்போது இருப்பினும், தங்கள் முயற்சிகளுக்கான, அங்கீகாரம் கிட்டாமலோ அல்லது ஓரளவே பெறமுடிவதுடன் அவர்கள் உழைப்பின் பலன்களை, வளர்ச்சிப் பணிகளின் பலன்களைப் பெறமுடியாமல் மறுக்கப்படுகின்றனர். ஊரகப் பெண்களுக்கும் இந்த உடன்படிக்கையின் பலன்கள் சென்றடையச் செய்யவும் அவர்களுக்கு எதிரான பாகுபாட்டை ஒழித்து அதன் மூலம் ஊரக மேம்பாட்டில் அவர்கள் பங்கேற்று அதன் பலன்களை அனுபவிக்கச் செய்யவும் உறுப்புநாடுகளைக் கட்டாயப்படுத்துவதன் மூலம் இக்குறையைப் போக்க 14-வது விதி முயலுகிறது. மேம்பாட்டுத்திட்டங்களைத் திட்டமிடுதலிலும் நிறைவேற்றுவதிலும் ஊரகப்பெண்கள் பங்கேற்பதை அரசுகள் உறுதிப்படுத்த 14வது விதி வகைசெய்கிறது. ஊரகப் பெண்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்வதாகவும் அவர்களது விசேஷ மேம்பாட்டுத் தேவைகளை நிறைவேற்றுவதாகவும், வளர்ச்சிபணிகள் அமைதல் அவசியம். போதிய சுகாதார வசதிகள் குடும்ப நலத்திட்ட தகவல், ஆலோசனை சேவைகளைப் பெற்றிடவும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களில் இருந்து நேரடியாக அவர்களே பலன்பெறவும் ஊரகப் பெண்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். கல்வி பயிற்சிகள் குறிப்பாக எழுதப் படிக்க தெரிந்து கொள்ளும் உரிமை கிடைப்பதுடன் பணி மற்றும் சுய வேலை வாய்ப்பு, விவசாயம் தொடர்பான கடன் வசதிகள் மூலம் பொருளாதார வாய்ப்புகளைப் பெறும் உரிமைகளும் ஊரகப்பெண்களுக்குக் கிடைக்கவேண்டும். சந்தை வசதிகள், தொழில் நுட்பவசதி மற்றும் நிலச்சீர்திருத்தம், மறுசீரமைப்புத் திட்டங்களில் சம அணுகுமுறை அவர்களுக்கு கிடைக்க வேண்டும். இவற்றைக் காட்டிலும், ஊரகப் பெண்களுக்கு எப்போதுமே துயரத்தை அளிக்கும் தனிமைப்படுத்துதலைப் போக்கும் வகையில் அவர்களுக்கு வீட்டு வசதி, மின்சாரம், கழிவறை, குடிநீர், போக்குவரத்து, தகவல் தொடர்பு போன்ற போதிய வாழ்க்கை வசதிகளை அரசுகள் ஏற்படுத்தித் தர வேண்டியுள்ளது.

## பொறுப்புடமையும் செயல்படுத்தலும்:

### <u>கேட்கப்படும் கேள்விகள்</u>

1. *இந்த உடன்படிக்கையின் கீழ் உள்ள உரிமைகள் பற்றி ஊரகப்பெண்களுக்குத் தெரியுமா? இவற்றை அவர்கள் அறிந்து கொள்ள என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எடுக்கப்பட்டு வருகின்றன?*

2. *ஊரகப் பகுதிகளில், திருமணமான, விதவையான, விவாகரத்து பெற்ற, திருமணமாகாத, குழந்தை இல்லாத பெண்கள் ஒருவரிடமிருந்து மற்றொருவரிடம் வேறுபட்ட அணுகுமுறை காட்டப்படுகிறதா?*

3. *வேளாண் பணிகளில் எத்தனை சதவீதம் பெண்களால் செய்யப்படுகின்றன? சமையல், சுத்தப்படுத்துதல், தண்ணீர் எடுப்பது, குழந்தைப்பராமரிப்பு, சந்தைக்குப் போவது போன்றவை உள்ளிட்டு பொதுவாக எந்தவகைப் பணிகளை ஊரகப் பெண்கள் செய்கின்றனர்?*

4. *பொருளாதார வேளாண்கொள்கைகளை உருவாக்குவதில் ஊரகப் பெண்கள் பங்கேற்கிறார்களா? அவர்களது பங்களிப்பு தேசத்தின் மொத்த உற்பத்தியில் சேர்க்கப்படுகிறதா?*

5. *அரசாங்கத்திலும், மேம்பாட்டுத்திட்டங்களில் சம்மந்தப்படும் அமைப்புகள், ஆணையங்களில் ஊரகப் பெண்பிரதிநிதிகள் உள்ளனரா? இருந்தால் எண்ணிக்கை வீதம், பங்களிப்பு*

6. *ஊரகப் பெண்களின் தேவைகளுக்காக என்ன விசேஷ திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன? ஊரகப்பெண்களின் நலனுக்கான திட்டங்களுக்கு எனத் தனியாக தேசிய பட்ஜெட்டில் நிதி ஒதுக்கப்படுகிறதா? ஆம் எனில், அவை எவை?*

7. *ஊரகப் பகுதி பெண்களுக்காக குடும்பநலத்திட்டச் சேவைகள் வழங்க வகைசெய்யும் தேசியக் கொள்கை இருக்கிறதா? அது என்ன? ஆண் பெண் இருபாலரையுமே போய்ச்சேரும் விதத்தில் எந்த அளவுக்குக் குடும்பநலத்திட்டங்கள் உள்ளன?*

8. *குடும்ப நலத்திட்டம் உள்ளிட்ட சுகாதார வசதிகள் நகரங்களை ஒப்பிடுகையில் ஊரகப்பகுதிகளில் எந்த அளவுக்குக் கிடைக்கின்றன? குடும்பநலச் சேவைகள் ஆலோசனைகளைப் பெறுவதில் ஊரகப் பெண்களிடம் உள்ள சங்கடங்கள் என்ன? அவர்களைத் தடுப்பது எது?*

9. *ஊரகப் பெண்களுக்குப் பாதுகாப்பான கருத்தடை வசதி கிடைக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன? அதைத் தொடர்ந்து ஏற்படுத்தபட்டு இருக்கும் வசதிகள் எவை?*

10. *நகர்ப்புறப் பெண்களுடன் ஒப்பிடுகையில் ஊரகப் பெண்களில் இறப்பு வீதம் எவ்வளவு? பிரசவகால இறப்பு வீதம், வாழ்நாள் வருடம், ஊட்டச்சத்து நிலை, பிரசவத்திற்கு முன் கிடைக்கும் பராமரிப்பு வீதம், குடும்ப நலத்திட்டச் சேவைகள் எவ்வளவு?*

11. *நகர்ப்புறங்களை ஒப்பிடுகையில் ஊரகப்பகுதிகளில் சிசு மரணம் எத்தனை வீதம்?*

12. *சமூகப்பாதுகாப்புத் திட்டங்கள் ஊரகப் பெண்களுக்கு உண்டா? அவர்களுக்கெனத் தனியாக திட்டம் எதுவும் உள்ளதா? இவற்றைப் பெறுவதற்கானத் தகுதி எப்படி நிர்ணயம் செய்யப்படுகிறது?*

13. *ஊரகப் பெண்களுக்கு அப்பகுதியிலேயே கல்வி, பயிற்சி கிடைக்கிறதா? பயிற்சி நடந்தால் எத்தனைப் பெண்கள் கலந்து கொள்கிறார்கள் என்பதற்கான புள்ளி விபரம் உள்ளதா?*

14. *ஊரகப் பெண்கள், சிறுமிகளின் ஆரம்ப, உயர்நிலை மற்றும் பல்கலைக்கழக கல்வி நிலையப் பதிவு பெற்றோர் வீதம் எவ்வளவு? நகர்ப்புறத்தை ஒப்பிடுகையில் எத்தனை சதவீதம்?*

15. *ஊரகப் பெண்கள் 15 - 24 வயதுடையோரில் எத்தனை சதவீதம் படிப்பறிவு இல்லாதவர்கள்? 25-44 வயதில் எத்தனை சதவீதம்? இதே வயதினரில் நகர்ப்புறப்பெண்கள் எத்தனை சதவீதம்?*

16. *ஊரகப்பகுதிகளில் பெண்களுக்கு என சுய உதவிக் குழுக்கள் அல்லது கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளதா? ஊரகப் பெண்கள் சுய உதவிக் குழுக்களாக அமையவும், கூட்டுறவு அமைப்புகளில் பங்கேற்கவும், பிற பொருளாதார அல்லது வளர்ச்சித் திட்டங்களில் தனிப்பட்ட முறையில் பங்கெடுக்கவும் அரசு அனுமதிக்கிறதா? இல்லை எனில் இடையூறுகள் என்ன?*

17. *மேற்கண்ட குழுக்கள் இருந்தால் அவை வேலைவாய்ப்பு அல்லது சுய வேலைவாய்ப்பு மூலம் பெண்கள் தனிப்பட்ட முறையில் பொருளாதார வாய்ப்புகளைப் பெற அனுமதிக்கின்றனவா? இல்லை எனில் அவற்றின் செயல்பாடு என்ன?*

18. *நாட்டில் சந்தை வசதிகள் உள்ளதா?இருந்தால் இவை ஊரகப் பெண்களின் தேவையில் எவ்வளவு கவனம் செலுத்துகின்றன? ஊரகச்சந்தை வசதிகளைப் பெண்கள் பயன்படுத்திக் கொள்கிறார்களா? இந்த வசதிகளில் எத்தனை சதவீதம் பெண்களால் பயன்படுத்தப்படுகின்றன?*

19. *நேரடியாகப் பெண்களைச் சென்றடையும் வகையில் விரிவாக்கச் சேவைகள் வடிவமைக்கப்பட்டுள்ளதா? ஊரகப் பகுதிகளுக்கான வேளாண் கடன்களில் எத்தனை சதவீதம் உண்மையில் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளது?*

20. *ஆவணப்படியான நில உரிமையாளராக பெண்களால் முடியுமா? நில உரிமையைப் பெண்கள் தங்கள் கணவன்மாரிடம் இருந்து அல்லது தந்தைகளிடம் அல்லது சகோதரர்களிடம் அல்லது பிறஉறவினரிடம் இருந்து பெறுகிறார்களா?*

21. *நாட்டில் நில அல்லது வேளாண் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதா? ஆம் எனில், ஊரகப் பெண்களின் நில உரிமையை எவ்வாறு பாதித்துள்ளது?*

22. *ஊரகப் பெண்களுக்குத் தேவைப்படும் வாழ்நிலை வசதிகளுக்காக என்ன குறிப்பிட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன?*

23. *ஊரகப் பெண்களின் தேவைகளைக் கணக்கில் கொண்டு வீட்டுவசதி, கழிவறை, மின்சாரம், குடிநீர் வசதி போன்றவை தொடர்பாக விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதா?*

24. *ஊரகப் பெண்களின் தேவைகளைக் கணக்கில்கொண்டு போக்குவரத்து, தகவல் தொடர்பு வசதிகள் தொடர்பாக விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதா?*

25. *கழிவறை, மின்சாரம், குடிநீர் வசதி, போக்குவரத்து. தகவல் தொடர்பு ஆகியவற்றில் சீர்திருத்தம் செய்யப்படுகையில் ஊரகப் பெண்களின் தேவைகள் கணக்கில் கொள்ளப்பட்டுள்ளதா? திட்டமிடுதல், முடிவெடுத்தலில் ஊரக மகளிர் ஈடுபடுகிறார்களா?*

26. *எம்மாதிரியான சமூக நடவடிக்கைகளில் ஊரகப் பெண்கள் பங்கேற்கிறார்கள், இவ்வாறு பங்கேற்பதைத் தடுக்கும் மத அல்லது பண்பாட்டுப் பாரம்பரியம் ஏதும் உள்ளதா?*

## விதி - 15 : சட்டத்தின் முன்னாலும் குடியுரிமைகளிலும் சமத்துவம்

1. சட்டத்தின் முன்னால் ஆண்களுக்கு இணையாகப் பெண்களுக்கும் சமத்துவத்தை உறுப்பு நாடுகள் வழங்கும்.

2. குடியுரிமைகளைப் பொருத்தவரை ஆண்களுக்கு இருக்கும் சட்டப்பூர்வ உரிமைகள் பெண்களுக்கும் கிடைக்கவும் அந்த உரிமைகளைப் பயன்படுத்துவதில் ஒரே மாதிரியான வாய்ப்புகள் கிடைக்கவும் உறுப்பு நாடுகள் ஆவன செய்யும். ஒப்பந்தங்களைச் செய்து

கொள்ள, சொத்துக்களை நிர்வகிக்க பெண்களுக்கு சம உரிமைகளை வழங்குவதுடன், நீதிமன்றங்கள்,தீர்ப்பாயங்களின் அனைத்து நடவடிக்கைகளிலும் அவர்களைச் சமமாக நடத்தவும் செய்யப்படும்.

3. பெண்களுக்குரிய சட்டப்பூர்வ உரிமைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சட்டவிளைவுகளை ஏற்படுத்தும் எல்லா ஒப்பந்தங்களும் மற்றும் அனைத்து பிற தனியார் ஆவணங்கள் எவ்வகைப்பட்டதாயினும் அவை செல்லத்தக்கவையல்ல என்பதுடன் அவற்றை ரத்து செய்யவும் உறுப்பு நாடுகள் ஒப்புக் கொள்கின்றன.

4. மனிதர்கள் நடமாட்டம் மற்றும் தங்கள் இருப்பிடம். வீடு ஆகியவற்றைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் தொடர்பான சட்டத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே மாதிரியான உரிமைகளை உறுப்புநாடுகள் வழங்கும்.

## கருத்துரை

சட்டத்தின் முன்னால் ஆண்களுக்கு இணையாகப் பெண்களுக்கும் சமத்துவத்தை உத்தரவாதப்படுத்தி அவர்களின் சட்டத்தன்னுரிமையை உறுப்புநாடுகள் உறுதிப்படுத்துவதை 15-வது விதி கட்டாயமாக்குகிறது. குடியுரிமைகளில் ஆண்களைப் போன்று பெண்களுக்கும் சம சட்டபூர்வ உரிமைகளை உத்தரவாதப்படுத்துவதுடன் அவற்றைப் பயன்படுத்துவதிலும் அதே போன்ற வாய்ப்புகளைப் பெறவும் முடியும். பாரம்பரியப்படி ஆண்களைவிடக் குறைவாக பெண்களுக்கு கிடைத்துவந்த ஒப்பந்தங்கள் சொத்துரிமை வழக்குவியாஜ்யங்கள் தொடர்பானவை உள்ளிட்ட சட்டப்பூர்வ உரிமைகள் குறிப்பிடத்தக்க வகையில் முக்கியத்துவம் பெற்றுள்ளன. இதன்படி, எந்தவொரு ஒப்பந்தத்தையும் செய்ய முடியாமல் பெண்களின் சட்டஉரிமையைக் கட்டுப்படுத்தும் சொத்துக்கு உரிமை கொண்டாட வரம்பு விதிக்கும். நீதிமன்றங்கள் தீர்ப்பாயங்களில் தனது நிலைபாட்டை எடுத்துக் கூறுவதைக் கட்டுப்படுத்தும் எந்த ஒரு சட்டமும் நீக்கப்பட அல்லது திருத்தப்பட வேண்டும் என்பதுடன் இதுபோன்ற நடைமுறை எதுவும் இருந்தால் அதை ஒழிப்பதற்கான முன்னேற்ற நடவடிக்கைகளை உறுப்பு நாடுகள் எடுத்தாகவும் வேண்டும். திருமணம் குடும்ப உறவுகளில் சமத்துவத்தை வலியுறுத்தும் “சிடா”வின் 21வது பொதுப்பரிந்துரை 15-வது விதியில் பெண்களுக்கு உத்ரவாதம் செய்யப்பட்டுள்ள உரிமைகளின் முக்கியத்துவத்தை விளக்குகிறது. பெண்களின் ஒப்பந்தம் செய்யும் உரிமை, கடன் பெறும் உரிமை, சொத்துரிமையைக் கட்டுப்படுத்துவது அவர்களது திறமையை மிகக் கடுமையாக மட்டுப்படுத்திவிடுவதுடன் அவர்களைச் சார்புத்தன்மை கொண்டவர்களாகவும் மாற்றிவிடுகிறது. சட்ட ஆலோசனையைப் பெற இயலாமை, சட்டப்பூர்வ அதிகாரமின்மை அல்லது நீதிமன்றத்திற்குள் சாட்சியமளிக்கவோ, விசாரிக்கப்படவோ சமத்துவமின்மை இவையெல்லாம் ஆண்களுக்கு இணையாகப் பெண்களுக்கு உரிமைகளை மறுப்பதுடன் மறுபடியும் அவர்களை திறமையற்றவர்களாகவும், சார்புத்தன்மை கொண்டவர்களாகவும் மாற்றிவிடுகிறது.

குடியுரிமைகளில் பெண்களுக்கு முழுசமத்துவத்தைப் பேண சட்டத்திருத்தம், முன்னேற்றமான நடவடிக்கைகளை எடுப்பதுடன் உறுப்பு நாடுகள் நின்று விடாமல் 15-வது விதிப்படி அவை பெண்களின் சட்டப்பூர்வ உரிமைகள், குடியுரிமைகளைக் கட்டுப்படுத்தும். எந்தவொரு தனியார் ஒப்பந்தத்தையும் செல்லாது எனக்கூறி ரத்து செய்யவும் வைக்கிறது. இருப்பிடம், வீடு ஆகியவற்றைத் தேர்வு செய்வது, ஆட்கள் நடமாட்டம் தொடர்பான சட்டத்தில் சமத்துவம் இருக்க 15(4)வது விதி

வகைசெய்கிறது. 21-வது பொதுப் பரிந்துரையில் “சிடா” தெளிவாகக் கூறியுள்ளபடி, ஓர் ஆணைப் போன்று இருப்பிடத்தைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை, ஒரு பெண்ணுக்கு மறுப்பது அவள் வாழும்நாட்டு நீதிமன்றங்களை அவளால் நாடமுடியாமல் போகும்படிச் செய்து அவளது விருப்பப்படி இன்னொரு நாட்டைவிட்டுச் செல்ல முடியாமலும் அல்லது ஒரு நாட்டுக்குள் நுழைய முடியாமலும் ஆக்கி இதனால் 15வது விதிக்கு முரண்பாடாகச் செயல்படுவதாகி விடுகிறது. மேலும், திருமணமான பெண்ணின் இருப்பிடச் சார்புத்தன்மை அல்லது கணவருக்கு குடும்பத்தின் இருப்பிடத்தைத் தேர்வு செய்யும் உரிமையை ஏற்படுத்தும் கோட்பாட்டை உடைய எந்தச் சட்டமும் இக்கோட்பாடுகளின் அடிப்படையில் பழக்கவழக்கம் அல்லது நடைமுறை எதுவுமே இந்தவிதியின்படி பாகுபாடானதாகவே கருதப்படும்.

## பொறுப்புடமையும் செயல்படுத்தலும்:

### <u>கேட்கப்படும் கேள்விகள்</u>

1. *ஒப்பந்தங்களைச் செய்து கொள்வதில், சொத்துக்களை நிர்வகிப்பதில், சட்டப்பூர்வ உரிமைகளை வழங்கும் சட்டத்தைப் பயன்படுத்துவதில் ஆண்களைப் போன்றே பெண்களும் சமமாகக் கருதப்படுகிறார்களா?*

2. *பணப்பட்டுவாடா, ரியல் எஸ்டேட், பிற சொத்துக்கள் தொடர்பானவை உள்ளிட்ட ஒப்பந்தங்கைளயும் அதேபோல் பிற வர்த்தகப் பரிமாற்றங்களையும் தங்கள் பெயரிலேயே செய்துகொள்ளப் பெண்களுக்கு உரிமை உள்ளதா? கணவரின் அனுமதியின்றி கருத்தடை செய்து கொள்வது போன்று பெண்கள் தாங்களாகவே உடல்நலன் குறித்த முடிவை எடுக்க முடியுமா?*

3. *சொத்தை நிர்வகிப்பதில் ஆண்களுக்குரிய உரிமைகள் பெண்களுக்கும் இருக்கிறதா? பண்ணைச் சொத்துக்களுக்கான நிர்வாகிகளாகவோ அல்லது அவற்றின் ஆவணங்களைச் செயல்படுத்துபவராகவோ பெண்களால் இருக்க முடியுமா?*

4. *திருமணத்தின்போதோ, திருமணத்தின் மூலமாகவோ, அல்லது திருமணம் ஆகாமலே கிடைத்துள்ள சொத்தாக இருந்தாலும் அல்லது வேறு எந்த வகையில் பெற்றச் சொத்தாக இருந்தாலும் அதை எந்த ஒரு ஆணுடைய ஒப்புதல் அல்லது ஈடுபாடின்றி நிர்வாகம் செய்ய பெண்களுக்கு உரிமை உள்ளதா? இல்லை எனில், ஏன் முடியாது?*

5. *பெண்களின் சட்டப்பூர்வ உரிமைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ஏற்படுத்தப்படும் ஒப்பந்தங்கள் ஆவணங்கள் செல்லாது, ரத்து செய்யப்படும் எனக்கூறும் 15(3) வது விதிக்கு நாட்டில் செயல்வடிவம் கொடுக்கப்பட்டு விட்டதா? இதுபோன்ற ஒப்பந்தங்கள், ஆவணங்கள் என்பனவற்றில் பெண்களின் சட்டப்பூர்வ உரிமைகளைக் குறிக்கும் திருமண ஒப்பந்தங்கள், தங்கள் சார்பில் பேச்சுவார்த்தை நடத்த பெண்கள் உரிமைகளை விட்டுக் கொடுத்துவிடும் வர்த்தக ஒப்பந்தங்களும் அடங்கும்.*

6. *நீதிமன்றங்களில் பெண்கள் சமமாக நடத்தப்படுகிறார்களா? பெண்கள் தங்கள் பெயரிலேயே வழக்குத் தொடரவோ அல்லது பெண்கள் மீது அவர்கள் பெயரிலேயே வழக்குத்*

*தொடரப்படவோ முடியுமா? சட்ட அமைப்பில் ஆண்களுக்கு இருப்பதைப்போன்றே உரிமையை பெண்களும் எடுத்துக் கொள்ள இயலுமா? ஒரு ஆண் தரும் சாட்சியத்தைப் போன்றே பெண்ணின் சாட்சியமும் எடுத்துக் கொள்ளப்படுகிறதா? நீதிமன்றங்களிலும் தீர்ப்பாயங்களிலும் கட்சிக்காரர் சார்பில் பெண் வழக்குரைஞர்கள் வாதிட முடியுமா? நீதிபதிகளாக அல்லது பிற குடிமக்கள் குழுக்களில் இடம் பெற பெண்களுக்கு உரிமை உள்ளதா? நீதித்துறை, குடிமை(சிவில்), பாரம்பரிய மற்றும் மத நீதிமன்றங்களில் அவர்கள் பணியாற்ற முடியுமா? அப்படிப் பணியாற்றுகிறார்களா?*

7. *சட்டச் சேவைகளில் பெண்களுக்குச் சமவாய்ப்பு உள்ளதா? இதற்காகப் பணம் கட்ட முடியாவிட்டால் இலவசச் சட்ட உதவி கிடைக்கிறதா? இலவசச் சட்ட உதவி கிடைக்க வாய்ப்பு இருந்தால் ஆண்களைப் போன்றே, பெண்களுக்கும் கிடைக்கிறதா? கிடைத்தால் இதுபற்றி பெண்களுக்குத் தெரிந்து இதன் பலனை அனுபவிக்கிறார்களா? இல்லை என்றால் ஏன்?*

8. *ஒரே சூழ்நிலைகளின் கீழ் ஒன்றுபோல் அமையும் விபத்துக்காயங்களுக்கான இழப்பீட்டுத் தொகை கிடைப்பதில் ஆண் பெண் வேறுபாடு உள்ளதா? அல்லது ஆண்களைப் போன்றே பெண்களுக்கும் கிடைக்கிறதா?*

9. *பெண்களுக்கும் ஆண்களுக்குமிடையே வெவ்வேறான தாக்கங்களை ஏ்ற்படுத்தும் நீதிமன்ற நடைமுறைகள் பற்றிய ஆய்வு எதுவும் மேற்கொள்ளப்பட்டு இருக்கிறதா?*

10. *ஆண்களுக்கு என இல்லாமல், பெண்களுக்கென்று மட்டும் சிறப்பு பிரதிவாத வழக்குரைஞர்களை நியமிப்பது போன்ற சட்டக் கோட்பாடுகள் உள்ளனவா?*

11. *சுதந்திரமாக நடமாடவும், விருப்பம்போல் இருப்பிடத்தைத் தேர்வு செய்யவும் இருபாலருக்கும் சமமான சட்ட உரிமைகள் இருக்கிறதா? பெண்களுக்கு அவர்கள் விரும்பும் இடத்தில் வசிக்க உரிமை உள்ளதா? இந்த உரிமையைத் தடுக்கும் பாரம்பரிய அல்லது பழக்க வழக்கம் எதுவும் நடைமுறையில் உள்ளதா?*

12. *பெண்களுக்கு தங்கள் வசிப்பிடத்தைத் தேர்வு செய்வதில் அவர்களது திருமணம் தடைக்கல்லாக இருக்கிறதா?*

13. *ஒரு பெண்ணின் வசிப்பிடம் அவரது தந்தையைச் சார்ந்ததா அல்லது கணவரைச் சார்ந்ததா? எம்மாதிரியான சூழ்நிலையில் அவர் தனது பிறந்த இடத்தையே வசிப்பிடமாக்கிக் கொள்கிறார்?*

14. *பிற நாடுகளில் குடியேற அல்லது தாற்காலிக பணிக்காக குடிபெயரும் பெண்களுக்கும் ஆண்களைப்போல் தங்கள் கணவர், குழந்தைகளையும் தங்களுடன் கூட்டி வந்து சேர்த்துக்கொள்ள உரிமை உள்ளதா?*

## விதி - 16 : திருமணம் மற்றும் குடும்பச்சட்டங்களில் சமத்துவம்

1. திருமணம் மற்றும் குடும்ப உறவுகள் தொடர்பான அனைத்திலும் பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை ஒழிக்க, ஆண் பெண் சமத்துவ அடிப்படையில் எல்லா உகந்த நடவடிக்கைகளையும் உறுப்பு நாடுகள் எடுக்கும்.

### குறிப்பாக:

அ. திருமணம் செய்து கொள்வதற்கு ஒரேமாதிரியான உரிமை:

ஆ. விருப்பப்படி துணையைத் தேர்ந்தெடுக்கவும், பரஸ்பர சுதந்திரத்துடனும் முழு ஒப்புதலுடனும் திருமணப் பந்தத்தை உருவாக்கிக் கொள்வதிலும் ஒரேமாதிரியான உரிமை

இ. திருமணத்தின்போதும், பிரிவின்போதும் ஒரே மாதிரியான உரிமைகளும் பொறுப்புகளும்

ஈ. குழந்தைகள் தொடர்பானவற்றில் பெற்றோர் என்ற முறையில் இருவருக்கும் சம உரிமைகள் எல்லாச் சமயத்திலும் குழந்தைகள் நலனே தலையானதாகக் கொள்வது

உ. குழந்தைகள் எண்ணிக்கை, இடைவேளி குறித்தும், அவர்களுக்குத் தேவையானத் தகவல்களை கொடுப்பது, கல்வி மற்றும் அவர்கள் தங்கள் உரிமைகளைப் பயன்படுத்த வைப்பது ஆகியவை பற்றிப் பொறுப்புணர்வோடும் சுதந்திரமாகவும் முடிவு எடுக்க ஒரே மாதிரியான உரிமைகள்:

ஊ. குழந்தைகளுக்குப் பாதுகாப்பு அளிப்பது, மேற்பார்வையிடுவது, நிர்வாகப் பாதுகாவலராக இருப்பது மற்றும் தத்தெடுப்பதிலும் அல்லது இதுபோன்ற அமைப்புகள் உள்ள தேசியச் சட்டங்களிலும் இருக்கும் ஒரே மாதிரியான உரிமைகளும், பொறுப்புகளும், எல்லா அம்சங்களிலுமே குழந்தைகளின் நலன்தான் மிகவும் பிரதானம்

எ. குடும்பப் பெயர், செய்தொழில், பணியைத் தேர்வு செய்வதில் கணவன், மனைவி என்ற முறையில் இருவருக்குமே ஒரே மாதிரியான தனிப்பட்ட உரிமைகள்

ஏ. சொத்துக்களை சொந்தம் கொண்டாடுவது, மேற்கொள்வது, நிர்வாகம், நிர்வாக அலுவல், அனுபவிப்பு, இலவசமாகவோ அல்லது கணிசமான தொகைக்குக் கொடுத்துவிடுவதோ, கணவன் மனைவி இருவருக்கும் ஒரே மாதிரியான உரிமைகள்

ஐ. ஒரு குழந்தையின் திருமணம் அல்லது நிச்சயதார்த்தம் சட்டப்படி செல்லாது என்பதுடன் அதிகாரப்பூர்வமாகத் திருமணங்கள் பதிவு செய்யப்பட்டு, திருமணத்திற்கான குறைந்தபட்ச வயது வந்து விட்டதா என்பதையும் குறிப்பிட வேண்டும்.

### கருத்துரை

தனிப்பட்ட மனிதர்களுக்கிடையிலான திருமணம் மற்றும் குடும்ப வாழ்க்கையில் பெண்களுக்கு எதிராக உள்ளப் பாகுபாடு குறித்து 16-வது விதி கூறுகிறது, இதுபோன்றவற்றில்தான் ஆண்களைவிட பெண்களின் நிலை மிகவும் தாழ்வாகத் தெரிவதால் இது அமைந்துள்ளது. பாகுபாடுகாட்டும் சட்டங்களை பல நாடுகள் கொண்டிருக்கும் அதே வேளையில், அதில் சட்டப்பூர்வ சமத்துவத்தைக் காட்டும் நாடுகளில் கூட ஆண்கள் செய்ய முன்வராத பணிகளில் பெண்கள் ஈடுபடுவதால் அவர்கள் தாழ்ந்தவர்களாகவே கருதப்படுகின்றனர். இன்னென்ன வேலைகளைத்தான் பெண்கள் செய்யலாம் எனும் வகையில் பாரம்பரியம், பழக்கவழக்கங்கள் மற்றும் மதங்களின் அணுகுமுறைகாரணமாக திருமணத்திலும் குடும்ப வாழ்விலும் பெண்களின் சமத்துவமற்ற நிலை இருந்துவருகிறது. இந்த அணுகுமுறைகள் ஆழமாக வேறூன்றியும் மாற்றத்திற்கு ஆட்படாமலும் உள்ளன. உண்மையில், பல

நாடுகள் இந்த 16வது விதிக்கு ஆட்சேபங்களைத் தெரிவித்ததுடன், இதன்படி இவ்விஷயத்தைப் பொறுத்தவரை பாகுபாட்டை நீக்க அவர்கள் தயாராக இல்லை என்றும் பிரகடனப்படுத்தினார்கள்.

16-வது விதியின் அர்த்தம் மற்றும் இது உருவாக்கும் அவசியங்களின் நோக்கங்கள் ‘‘சிடா’’வின் 21-வது பொதுப்பரிந்துரையான ‘‘திருமணத்திலும் குடும்ப வாழ்விலும் சமத்துவம்’’ என்பதில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. எந்த வடிவத்திலும் குடும்பம் அமைந்தாலும் குடும்பக் கோட்பாடும் வடிவமும் பெரிய அளவில் வேறுபட்டுள்ளன என்பதை ‘‘சிடா’’ ஒப்புக் கொள்கிறது. குடும்பத்தினுள் பெண்கள் மீதான அணுகுமுறையானது சட்டத்திலும் சரி நடைமுறையிலும் சரி அவை உடன்படிக்கையின் 2-வது விதியில் கூறப்பட்டுள்ளபடி அனைத்து மக்களுக்கும் நீதி மற்றும் சமத்துவக் கோட்பாடுகளை ஒட்டியே இருக்கவேண்டும்.

‘‘சிடா’’ விளக்கியுள்ளபடி 16-வது விதி திணித்திருக்கும் கடமைகளின் நோக்கம் முழுமையானது. பலதார திருமணத்தை தடுத்து நிறுத்தும் நடவடிக்கைகளை எடுக்கவும். தடை செய்யவும் உறுப்பு நாடுகள் கடமைப்பட்டு இருப்பதுடன், வலுக்கட்டாயமாகத் திருமணம் செய்துவைக்கப்பட்டாலோ அல்லது அதுபோன்று கணவர் மறுமணம் செய்து கொள்ளும் பட்சத்திலோ பெண்கள் பந்தத்தை உதறிவிடும். விரும்பினால் மறுமணம் செய்து கொள்ளவும், உரிமை வழங்கப்பட வேண்டும். குழந்தைத் திருமணங்கள், நிச்சயதார்த்தங்கள் மீது மிகக்குறிப்பான கவனம் செலுத்தப்படுவதுடன், இவற்றுக்குச் சட்ட அங்கிகாரத்தையும் அரசுகள் அளிக்கக் கூடாது. திருமணத்திற்கான குறைந்தபட்ச வயதை ஆண், பெண் இருபாலருக்கும் 18 என ‘‘சிடா’’ கூறுகிறது. சட்டமாக்கி அதை நடைமுறைப்படுத்துவதுடன், திருமணப்பதிவைக் கட்டாயமாக்கவும் வேண்டும். திருமணத்தின்போதும் விவாகரத்து அல்லது இறப்பால் ஏற்படும் பிரிவின் போதும் ஆண்களைப் போன்றே பெண்களுக்கும் உரிமைகள், பொறுப்புகள் உள்ளதை அரசுகள் உறுதிப்படுத்த வேண்டும். திருமணத்தின் மூலமாக அல்லது இதற்கு மாறானமுறையில் பிறந்த குழந்தைகளின் பெற்றோர்களுக்குச் சம அங்கீகாரம் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும். இதன்படி, குழந்தைகள் மீதான எல்லாவித சட்டப்பூர்வ உரிமைகளையும் ஆண்களைப் போன்றே பெண்களும் அனுபவிக்க உரிமை உண்டு.

திருமணத்தின் போது பெண்ணும் ஆணும் சமநிலை படைத்தவர்கள் என்பதை எற்படுத்தியுள்ள 16-வது விதியானது குழந்தைப்பேறு பற்றி முடிவு செய்வதிலும் இதற்கான வழிமுறைகளைக் செயல்படுத்துவதிலும் இருவருக்கும் உள்ள சமஉரிமைகளையும் உள்ளடக்கியுள்ளது. வலுக்கட்டாயமாக கர்ப்பிணி ஆக்குவது கருக்கலைப்புகள், அறுவைச் சிகிச்சை மூலம் குடும்பக்கட்டுப்பாடு செய்து கொள்வது போன்ற நிர்ப்பந்த நடைமுறைகள் இவ்விதியில் விலக்கப்பட்டுள்ளன. ஆனால், அதே சமயம் விருப்பத்தை முன்கூட்டியே தெரிவிக்கும் வகையில் சூழ்நிலையை அரசுகள் உருவாக்கிட வேண்டும் எனக்கூறுகிறது. வீட்டுக்குள் நடக்கும் வன்முறைபற்றி 16வது விதியில் தெள்ளத்தெளிவாகக் கூறப்படவில்லை. ஆனால், இவ்விதியில் கூறப்பட்டு இருப்பவைபற்றியும் பெண்களுக்கு எதிரான வன்முறை பற்றியும் ‘‘சிடா’’ வின் 19-வது பொதுப்பிரிந்துரையில் அலசப்பட்டுள்ளது. பெண்களுக்கு எதிரான வன்முறைகளிலேயே குடும்பங்களில் நடக்கும் வன்முறைதான் மிகவும் வஞ்சகமானது எனக்

குறிப்பிடும் ''சிடா'' உருக்குலைப்பது, வன்புணர்ச்சி மற்றும் மன அளவிலான வன்முறை உட்பட பலவடிவங்களில் இது நடப்பதாகச் கூறுகிறது. குடும்ப வன்முறையை ஒழிப்பதற்காகக் குறிப்பிடத்தக்க பாதுகாப்புச் சட்டங்களை ஏற்படுத்துவதுடன் பாலின வேறுபாடு, வன்முறை, பெண்களுக்கான ஆதரவு பற்றி நீதித்துறை மற்றும் சட்ட அமலாக்க அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும் என்றும் கூறுகிறது.

## பொறுப்புடமையும் செயல்படுத்தலும்:

<u>கேட்கப்படும் கேள்விகள்</u>

1. *குடும்ப உறவுகள் குடிமைச் சட்டம், மதச் சட்டங்கள், பாரம்பரியச் சட்டங்கள், அல்லது இவை அனைத்தினாலும் ஆளப்படுகிறதா? இச்சட்டங்களின் கீழ் ஆண்களைப்போல் பெண்களும் சமமாக நடத்தப்படுகிறார்களா?*

2. *குடிமை, மத, பாரம்பரியச் சட்டங்களின் கீழ் என்னவகைப்பட்ட அல்லது வடிவத்திலான குடும்பம் இருக்கிறது? அவர்கள் திருமணம் செய்து கொள்கிறார்களா அல்லது ஒன்றிணைந்து வாழ்கிறார்களா, பங்குதாரர் போன்ற அல்லது சட்டப்பூர்வத் திருமணமின்றி கணவன் மனைவியாக பிற வகைகளில் சேர்ந்து இருக்கிறார்களா? அவற்றை அரசு அங்கிகரிக்கிறதா?*

3. *துணையைத் தேர்வு செய்வதில் ஆண்களுக்குரிய உரிமை பெண்களுக்கு உண்டா? எல்லா திருமணங்களும் பெண்ணின் முழுமையான, சுதந்திரமான ஒப்புதலுடன் தான் நடக்க வேண்டுமென அரசாங்கம் கூறுகிறதா? எந்த வழிகளில்?*

4. *திருமணத்தின்போது பெண்களுக்கும் ஆண்களுக்கும் ஒரே மாதிரியான உரிமைகளும் பொறுப்புகளும் உள்ளனவா? இல்லையெனில் சட்டப்படி, நடைமுறையில் மற்றும் பாரம்பரியச் சட்டப்படி இவை எவ்வாறு வேறுபாடுகின்றன?*

5. *திருமணமான ஆண், வைப்பாட்டிகளை வைத்துக்கொள்ள சட்டம் அனுமதிக்கிறது என்றால் எந்த சட்டம்? மொத்தத் திருமணங்களில் மேற்கண்ட வகைப்பட்ட முறையற்ற திருமணங்கள் எத்தனை சதவீதம்?*

6. *முறையான திருமணத்திற்கு அப்பாற்பட்டு நடைபெறும் இத்திருமணங்களில் மனைவியிடம் கணவரின் உரிமைகள் பொறுப்புகள் என்ன? கணவனிடம் மனைவியின் உரிமைகள் பொறுப்புகள் என்ன?*

7. *சட்டப்பூர்வத் திருமணம் செய்து கொள்ளாமல் சேர்ந்து வாழும் தம்பதியரில் ஆண்களின் உரிமைகள், பொறுப்புகள், பெண்களின் உரிமைகள், பொறுப்புகள் என்ன? குழந்தைகளிடம் இவர்களுக்குள்ள உரிமைகள், பொறுப்புகள் என்ன?*

8. *செய்தொழில், வேலைவாய்ப்பைத் தேடிக்கொள்வதில் ஆண்களுக்குரிய உரிமைகள் பெண்களுக்கும் உள்ளதா? இந்த உரிமைகள் திருமணத்தால் பாதிக்கப்படுகிறதா? ஆமெனில் அவர்களுக்கு இந்த உரிமைகள் பற்றித் தெரியுமா? இந்த உரிமைகளை அவர்கள் பயன்படுத்துகிறார்களா?*

9. சொத்தில் உரிமைகொண்டாடவும், வாங்கவும், நிர்வகிக்கவும், கொடுத்துவிடவும் ஆண்களுக்குள்ள அதே உரிமைகள் பெண்களுக்கும் உள்ளதா? கணவர் திவாலானவராக அறிவிக்கப்பட்டால் மனைவியின் உரிமைகள் பாதிக்கப்படுகிறதா?

10. திருமணத்தின்போது வாங்கப்படும் சொத்தை நிர்வகிப்பதிலும், விற்பதிலும் ஆண்களுக்குரிய அதிகாரம் பெண்களுக்கும் உள்ளதா? சொத்தை விற்பதில் கணவன் மனைவி இருவரின் சம்மதமும் தேவைப்படுகிறதா?

11. ஒரேமாதிரியான காரணங்களால் இருபாலரும் விவகாரத்து செய்ய இயலுமா? தம்பதியரில் ஒருவர் ஓடிப்போய்விட்டால் அது விவாகரத்து ஆகிவிடும் என்பது சட்டத்தில் அல்லது நடைமுறையில் உள்ளதா? விவாகரத்துக்கள் பதிவு செய்யப்படுகிறதா?

12. திருமணபந்தம் முடிந்து விட்டால் சொத்துகளில் மனைவிக்குள்ள உரிமைகள் என்ன? இதுபோன்ற சமயத்தில், கணவனுக்குள்ள உரிமைகள் மனைவிக்கும் உண்டா?

13. விவாகரத்து பெற்ற கணவன் அல்லது மனைவிக்கு ஜீவனாம்சம் தரவைக்க என்ன சட்ட வழிமுறைகள் உள்ளன? இதில் கணவருக்கு இருக்கும் உரிமைகள் மனைவிக்கும் உண்டா? இருந்தால், இவ்வுரிமைகள் அமலாக்கப்படுகிறதா?

14. விவாகாரத்துக்குப்பின் சொத்துக்கள் எப்படிப் பிரிக்கப்படுகின்றன? வீட்டில் மனைவி செய்த வேலைகள் மற்றும் வேளாண்துறையில் கூலி இல்லாமல் செய்த வேலைகள் இந்த சொத்துக்களின் வளர்ச்சிக்குப் பங்களிப்பு அளித்ததாகக் கணக்கில் கொள்ளப்படுகிறதா? விவாகரத்தின்போது பாகப்பிரிவினையில் இப்பணிகள் பிரதிபலிக்கிறதா?

15. சட்டப்பூர்வமாகத் திருமணம் செய்து கொள்ளாமல் சேர்ந்து வாழும் தம்பதியரின் சொத்துரிமைகள் எப்படி உள்ளன? இருவரும் பிரிந்து விட்டால் எப்படி பிரிக்கப்படும்? இப்படிப்பட்ட தம்பதியர் சேர்ந்து வாழும் போதும், பிரிந்து விடும் போதும் ஜீவனாம்ச உரிமைகள் இவர்களுக்கு உள்ளதா?

16. மனைவிகளை அல்லது மனைவிகள் போன்றே வாழ்பவர்களைத் தகாது நடத்தினால் அது தொடர்பாக உள்ள சட்டம், மற்றும் நடைமுறை என்ன?

17. குழந்தைகள் எண்ணிக்கை மற்றும் அவர்களிடையே இருக்க வேண்டிய இடைவெளி குறித்து சுதந்திரமாக முடிவு செய்யும் உரிமை பெண்களுக்கு உள்ளதா? யாரிடமும் அனுமதி பெறாமல் அல்லது தகவல் தெரிவிக்காமல் அவர்கள் குடும்பக்கட்டுப்பாடு செய்து கொள்ளமுடியுமா? கணவர்களின் ஒப்புதலைப் பெறாமல் அல்லது அவர்களுக்குத் தகவல் கூறாமல் பெண்களுக்கு குடும்பக்கட்டுப்பாடு செய்ய இதற்கென பணியாளர்கள் முன்வருகின்றார்களா?

18. குடும்பக்கட்டுப்பாடு குறித்த தேசியக் கொள்கை உள்ளதா? இருப்பின், அது என்ன? குடும்பக்கட்டுப்பாடு குறித்த தகவல், கல்வி, சேவைகளைப் பெறும் உரிமைகளை உள்ளடக்கியதாக இது அமைந்துள்ளதா? குடும்பக்கட்டுபாடு தகவல், கல்வி சேவைகள், கிடைக்க வகைசெய்வதைத் தடுக்கும் குறிப்பிட்ட சட்டம் எதுவும் உள்ளதா?

19. *குடும்பக்கட்டுப்பாடு குறித்தத் தகவல், கல்வி, வேலைகளைப் பெறுவதில் பெண்களுக்குரிய உரிமைகளைச் சிதைக்கும் காரணிகள் எதுவும் உள்ளதா? இருப்பின், அவை எவை? இவற்றைப் போக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன?*

20. *திருமணமானாலும், ஆகாவிட்டாலும் குழந்தைகளைத் தங்கள் விருப்பப்படி வளர்த்துகொள்ள பெண்களுக்கு உரிமை உள்ளதா?*

21. *திருமணத்திற்குப் பிறகும் தனது சொந்தப் பெயரையே வைத்துக் கொள்ள பெண்களுக்கு உரிமை உள்ளதா? திருமணமான பெண்களில் எத்தனை சதவீதம் பேர் தங்கள் சொந்தப் பெயரையே வைத்திருக்கிறார்கள்? குடும்பப் பெயரையே தேர்வு செய்வது குறித்தான சட்டத்தை விளக்குக? குடும்பப்பெயர் ஒன்றைத் தேர்வு செய்து கொள்ள வேண்டும் என வலியுறுத்தும் சட்டம் இருந்தால், தனது பெயரை குடும்பப் பெயராக வைத்துக்கொள்ளக் கூறுவதற்கு ஆண்களைப் போன்றே பெண்களுக்கும் உரிமைகள் உள்ளதா? தங்கள் பெயரையே குடும்பப் பெயராக அல்லது கூடுதலாக சேர்த்துக்கொள்ள பெண்களால் முடியுமென்றால் இவ்வாறு செய்துள்ள பெண்கள் எத்தனை சதவீதம்? குழந்தைகளின் குடும்பப் பெயரைத் தேர்ந்தெடுப்பதில் பெண்களுக்கு உரிமைகள் உள்ளதா? இருந்தால் அவைபற்றி அவர்களுக்குத் தெரியுமா? அவற்றைப் பயன்படுத்துகிறார்களா?*

22. *குழந்தைகளுக்குப் பாதுகாவலராக இருப்பதில் ஆண்களைப் போன்றே பெண்களுக்கும் உரிமைகள் உள்ளதா? இந்த உரிமைகள் இருந்தால் இவை பெண்களின் திருமண நிலையால் பாதிக்கப்படுகிறதா?*

23. *இயல்பான பாதுகாவலராகக் குழந்தைகளுக்கு இருப்பது யார்? குழந்தைகளுக்குப் பாதுகாவலராக, கவனித்துக்கொள்பவராக, தத்தெடுத்துக் கொள்பவராக இருக்கும் விஷயங்களில் ஆண்களுக்குள்ள உரிமைகள் பெண்களுக்கும் உள்ளதா?*

24. *விவாகரத்தின் போது அல்லது உறவு முறிந்துவிடும்போது குழந்தைகளின் பாதுகாப்பை யார் மேற்கொள்கிறார்கள்? கணவர் மறைவுக்குப்பிறகு, பாதுகாப்பு பற்றி எழுதப்பட்டுள்ளதில் இருந்து நடைமுறை வேறுபட்டுள்ளதா?*

25. *குழந்தைகள் பராமரிப்புக்கு ஏற்படும் செலவுகளுக்கு அவர்களது தந்தைகள் பணம் தரவேண்டும் என இருக்கிறதா? இது குறித்த ஆணை அமலாக்கப்படுகிறதா?*

26. *குழந்தைகளுக்குத் தேவையான உதவிகளை மற்ற பெற்றோரிடமிருந்து பெற்றுக் கொள்ள உரிமை உள்ளதா? இந்த உரிமை அமலில் இருக்கிறதா? எவ்வாறு?*

27. *செயற்கைக் கருத்தரிப்பு மூலம் பிறக்கும் குழந்தைகள் உள்ளிட்ட பதிலித்தாய்களுக்கு உரிய உரிமைகள் என்ன?*

28. *வயதுவந்தோர் எனக் குறிப்பிட எந்த வயது அடிப்படையாகிறது? இது சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளதா? இதில் ஆண். பெண் வேறுபாடு உண்டா?*

29. *இருபாலருக்கும் குறைந்த பட்சத் திருமண வயதை வரையறுக்கும் சட்டப்பிரிவுகள் உள்ளதா? அவை எவ்வாறு அமலாக்கப்படுகின்றன? திருமணம் செய்து கொள்ள குறைந்தபட்ச வயது*

என்ன? இருபாலருக்கும் ஒரே வயதுதானா? இக்குறைந்தபட்ச வயதில் விதிவிலக்குகள் உள்ளதா? இந்த விதிவிலக்குகள் எந்தெந்த அடிப்படையில் அளிக்கப்படுகிறது? ஆண்களுக்கான குறைந்தபட்ச திருமண வயது என்ன? பெண்களின் குறைந்தபட்சத் திருமண வயது என்ன?

30. குறிப்பிட்டச் சில மக்கள் குழுக்கள் மற்றும் குறிப்பிட்ட பகுதிகளில் குழந்தைத் திருமணம் செய்யும் பழக்கம் உள்ளதா? இதற்கு சட்ட அங்கிகாரம் கிடைக்கிறதா? கிடைத்தால் இதுபோன்ற திருமணம் பெண்களின் விருப்பத்தை எந்த அளவுக்குப் பாதிக்கிறது?

31. குழந்தைகளுக்கு நிச்சயதார்த்தம் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளதா? குழந்தைத் திருமணம் அல்லது நிச்சயதார்த்தை ஏற்றுக் கொள்ளும் பழக்கம் நாட்டில் இருந்தால் இதைத் தடுப்பதற்கான சட்டம் உள்ளதா? இச்சட்டம் இந்த பழக்கத்தை பாதித்திருக்கிறதா?

32. உடலுறவு கொள்வதற்கான குறைந்தபட்ச வயதை நிர்ணயிக்கும் சட்டப்பிரிவு உள்ளதா? இதில் ஆண் பெண் வேறுபாடு உள்ளதா? நிர்ணய வயதிற்குட்பட்டவர்கள் உடலுறவு கொள்வது குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரியதா? இக்குறைந்தபட்ச வயதும், திருமணத்திற்கான குறைந்தபட்ச வயதும் ஒரே மாதிரியாக உள்ளதா?

33. திருமணங்கள், விவாகரத்துகள், சட்டப்படி பதிவு செய்யப்பட வேண்டுமா? திருமணங்களைப் பதிவு செய்வதற்கான நடைமுறைகள் உள்ளதா? இருந்தால் அவை எவை? நடைமுறையில் உள்ளதா?

34. திருமணம் செய்து கொள்வதற்கான குறைந்தபட்ச வயது, ஒப்புதல் பெறப்பட வேண்டியது மற்றும் பதிவு சட்டங்களைப் பற்றியத் தகவல்கள் பரவலாக அறியப்பட்டுள்ளதா?

35. மணமகனுக்கான விலை அல்லது வரதட்சணை கொடுப்பது சட்டப்படியானதா அல்லது பழக்கவழக்கமா? அவ்வாறு இருப்பின், திருமணங்களில் இது எந்த அளவுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகிறது? உறுப்பு நாடுகளில் இரட்டை அல்லது பலவகைச் சட்ட அமைப்புகள் இருந்தால் வரதட்சணை அல்லது மணமகளுக்கான விலை குறித்து சட்டம் மற்றும் அதன் விளக்கத்தின் அல்லது பாரம்பரிய மதச் சட்டங்களின் நிலை என்ன? வரதட்சணை அல்லது மகனுக்கான விலை பெண்கள் சமத்துவத்தை பாதிக்கிறதா? வரதட்சணை மணமகள் விலை பழக்கத்தை ஒழுங்குபடுத்தும் சட்டங்கள் இயற்றப்பட்டு அவை அமலாக்கப்படுகிறதா? இச்சட்டங்களால் ஏற்பட்டுள்ள விளைவுகள் என்ன?

36. வாரிசுரிமை குறித்துள்ள விதிகள் என்ன? அவை பெண்களுக்குப் பயனுள்ளவையா? இருப்பின், அவற்றை பெண்கள் பயன்படுத்திக் கொள்கிறார்களா?

37. சட்டப்பூர்வமாகவும், நடைமுறையிலும் விதவைகளுக்குரிய உரிமைகள் கடமைகள் என்ன? மரணத்திற்குப்பின் தனியே வாழும் ஆண்களுக்குரிய உரிமைகளும் கடமைகளும் விதவைகளுக்கு உள்ளதா? கணவன் இறந்தபின் மனைவி ஏதேனும் சடங்கு அல்லது தூய்மையாக்கல் சம்பிரதாயத்திற்கு உட்பட வேண்டியுள்ளதா? அவ்வாறு இருந்தால் அவை மனைவி இறந்தபின் கணவனுக்கும் பொருந்துமா? சமுதாயத்தில் விதவைகளின் நிலை

*என்ன? மனைவியை இழந்தவர்களின் நிலையும் விதவைகளின் நிலையும் ஒரேமாதிரிதான் உள்ளதா?*

38. *உயில் எதுவும் எழுதப்படாதிருந்தால் விதவைகள் மற்றும் தகப்பனை இழந்த மகள்கள் நிலம், பிற சொத்துக்களுக்கு சட்டப்படி வாரிசுகளாக முடியுமா? இந்த உரிமை இருந்தால் அது, மனைவியை இழந்த கணவர்கள் மற்றும் மகன்களுக்கு இருப்பதைப் போல்தான் உள்ளதா? உயிலின்படி சொத்தைப்பெற்றுக் கொள்ள விதவை அல்லது மகளால் முடியுமா? முடியுமெனில் மனைவியை இழந்த கணவன், மகன்களுக்கு இருக்கும் அதே வீதத்தில் உரிமைப்படி பெற்றுக் கொள்வதில் சட்ட அல்லது பாரம்பரிய தடங்கல்கள் உள்ளனவா?*

39. *கணவனை இழந்தபின் மனைவியானவள் அவள் கணவனின் சகோதரனை மணந்து கொள்ளவேண்டுமென்ற பழக்கம் நாட்டில் உள்ள எந்த மக்கள் குழுவினரிடமாவது இருக்கிறதா?*

40. *பெண்களே தலைவர்களாக இருக்கும் குடும்பங்கள் எத்தனை சதவீதம்? எத்தனை சதவீத ஏழைக்குடும்பங்களில் பெண்கள் தலைவர்களாக உள்ளனர்?*

## விதி - 17 : பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை ஒழிப்பதற்கான குழு

1. பெண்களுக்கு எதிரான அனைத்து வகை பாகுபாடுகளையும் நீக்குவதற்காக இந்த உடன்படிக்கை நடைமுறைக்கு வந்த சமயத்தில் 18 உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுவையும், 35 உறுப்பு நாடுகள் உறுதி அல்லது இணக்கம் அளித்த பின் 23 உறுப்பினர்களையும் கொண்டிருக்கும். “உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ளவற்றிற்கு ஏற்ப இத்துறையில் உயரிய பண்பாடும் நிபுணத்துவம் மிக்கவர்களாக இந்த 23 உறுப்பினர்கள் இருப்பார்கள். இவர்கள் பூகோள ரீதியில் சம அளவில் பிரதிநிதித்துவம் கிடைப்பதாகவும், வெவ்வேறு நாகரீகம் மற்றும் பிரதான சட்ட அமைப்புகளைப் பிரதிபலிப்பவர்களாகவும் இருக்கின்றனர்.

2. ஒவ்வொரு நாட்டின் சார்பிலும் ஒருவர் முன்மொழியப்பட்டு இவர்களில் இரகசிய வாக்கெடுப்பு மூலம் 23 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு இக்குழுவில் (சிடா) உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளனர்.

3. முதல் தேர்தலானது, இந்த உடன்படிக்கை அமுல்படுத்தப்பட்ட நாளிலிருந்து ஆறு மாதங்கள் கழித்து நடைபெறும். தேர்தலுக்கு 3 மாதங்களுக்கு முன்பே ஐக்கிய நாடுகள் சபையின் பொது செயலாளர் (Secretary General) உறுப்பு நாடுகளுக்கு அவர்களின் முன் மொழிதலை இரண்டு மாதங்களுக்கு அனுப்பி வைக்கும்படி கடிதம் மூலம் அழைப்பு விடுப்பார். இவ்வாறு முன்மொழியப்பட்ட நபர்களின் பட்டியலையும் முன்மொழிந்த ஒப்பந்தகார நாடுகளையும் குறிப்பிட்டு அனைத்து உறுப்பு நாடுகளுக்கும் பொதுச்செயலாளர் அனுப்புவார்.

4. ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் நடக்கும் உறுப்பு நாடுகளின் கூட்டத்தில், இந்த தேர்தல் நடைபெறும் இக்கூட்டத்தில் உறுப்புநாடுகள் மூன்றில் இரண்டு பங்கு கலந்து கொண்டு வாக்களிக்க வேண்டும். கூட்டத்தில் கலந்துகொண்டு வாக்களித்த உறுப்பு நாடுகளின்

பிரதிநிதிகளில் அதிக எண்ணிக்கையுடன் அறுதிப் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்ற, முன்மொழியப்பட்ட பிரதிநிதிகள் குழுவிற்கு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

5. நான்கு ஆண்டு பதவி காலத்திற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர், இருப்பினும் இவர்களில் ஒன்பது உறுப்பினர்களின் பதவிகாலம் இரண்டு ஆண்டுகளின் இறுதியில் முடிவடைந்து விடும். முதல் தேர்தல் முடிந்த உடனேயே இந்த ஒன்பது உறுப்பினர்களின் பெயர்கள் குழு தலைவரால் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படும்.

6. 35 உறுப்பு நாடுகள் இணக்கம் அளித்த பின், கூடுதல் ஐந்து உறுப்பினர்களுக்கான தேர்தல் இந்த விதியில் மேற் கூறியவற்றின் அடிப்படையில் நடைபெறும். இந்த கூடுதல் உறுப்பினர்களில் இருவரின் பதவி காலம் இரண்டு ஆண்டுகளின் இறுதியில் முடிவடையும். இந்த இரு உறுப்பினர்களின் பெயர்கள் குழுத்தலைவரால் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படும்.

7. சாதாரணமாக எழும் காலியிடங்களை பூர்த்தி செய்யும் போது எந்த உறுப்பு நாட்டின் பிரதிநிதி, உறுப்பினர் பதவியிலிருந்து விலகியிருக்கிறாரோ, அந்த நாடு, ஐக்கியநாடுகள் குழுவின் ஒப்புதலின் பேரில், தனது தேசத்தினரிடமிருந்து மீண்டும் ஒருவரை நியமனம் செய்யலாம்.

8. ஐக்கிய நாடுகள் சபையின் நிதி ஆதாரத்திலிருந்து, பொதுக் குழுவின் விதிகளுக்கும், நெறிமுறைகளுக்கும் மற்றும் ஒப்புதலுக்கும் உட்பட்டு ஊதியம் பெறுவர்.

9. ஐக்கிய நாடுகள் சபையின் பொது செயலாளர் அவர்கள் இந்த குழு சிறப்பாக ஊக்கத்துடன் செயல்படத் தேவையான பணியாளர்கள் மற்றும் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பர்.

# விதி - 18 : அறிக்கை அனுப்பும் கடமை

உடன்படிக்கையைத் தேசிய அளவில் அரசுகள் நடைமுறைப்படுத்த வைப்பதுடன் இதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் மற்றும் இதில் ஏதேனும் சிரமங்கள் ஏற்பட்டால் அவை பற்றியும் அறிக்கை தயாரித்து அனுப்புவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

1. ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலரிடம் அளிக்கப்படும் இந்த அறிக்கைகளை ‘‘சிடா’’ வின் பரிசீலனைக்காக அவர் அனுப்பி வைப்பார்.

2. உடன்படிக்கையில் கையொப்பமிட்ட அல்லது ஒப்புக்கொண்டு ஓராண்டு காலத்திற்குள் உடன்படிக்கை விதிகளை நடைமுறைப்படுத்த மேற்கொண்ட சட்டமன்ற, நீதிமன்ற மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் பற்றியும் அதில் சந்தித்தத் தடங்கல்கள் மற்றும் சிரமங்கள் பற்றியும் உறுப்பு நாடுகள் அறிக்கை தயாரித்து அனுப்புவதை கட்டாயமாக்குகிறது.

3. இதன் பிறகு நான்காண்டுகளுக்கு ஒரு முறை என்ற வீதத்தில் அல்லது ‘‘சிடா’’ கேட்டுக்கொள்ளும் போதெல்லாம் அவை இது போன்ற அறிக்கைகளை அனுப்பி வைக்கவும் வேண்டும்.

## விதி - 19 : குழுவின் செயல்பாடு

1. குறிப்பிட்ட சூழ்நிலைகளில் உடன்படிக்கை விதிகளை நடைமுறைப்படுத்துவது பற்றித்தெளிவான வழிகாட்டு விதிமுறைகளை கூறுகிறது.
2. இக்குழு தனது பொறுப்பாளர்களை இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்க வேண்டும்.

## விதி - 20 : “சிடா” குழு கூட்டம்

1. உடன்படிக்கையின் 18-வது விதியின்படி நாடுகள் அனுப்பி வைக்கும் அறிக்கைகளைப் பரிசீலிக்க ஆண்டு தோறும் இருவாரங்களுக்கு மேற்படாமல் ஓர் அமர்வில் ‘‘சிடா’’ குழுவினர் கூடி விவாதிக்க வழி கோலுகிறது.
2. ஒப்புக்கொண்ட உடன்படிக்கை நாடுகளின் கூட்டம், ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் அல்லது குழு தீர்மானிக்கும் வசதியான வேறு இடத்திலும் நடக்கும்.

## விதி - 21 : அறிக்கை தயாரிப்பு

உடன்படிக்கை நிறைவேற்றம் பற்றி ‘‘சிடா’’வும் நாடுகளும் முழுமையாக அறிந்து கொள்ள உதவும் வகையில் அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன. வெறும் சட்ட நடவடிக்கைகளை மட்டுமே இவை கொண்டிராமல், இவற்றால் அரசியல், பொருளாதார, சமுதாய நடப்புகளிலும், பொதுவான நிலவரங்களிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் என்னென்ன என்பதையும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக்குழுவிற்கு சமர்பிக்க வேண்டும் என ‘‘சிடா’’ வலியுறுத்துகிறது. உறுப்பு நாடுகளிடமிருந்து ஏதாவது கருத்துகள் பெறப்பட்டிருந்தால் அந்த ஆலோசனைகளை பொதுவான பரிந்துரையுடன் குழு அறிக்கையில் இணைத்துக்கொள்ள வேண்டும்.

அரசியல், சமூக, பொருளாதார, கலாச்சார வாழ்வில் ஆண்களுக்குச் சரிநிகராகப் பெண்களும் பங்கேற்க தங்கள் நாடுகளில் உள்ள தடைகள் எவை என்பதையும் இவ்வறிக்கைகள் கொண்டிருப்பது அவசியமாகும். இந்த குழு அறிக்கைகளை, தகவலுக்காக பெண்கள் நிலை ஆணையத்திற்கு பொதுச் செயலாளர் அனுப்ப வேண்டும்.

## விதி : 22

உடன்படிக்கையின் உள்ளடக்கங்களை நிறைவேற்றுவது பற்றி ஆய்வு செய்யும் போது அரசுசாரா நிறுவனங்களிடம் இருந்து தகவல்களை பெறுவதில் ‘‘சிடா’’ ஆர்வங்காட்டுவதுடன், அறிக்கை தயாரிப்பதில் அவர்கள் ஈடுபடவும் ஊக்குவிக்கிறது. இதனால் அரசாங்கங்களுக்கும், மக்களுக்குமிடையே கலந்துரையாடல் நடைபெற உதவுவதுடன், உடன்படிக்கை விதிகளைத் தடங்கலின்றிச் செயல்படுத்தவும் முடியும் என ‘‘சிடா’’ ஒப்பந்தம் கருதுகிறது.

## விதி : 23

ஆண் பெண் சமத்துவத்தை எட்டக்கூடிய வகையில் இருக்கும் எந்த ஒரு நாட்டின் அல்லது சர்வதேச விதிகளைப் பாதிக்கும் அளவில் இந்த உடன்படிக்கையின் விதிகள் அமையாது என்பதை உறுதிபடுத்துகிறது.

## விதி : 24

உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ளவற்றை முழுமையாக நிறைவேற்றுவதற்காக தேசிய அளவில் எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவும் வழிவகை செய்கிறது.

## விதி : 25

1. இந்த உடன்படிக்கையில் அனைத்து நாடுகளும் கையொப்பமிட வேண்டும்
2. ஐக்கிய நாடுகள் சபையின் பொது செயலாளர், இந்த உடன்படிக்கையின் காப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.
3. இந்த உடன்படிக்கையானது உறுதிபடுத்தலுக்கு உட்பட்டது. உறுதிபடுத்தலுக்கான ஆவணங்களை, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.
4. இந்த உடன்படிக்கைக்கு அனைத்து நாடுகளும் இணங்க வைக்கப்பட வேண்டும் அப்போது தான் உடன்படிக்கை நடைமுறைக்கு வரும்.

## விதி : 26

இந்த உடன்படிக்கையை ஏற்றுக்கொண்ட உறுப்பு நாடுகள் ஏதேனும் ஆட்சேபணைகளை தெரிவித்திருந்தால் அந்த ஆட்சேபணைகளை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளருக்கு எழுத்தின் மூலம் அனுப்பலாம். ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமானால், அது பற்றி ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக்குழு முடிவு எடுக்கும். பின்னர் பொதுச் செயலாளர் அதனை மற்ற நாடுகளுக்கு அனுப்பி வைப்பார்.

## விதி : 27

ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளரிடம் உறுப்பு நாடுகள் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டதற்கான ஆவணத்தை சமர்பித்த முப்பதாவது நாளிலிருந்து இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும்.

## விதி : 28

1. உடன்படிக்கையை ஏற்று, கையொப்பமிட்டுள்ள நாடுகள் இவ்வுடன்படிக்கையின் ஒரு பகுதியை அல்லது சில பகுதிகளை ஆட்சேபித்தால், அவற்றை ஏற்றுக்கொள்ள, மறுக்க நாடுகளுக்கு உடன்படிக்கையின் இந்த விதி அனுமதிக்கிறது.

2. ஆனால் உடன்படிக்கையின் நோக்கங்களுடன் இணக்கமாக இல்லாமல் முரண்படுவதாக உள்ள எந்த ஆட்சேபத்தையும் இந்த விதி தடுத்துவிடுகிறது.

3. உறுப்பு நாடுகள் எந்த நேரத்திலும் தங்களின் ஏற்புடையின்மையை விலக்கிக் கொள்ளலாம். அதற்கான அறிவிப்பை ஐக்கிய நாடுகள் சபை பொது செயலாளருக்கு அனுப்ப வேண்டும். அவர் அதை மற்றனைத்து நாடுகளுக்கு அறிவிப்பார். இந்த அறிவிப்பு பொதுச் செயலாளருக்கு கிடைக்கப் பெற்ற நாளிலிருந்து அமுலுக்கு வரும்.

## விதி : 29

1. உடன்படிக்கையை விளக்கிக் கொள்வதில் நாடுகளிடையே ஏற்படும் தகராறுகளை சர்வதேச நீதிமன்றத்தில் முறையிட இந்த விதி வழிவகை செய்கிறது.

2. ஒவ்வொரு உறுப்பு நாடுகளும், இந்த உடன்படிக்கையை உறுதி செய்து அல்லது கையெழுத்திடும் போது இந்த விதியின் முதல் பத்தி, தங்களை கட்டுப்படுத்தாது எனத் தெரிவிக்கலாம். எந்த உறுப்பு நாடும் அப்படிப்பட்ட ஆட்சேபணை கொண்டிருந்தாலும், அதனை மதித்து மற்ற உறுப்பு நாடுகள் அந்த பத்தியில் உள்ள விதியினால் கட்டுப்படுத்த மாட்டார்கள்.

3. இந்த விதியின் 2-வது பத்திக்கு ஒத்துப் போவதிலிருந்து ஆட்சேபணை கொண்டிருந்த எந்த உறுப்பு நாடும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளருக்கு அறிவிப்பு அனுப்புவதன் மூலம் எந்த நேரத்திலும் அந்த ஆட்சேபணையிலிருந்து விலகிக் கொள்ளலாம்.

## விதி : 30

இந்த உடன்படிக்கையின் முழு வடிவம் அரேபிய, சீன, ஆங்கில, பிரெஞ்சு, ரஷ்ய மற்றும் ஸ்பானிஷ் மொழிகளில் நியூயார்க்கில் இருக்கும் ஐக்கிய நாட்டு சபையின் பொது மேலாளரிடம் இருக்கும்.

***நன்றி***

***CDaWS, சென்னை, IWID, சென்னை.***

## Main Features of the Women's Convention

## - CEDAW

- The  Convention is the most comprehensive bill of rights for women in existence.
- It obligates the State to protect women from discrimination and to be accountable for violations of women's human rights.
- It is based on a principle of equality between women and men.  Hence it extends the coverage of human rights to women.
- It mandates rights for women through the legislative process.  This means that there is a clear avenue for drawing accountability for the guarantee of these rights.
- It recognizes that despite legal rights being granted for women in many countries, discrimination persists, and women's access to legal rights are curtailed by denial of women's rights to economic and social development.  Hence it recognizes the importance of both *de facto* and *de jure* rights for women.
- It recognizes that inequality between women and men is socially constructed and hence recognizes the fact of discrimination against women.  In this regard it recognizes not only current discrimination but also past discrimination and introduces the concept of corrective measures to overcome the effect of past discrimination that leaves women disadvantaged vis – a vis men.
- It bridges traditional division between civil and political rights and social and economic rights and makes a strong case for the indivisibility of these rights.
- It addresses the need to tackle power relationships between men and women at all levels, from family to community, market and state.  In particular it discards divisions between the private and the public spheres, by recognizing violations of women in the "private sphere" i.e. within the home.
- Specifically addresses the role of culture and sex stereotyping and attitudes in shaping discrimination against women.